விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபத்துநான்கு — Valampurii

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 ஐப்பசி 19 வெள்ளிக்கிழமை (05.11.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 321

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

## மாநகர சபையினால் அனுமதி மறுப்பு

(யாழ்ப்பாணம்)

இராணுவத்தினரின் தீபாவளி கலை நிகழ்வுகளை யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் நடத்துவதற்கு யாழ்ப் (24ஆம் பக்கம் பார்க்க)

## நாளை முதல்...

**குருபெயர்ச்சி பலன்கள்**

**சிவல்புரி சிங்காரம் எழுதும்**

21.11.2010 முதல் 07.05.2011 வரையான குருபெயர்ச்சிப் பலன்கள்

**வலம்புரியில்..**

## இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்




வாசகர்கள், விளம்பரதாரர்கள், முகவர்கள்,அன்பர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எம் இதயம்கனிந்த தீபத்திருநாள் நல் வாழ்த்துக்கள்.

**வலம்புரி குடும்பம்**

## தனிப்பட்ட இனத்துக்கென நாடு பிரிக்கப்படவில்லை

### அமைச்சர் ஹெகலிய தெரிவிப்பு



(கொழும்பு)

பயங்கரவாத நடவடிக்கையிலிருந்து மீட்கப்பட்ட இந்த நாடு தற்போது ஐக்கியப்படுத்தப்பட்டுள்ளது. இந் நிலையில் இந்த நாட்டின் அனைத்து பிரதேசங்களும் அனைத்து இன மக்களுக்கும் சொந்தமானதாகும்.

தனிப்பட்ட இனத்தவருக்கென்று எந்தவொரு பிரதேசமும் ஒதுக்கப்படவில்லை என்று ஊடகத்துறை அமைச்சரும் அமைச்சரவையின் பேச்சாளருமான ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

அத்துடன் நாட்டின் வெற்று நிலங்கள் காணப்படும் பிரதேசங்களிலேயே குடியேற்றங்களை மேற்கொள்ள முடியும். அந்தவகையிலேயே வடக்குக் கிழக்கில் அதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுத்துள்ளது. இது ஒரு பயங்கரமான நிலைமை எனக் கூறுவதில் அர்த்தமில்லை என்றும் அமைச்சர் கூறினார்.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாடு நேற்று வியாழக்கிழமை முற்பகல் ஊடகத்துறை அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. வடக்குக் கிழக்கில் அரசாங்கத்தின் ஆதரவுடன் புதுவித குடியேற்றங்கள் மேற்கொள்ளப்படுவதாக அவதானிக்கப்படுகிறது.

இது ஒரு அபாயகரமான நிலைமை என்றும் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை நேற்று நல்லிணக்க ஆணைக்குழுவுக்கு முன்னால் சாட்சியம் அளித்துள்ளதாகவும், உண்மையில் அரசாங்கம் அவ்வாறான குடியேற்றங்களை மேற்கொள்ள நடவடிக்கை எடுத்துள்ளதா? என்றும் ஊடகவியலாளர் ஒருவர் கேட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (24ஆம் பக்கம் பார்க்க)

# புலிகள் பொதுமக்களை கேடயமாக பயன்படுத்தினர்!

## யாழ்.அரச அதிபர் இமெல்டா சாட்சியம்



(கொழும்பு)

அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான இறுதிக் கட்ட யுத்தத்தின் போது பொதுமக்களை தமிழீழ விடுதலைப்புலிகள் மனித கேடயங்களாக பயன்படுத்தியதாக யாழ். மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார். ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு முன்னிலையில் நேற்று சாட்சியம் அளிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார். (24ஆம் பக்கம் பார்க்க)

## பொன்சேகாவை நெருங்கும் மர்ம இளைஞர் குழுவினர்

(கொழும்பு)

வெள்ளைக் கொடி விவகாரம் தொடர்பான வழக்கின் விசாரணைகளுக்காக நேற்று நீதிமன்றுக்கு அழைத்துவரப்பட்ட சரத் பொன்சேகாவை மர்ம வாலிபர்கள் குழுவொன்று சூழ்ந்து கொள்ள முற்பட்டமை குறித்து பல்வேறு தரப்புக்களிலிருந்தும் பலத்த சந்தேகங்கள் கிளப்பப்பட்டுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

குறித்த மர்ம வாலிபர்கள் குழு சரத் பொன்சேகா நீதிமன்றத்திற்கு அழைத்து வரப்பட்டபோதும், நீதிமன்றத்திலிருந்து அழைத்துச் செல்லப்பட்ட போதும் அவரை சமீபிக்க முயன் (24ஆம் பக்கம் பார்க்க)

## யாழில் தனியார் காணிகளில் உள்ள இராணுவ முகாம்கள் அகற்றப்படும்

### பலாலி படைத் தலைமையகம் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகர் மற்றும் ஏனைய பகுதிகளில்தனியார்கட்டிடங்களில் அமைக்கப்பட்டுள்ள இராணுவ முகாம்கள் விரைவில் அரச காணிகளுக்கு மாற்றப்படுவதாக பலாலி படைத்தரப்புத் தெரிவித்துள்ளது.

இவ்வாறு அரச காணிகளில் இராணுவ முகாம்களை அமைப்பதற்கான தளபாட உபகரணங்களை சீனா வழங்குவதாகவும் படைத்தரப்புத் தகவல்கள் மேலும் தெரிவித்துள்ளன.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

யாழ்.நகரில் தனியார் கட்டிடத் தொகுதியில் அமைந்துள்ள 51ஆவது படை (24ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் தடை பிரான்ஸில் நீடிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பு பிரான்ஸில் தடைசெய்யப்பட்ட ஓர் அமைப்பாகவே உள்ளது என இலங்கை அரசாங்கத்திற்கு பிரான்ஸ் அரசாங்கம் தெரிவித்துள்ளது.

தமிழீழவிடுதலை புலிகளின் முன்னாள் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுக்கு பிரான்ஸின் லா கோர்னியூவ் நகரில் சிலை வைக்கப்பட்டமை தொடர்பான சர்ச்சை தொடர் (24ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பு விளக்கமறியல் கைதியின் உண்ணாவிரதம் கைவிடப்பட்டது

(கொழும்பு)

கொழும்பு விளக்கமறியல் சிறைச்சாலையில் தமிழ் அரசியல் கைதியின் உண்ணாவிரதப் போராட்டம் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி அவர்கள் வழங்கிய உறுதிமொழியை அடுத்து கைவிடப்பட்டது.

கொழும்பு விளக்கமறியல் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள விசுவமடு முல்லைத்தீவைச் சேர்ந்த 42 வயதுடைய குணரெட்ணம் மனோகரன் என்பவர் தன்னை விடுதலை செய்யக்கோரி கடந்த முதலாம் திகதி காலை 7.00 மணி தொடக்கம் ஒரு உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்தார்.

அவர் தனது உண்ணாவிரதப் போராட் (24ஆம் பக்கம் பார்க்க)

## தெற்கில் மீண்டுமொரு கிளர்ச்சி வெடிக்கலாம்

### புலனாய்வுத் தகவல்கள் தெரிவிக்கின்றன

(கொழும்பு)

தெற்கில் மீண்டும் ஒரு கிளர்ச்சி வெடிப்பதற்கான திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுக் கொண்டிருப்பதாக புலனாய்வுப் பிரிவுக்கு தகவல் கிடைத்துள்ளதாக ஊடகத்துறை அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல நேற்று அறிவித்துள்ளார்.

அவ்வாறானதொரு கிளர்ச்சி வெடிக்கும் பட்சத்தில் அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் அமைப்பும் அதன் பிரதான பங்காளியாக இருக்கக் கூடிய சாட்சியம் இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழக மாணவர்களும் நாட்டின் பொதுவான சட்டதிட்டங்களுக்கு உட்பட்டவர்கள் என்ற வகையில் இந்நாட்டில் மீண்டும் ஒரு கிளர்ச்சி (24ஆம் பக்கம் பார்க்க)

## பெரும்பான்மை இனத்தினரால் சிறுபான்மை இனம் நசுக்கப்படுகிறது

### பேரா.சிற்றம்பலம் தெரிவிப்பு


(யாழ்ப்பாணம்)

யுத்தம் முடிவடைந்தும் மக்கள் சுதந்திரமாக வாழ முடியவில்லை. பெரும்பான்மை இனம் சிறுபான்மை இனத்தை நசுக்குவது எமது நாட்டிலும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் தெரிவித்துள்ளார்.

ஜேர்மன் நாடாளுமன்ற பிரதிநிதிக் குழுவினருடன் ஜி.ரி.சற் நிறுவனத்தில் நேற்று நடைபெற்ற சந்திப்பின்போதே அவர் இதனைக் கூறினார். அவர் மேலும் கூறியதாவது,

அடக்குமுறையற்ற வாழ்வையே எமது மக்கள் என்றும் விரும்புகின்றனர். இராணுவத்தினரின் நடவடிக்கைகளில் மாற்றம் ஏற்பட வேண்டும். அரசியல் ரீதியாக எமது பிரச்சினைகள் பார்க்கப்படுகிறது. மீண்டும் மக்கள் போர் கொடி ஏந்தும் நிலை ஏற்படாது (24ஆம் பக்கம் பார்க்க)

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**





ரில்கோ யாழ் சிற்றி ஹோட்டல் திறப்பு விழா நிகழ்வில் ஹோட்டலின் முகாமைத்துவப் பணிப்பாளர் த.திலகராஜ் மங்கல விளக்கேற்றுவதையும் விருந்தினராக கலந்து கொண்ட தவராஜா மற்றும் திருமதி ஜெயசோதி தவராஜா ஆகியோர் இணைந்து ஹோட்டலினை திறந்துவைப்பதையும் படங்களில் காணலாம்

## முன்பள்ளி விளையாட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ் கல்வி வலயங்களுக்குட்பட்ட முன்பள்ளிகளின் விளையாட்டுப் போட்டிகள் நாளை காலை 10 மணிக்கு யாழ்ப்பாணம் வைத்தீஸ்வராக் கல்லூரியில் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி வேதநாயகம் தலைமையில் நடைபெறவுள்ளது. (ச-7)

# கடந்த 20 வருட காலமாக இலங்கைக்கு ஜேர்மன் உதவுகிறது

## ஜேர்மன் பிரதிநிதி யாழில் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கைக்கு கடந்த 20 வருடங்களாக 10 மில்லியன் யூரோ நாணயங்கள் வீதம் வழங்கி வருகிறோம். இதன் இலங்கைப் பெறுமதி 1.6 பில்லியன் ரூபாய் ஆகும். இப்பணம் எமது நாட்டு மக்களின் வரிப்பணத்திலேயேதான் சேர்க்கப்பட்டது என ஜேர்மன் நாட்டு நாடாளுமன்றப் பிரதிநிதிகள் குழுவின் தலைவர் பெற்றா ஏர்ன்ஸ்பேகர் தெரிவித்தார்.

ஜேர்மன் நாட்டு நாடாளுமன்ற பிரதிநிதிக் குழுவுக்கும் மாநகர சபை உறுப்பினர்களுக்குமிடையே நேற்று இடம்பெற்ற சந்திப்பின் போது அவர் இதனைக் கூறினார்.

யாழ்.மாநகரசபை உறுப்பினரும் சுகாதாரக்குழுத் தலைவருமான மனுவல் மங்களநேசனால் மாநகரசபை கடன் பெற்ற நிலத்திலேயே இயங்கி வருகிறது அத்தகைய சூழ்நிலையில் எமது அழிந்துபோன எமது மாநகர சபையினை மீண்டும் அமைத்து தர வேண்டும் எனவும் குடிநீர் விநியோகம் எமது பிரதேசத்தில் பாரிய பிரச்சினையாக இருந்து வருகிறது அதனையும் நிவர்த்தி செய்யவேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்தார்.

இதற்குப் பதிலளிக்கும் போதே ஜேர்மன் குழுத்தலைவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

உங்கள் பிரச்சினைகளை நீங்கள் தீர்த்துக்கொள்ள முயற்சிக்க வேண்டும். எங்களாலான உதவிகளை உங்களுக்குச் சுட்டாயம் செய்வோம். ஜீ.ரி.சற். நிறுவன உதவியுடன் குடிநீர் பிரச்சினையை தீர்க்க முயற்சிக்கிறோம். இதேவேளை மக்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கவும், வைத்தியசாலைகள் அமைக்கவும் திட்டமிட்டுள்ளோம். இங்கு நாம் அவதானித்தவரையில் யாழ்ப்பாணத்தில் வைத்தியர்கள் பற்றாக்குறை நிலவுகிறது. இதனை சரிசெய்ய வேண்டும் என்றார்.

இதனைத்தொடர்ந்தும் யாழ். மாநகரசபை பிரதி முதல்வர் ஆர்.இளங்கோ உரையாற்றுகையில்,

யுத்தத்தினால் பல பெண்கள் விதவைகளாக்கப்பட்டுள்ளனர். அவர் களின் வாழ்வுக்கு உதவிகள் செய்ய வேண்டும். அதுமட்டுமன்றி கடற் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் அவர்களுக்கும் உதவிகள் புரிந்திடவேண்டும் என வேண்டுகோள் விடுத்தார். (ச-6)

# ஆபாச இணையத்தளங்களில் தோன்றிய 83 முகங்களை பிரசுரிக்க உத்தரவு

(கொழும்பு)

ஆபாச இணையத்தளங்களில் தோன்றிய இலங்கையைச் சேர்ந்த ஆண்கள் மற்றும் பெண்களின் 83 முகங்களை பத்திரிகைகளில் பிரசுரிக்குமாறு பொலிஸ் தலைமையகத்தின் பொதுமக்கள் உறவு பிரிவுக்கு கொழும்பு கோட்டை நீதவான் நேற்று உத்தரவிட்டார்.

ஆபாச இணையத்தளங்களில் தோன்றியவர்களை கண்டுபிடித்து சட்ட நடவடிக்கை மேற்கொள்வதற்காக மேற்படி நபர்களின் முகங்களை பத்திரிகைகளில் பிரசுரிப்பதற்கு உத்தரவிடுமாறு பொலிஸ் திணைக்களத்தின் பெண்கள் மற்றும் சிறுவர் விவகாரப்பிரிவு கோரியிருந்தது.

ஆபாச இணையத்தளங்களில் தோன்றிய 80 பெண்களினதும் 3 ஆண்களினதும் புகைப்படங்களை தாம் எடுத்துள்ளதாக பெண்கள் மற்றும் சிறுவர் விவகாரப் பிரிவு நீதிமன்றுக்கு அறிவித்தது.

ஆபாச இணையத் தளங்களிலிருந்து நாம் இப் படங்களை எடுத்தாலும் அந்நபர்கள் இருக்கும் இடம் பற்றி எமக்குத் தெரியாது. அதனால் அந்நபர்களின் புகைப்படங்களை பத்திரிகைகளில் பிரசுரிப்பதன் மூலம் அந்நபர்களை கண்டு பிடிப்பதற்கு பொதுமக்களின் உதவியை எதிர்பார்க்கிறோம் என சிறுவர் மற்றும் பெண்கள் விவகாரப் பிரிவின் அதிகாரியொருவர் தெரிவித்தார். இதனையடுத்து நீதிவான் மேற்படி உத்தரவைப் பிறப்பித்தார். (ச-5)

# தீபாவளி தினத்தை முன்னிட்டு இன்று இராணுவத்தின் ஏற்பாட்டில் கலைநிகழ்வு

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களின் முக்கிய நாளான தீபாவளியை முன்னிட்டு பாதுகாப்புப்படைத் தலைமையகத்தால் யாழ். நகரம் மின்குமிழ்களால் அலங்கரிக்கப்படவுள்ளது.

இதற்காக 10 ஆயிரம் எண்ணை விளக்குகள் மற்றும் கூடுதலான மின்குமிழ்கள் யாழ்.வேம்படிச் சந்தியில் இருந்து வைத்தியசாலை வீதி ஊடாக பஸ் நிலையம் வரை அலங்கரிக்கப்படவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு சோடினை மின்வலைகள் பொருத்த உள்ளனர். இதற்கான சகல ஏற்பாடுகளையும் பாதுகாப்புப்படைத் தலைமையகத்தின் 51 வது படை தலைமையகம் மேற்கொண்டுள்ளது.

குறித்த நிகழ்வில் பாதுகாப்புப் படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க கலந்து கொள்ளவுள்ளார்.

இந்த நிகழ்வுகள் யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நடைபெற இருந்தது. எனினும் யாழ். மாநகரசபை மைதானத்தை தர மறுத்துவிட்டது. இதனால் யாழ் தபால் நிலையத்திற்கு முன்னால் உள்ள முற்றவெளியில் நிகழ்வுகள் நடைபெற உள்ளன. (ச)

MINISTRY OF IRRIGATION AND WATER RESOURCES MANAGEMENT

CENTRAL ENGINEERING CONSULTANCY BUREAU

VACANCIES

TECHNICAL STAFF FOR HIGHWAY PROJECTS

**Nature of employment : Contract Basis ,renewable annually up to three years**

An attractive remuneration package based on qualifications and experience will be offered to the selected candidates.

A) **Resident Engineers** - B.Sc.(Eng.) or equivalent with Full membership of a Profes sional Institute with minimum of 15 years experience of which at least 5 years in Contract Administration.

B) **Planning Engineers** - B.Sc.(Eng.) or equivalent with Full membership of a Profes sional Institute with minimum of 10 years experience of which 5 years in Project Planning with a thorough knowledge in MS Project.

C) **Material Engineers** - B.Sc.(Eng.) or equivalent with Full membership of a Profes sional Institute with minimum 10 years of which 5 years as Materials Engineer.

D) **Site Engineers** - Civil Engineer with B.Sc.(Eng.) or equivalent with 5 years experience of which 2 years in Road works.

E) **Laboratory Technician** - B.Sc. with 3 years experience in quality control of highway construction material and structures.

F) **Technical Officers** - NDT (Civil Eng.) with 5 years experience of which 2 years in Road works.

G) **Quantity Surveyors** - B.Sc.(Quantity Surveying) with a minimum of 5 years experience

H) **Surveyor** - B.Sc.( Surveying Sciences) with a minimum of 5 years experience

I) **Work Supervisor** - NCT (Civil Eng.) or equivalent with 5 years experience of which 2 years in Road works.

***Please forward detailed CV within 3 days of this advertisement to the following address,Stating the post applied for on the top left corner of the envelop. Interviews will be held in Jaffna & Vavuniya.***

**General Manager**
**Central Engineering Consultancy Bureau**
**415,Bauddhaloka Mawatha**
**Colombo 7**

(C-1551)

# கோப்பாய் பிரதேச செயலராக பிரதீபன்



கோப்பாய் பிரதேச செயலராக யாழ். மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்பு செயலக திட்டப்பணிப்பாளராக கடமையாற்றிய ம.பிரதீபன் நியமிக்கப்பட்டுள்ளார்.

எதிர்வரும் 8 ஆம் திகதி திங்கட் கிழமை கோப்பாய் பிரதேச செயல கத்தின் பொறுப்பை ஏற்கவுள்ளார்.

இதுவரை பிரதேச செயலராக கடமையாற்றிய சீ.ஏ.மோகன்ராஸ் முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபராக நியமிக்கப்பட்டதைத் தொடர்ந்து யாழ்.மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்பு செயலக திட்டப்பணிப்பாளராக கடமையாற்றிய ம.பிரதீபன் இந்த வெற்றிடத்திற்கு பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்பு செயலகப் பணிகள் தொடரும்வரை தொடர்ந்து திட்டப் பணிப்பாளராக அவர் கடமையாற்றுவார் என தெரிவிக்கப்படுகிறது. (ச-7)

**மோட்டார் சைக்கிள் தேவை**

**ஆண்கள் ஓடக்கூடிய மோட்டார் சைக்கிள் தேவை.**

**தொடர்பு :**
**சு.காமினி**
**இல.70,(100),**
**பருத்தித்துறை வீதி,**
**ஆரியகுளம் சந்தி,**
**யாழ்ப்பாணம்.**
T.P : 0772367479

(2801)

**தனியார் நிறுவனங்களை பதிவு செய்தல்**

பெறுமதி மிக்க உங்கள் வியாபார நிறுவனத்துக்கான கௌரவத்தையும் நம்பிக்கையையும் பெற்றுக் கொள்வதற்காக உங்கள் தனியார் நிறுவனங்களை இலகுவான முறையில் பதிவு செய்து கொள்ள நாடுங்கள்,

**VTL MANAGMENT**
**Daanston House**
**Colombo -03**
**T.P. 072 9994777**


**செல்லா சினிமா**

பசங்களுக்கு ஜாலியான படம்

காட்சி நேரம்

**10.30 ,2.30 ,6.30**




Airtel
மனமார்ந்த வாழ்த்துக்களை
மனங்குளிர சொல்லிடுங்கள்.
தீபத்திருநாளில் இந்தியாவிலுள்ள சொந்தங்களுடன் உரையாடும் ஒவ்வொரு 5 நிமிட அழைப்பிற்கும், உங்கள் முற்கொடுப்பனவு இணைப்பில் மேலும் 3 நிமிடங்களை இலவசமாகப் பெறுங்கள்.

# இன்று ஒரு தகவல்

## குழந்தைகள்

"என்னுடைய குழந்தை நான் சொல்வதைக் கேட்பதில்லை" என்றால் உங்களுக்குச் சரியாகச் சொல்லத்தெரியவில்லை என்று அர்த்தம்.

அதற்காக குழந்தையைக் குறை சொல்லாதீர்கள். ஒரு குழந்தையை நல்ல விதமாக வளர்ப்பது உங்களுடைய கையில் தான் இருக்கிறது.

குழந்தை நல நிபுணர்கள் என்ன சொல்கிறார்கள் தெரியுமா? குழந்தைகளிடம் எப்படிப் பேச வேண்டும் என்பதைவிட எப்படியெல்லாம் பேசக்கூடாது என்பதை முதலில் தெரிந்து வைத்துக் கொள்ள வேண்டும் என்கிறார்கள்.

"சரி, அதை எங்களுக்கும் கொஞ்சம் சொல்லுங்கள். அதன் பிரகாரம் நடந்து பார்க்கிறோம்" என்கிறீர்களா?

அப்படியானால் இதையெல்லாம் கொஞ்சம் காதில் வாங்கி வைத்திருங்கள்.

முதலில் உங்களுடைய குழந்தையை இன்னொரு குழந்தையுடன் ஒப்பிட்டுப் பேசுவதை விட்டுவிடுங்கள். கூடப் பிறந்த சகோதரர்களோடு கூட ஒப்பிட்டுப் பேசக் கூடாது.

"உன் தங்கச்சியைப் பார். எவ்வளவு நல்லாப் படிக்கிறாள். கணக்கில் நூற்றுக்கு நூறு. நீ நூற்றுக்கு 20. இப்படிப் பேசுவது மிகவும் தவறு. இதனால் பையனுக்கு ரோசம் வந்து படிக்க ஆரம்பித்து விடுவான் என்று நீங்கள் நினைக்கிறீர்கள். ஆனால் அவனுக்கு படிக்க வேண்டும் என்ற ரோசம் வராது. தங்கச்சி மீது கோபம் தான் வரும். தங்கையை வெறுக்க ஆரம்பித்துவிடுவான்.

7 வயதுப் பையனை ஹோட்டலுக்கு அழைத்துக் கொண்டு போகிறீர்கள் அவன் அங்கே 4 வயதுப் பையன் மாதிரி விளையாட ஆரம்பிக்கிறான். நீங்க உடனே "வயசுக்குத் தகுந்த மாதிரி நடந்து கொள். என்ன இது சின்னக்குழந்தை மாதிரி" என்று அதட்டக் கூடாது.

அதன் பின் அவன் நிஜமாவே 4 வயது குழந்தை மாதிரி நடக்க ஆரம்பித்து விடுவான். அவனிடம் நாசூக்காக "தம்பி சீக்கிரம் சாப்பிட்டுவிட்டால் வீட்டுக்குப் போய் ரி.வி.பார்க்கலாம். நல்ல நிகழ்ச்சி களெல்லாம் இருக்கு" இப்படி ஏதாவது சொல்லலாம்.

உங்களுடைய பையன் அவனுடைய நண்பர்களுடன் கிளம்பும் போது அவன் உங்களுடைய விருப்பபடி உடுப்பு உடுக்க வேண்டும் என்று எதிர்பார்க்காதீர்கள். உங்களோடு வரும்போது மட்டும் உங்களுடைய விருப்பத்தை அவனிடம் சொல்லுங்கள்.

ஒரு குழந்தையைப் பார்த்து நீ சோம்பேறி என்று சொல்லி விடக் கூடாது. நீ மகா புத்திசாலி என்றும் அவனுக்கு முத்திரை குத்தி விடக்கூடாது. அவன் அப்படியே நினைக்க ஆரம்பித்து விடுவான்.

"நீ மகா புத்திசாலி இந்தப் பரீட்சை உனக்கு ஈஸியாகத்தான் இருக்கு" என்று சொல்வதை விட "நீ நல்லா படித்திருக்கிறாய். நல்லவிதமாக எழுது வாய் என்று எனக்குத் தெரியும்" என்று சொல்லலாம்.

ஒரு வீதியை கடக்க வேண்டும். பையன் குறுக்கே ஓடப்பார்க்கிறான். உடனே "என்ன இது? கிறுக்குத்தனமாக ஓடுகிறாயே" என்று அவன் மீது பாயாதீர்கள்.

"வீதியைக் கடக்கும்போது அப்பாவின் கையைப் பிடித்துக் கொள்" என்று சொல்லுங்கள்.

அவன் பிடித்துக்கொண்டதும் "வெரிகுட். நல்லாப் பிடித்திருக்கிறாய். இப்பொழுது நாம் பாதுகாப்பாக கடக்கலாம் வா" என்று சொல்ல வேண்டும்.

"நீ வந்து எனக்கு குழந்தையாகப் பிறந்தாயே!" என்று சலித்துக் கொள்ளக்கூடாது.

அது குழந்தையின் மனதில் பாதிப்பை ஏற்படுத்தும். அதைவிட "சிலசமயம் நீ எனக்கு கோபத்தை உண்டாக்கிறாயடா கண்ணா" என்று சொல்லலாம்.

"என்னைக் கொஞ்சம் தனியாக இருக்க விடேன்" என்று உங்கள் குழந்தையைப் பார்த்துக் கத்தாதீர்கள். அது தனக்கு யாரும் ஆதரவாக இல்லை என்று நினைக்க ஆரம்பித்துவிடும்.

அதைவிட, "இதோபாரப்பா... உன்னை எனக்கு ரொம்பப் பிடிக்கும். இப்பொழுது எனக்குச் கொஞ்சம் வேலை இருக்கிறது" என்று சொல்லலாம்.

"சரி, பிறகு அப்பாவிடம் வரலாம்" என்று அது புரிந்து கொள்ளும். குழந்தையைப் பார்த்து "வாயைமூடு" என்று கத்தக்கூடாது. தன் கருத்தைப் பற்றி நீங்கள் கவலைப்படவில்லை என்று அவன் நினைத்துவிடுவான்.

குழந்தையிடம் போய் "இதோபார், இதைச்செய். இல்லையென்றால்..." என்று அர்த்தமில்லாமல் பயமுறுத்தக் கூடாது.

"செய்யவில்லையென்றால் நீங்க என்னமோ பெரிசா செய்துவிடப் போகிறீர்கள்" என்று அது நினைக்க ஆரம்பித்துவிடும்.

சிலபேர் குழந்தையிடம் "இப்பொழுது என்னுடன் வரவில்லையென்றால் உன்னை இங்கேயே விட்டுட்டுப் போய்விடுவேன்" என்று சொல்வதுண்டு. அப்படியும் சொல்லக் கூடாதாம்.

இதெல்லாம் குழந்தை நல நிபுணர்கள் சொல்லியிருக்கும் யோசனைகள். அதனால் ஒரு குழந்தை நன்றாக வளர வேண்டுமானால் அது பெற்றவர்களின் கையில் தான் இருக்கிறது.

ஒரு அப்பா, சின்ன பையனை அடித்துக்கொண்டிருந்தார். "ஏன் அடிக்கிறீர்கள்?" என்று கேட்டார் அந்த அம்மா.

"பரீட்சையில் எருமைக்கும் பசுவுக்கும் என்ன வித்தியாசம் என்று கேட்டிருக்கிறார்கள். அதற்குக் கூட பதில் எழுதத் தெரியவில்லை, இவனுக்கு" என்றார் அப்பா.

"அவனுக்கு அந்த வித்தியாசம் தெரியவில்லை. உங்களுக்கு இன்னொரு வித்தியாசம் தெரியவில்லை" என்றார் அம்மா.

"என்ன சொல்கிறாய்?" என்றார்.

"இது நம்ம பையன் இல்லை. பக்கத்து வீட்டுப் பையன்" என்றார் அந்த அம்மா.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# போர்க்குற்றம் காரணமாக இலங்கைத் தமிழ் புகலிடக் கோரிக்கையாளர் கனடாவில் கைது

போர்க்குற்றங்கள் காரணமாக இலங்கைத் தமிழர்கள் புகலிடக் கோரிக்கையாளர் ஒருவர் கனடாவில் கைது செய்யப்பட்டுள்ளார் என நியூகேரளா இணையத்தளம் தெரிவித்துள்ளது.

இவர் எம்.வி.சன்சீ கப்பல் மூலம் கனடாவுக்குச் சென்ற 491 இலங்கையர்களில் ஒருவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

வான்கூவரில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இந் நபர் மீதான யுத்த குற்றங்கள் நிரூபிக்கப்பட்டால் அவர் இலங்கைக்கு நாடு கடத்தப்படுவார்.

கனேடிய குடிவரவு சட்டங்களின் படி போர்க்குற்றங்கள் தொடர்பாக குற்றவாளியாக காணப்பட்ட எவரும் நாட்டிற்குள் அனுமதிக்கப்படமாட்டார்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ் விவகாரத்தை கையாளும் கனேடிய எல்.ஐ.சேவை முகவரகம் இது தொடர்பாக தகவல் எதனையும் கூற மறுத்துள்ளது.

எனினும் கனேடிய பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் விக் டோவ்ஸின் பேச்சாளர் ஒருவர் கூறுகையில்,

இவ்வியத்தில் நான் சொல்ல முடிந்தது என்னவென்றால், கனடாவானது கிரிமினல் செயற்பாட்டாளர்களில் இலக்காக இருக்கும் போது நாம் வெறுமனே அமர்ந்திருக்க மாட்டோம் என்பது தான் என்றார்.

கனேடிய அகதிகள் சபையில் சுமார் 80ஆயிரம் அகதிகளின் விவகாரங்கள் நிலுவையில் உள்ளதாக தெரிவிக்கப் படுகிறது.

அதேவேளை கனேடிய சட்டமா அதிபர் 63ஆயிரம் அகதிகளை நாட்டை விட்டு வெளியேறுமாறு உத்தரவிட்டுள்ள தாகவும் அவர்களில் 41ஆயிரம் பேர் காணாமல் போயுள்ளதாகவும் தெரிவிக் கப்படுகிறது. (ஸ்ரீ-2)

## சமாதான சைக்கிள் பவனி

அமெரிக்கன் சிலோன் மிஷன் திருச்சபை தன் தாய்ச்சங்கமாகிய பிறநாடுகளின் பணிக்கான அமெரிக்க ஆணைக்குழுவின் 200ஆம் ஆண்டு நிறைவை நாளை சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு மானிப்பாய் திருச்சபையில் கொண்டாடவுள்ளது.

இம் மிஷனரிமாரின் பணிகளை நினைவுகூரும் முகமாக இன்று வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு உடுவிலிலிருந்து சமாதான சைக்கிள் பவனி ஒன்று இடம்பெறவுள்ளது. உடுவிலில் இருந்து ஆரம்பிக்கப்படும் இப் பவனியானது மல்லாகம், அளவெட்டி, பண்டத்தரிப்பு, வட்டுக்கோட்டை, நவாலியூடாக மானிப்பாயை வந்தடையவுள்ளது. இப் பவனியில் வன்னித் திருச் சபைகளின் வாலிபர்களும் இணைந்து சிறப்பிக்கவுள்ளார்கள் என திருச்சபைத் தலைவர் அருட்திரு அ.ஜெயக்குமாரன் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ)

## இராசி பலன்

*05.11.2010*
*(ஐப்பசி 19, வெள்ளிக்கிழமை)*
*சதுர்த்தி பிற்பகல் 1.08 மணிவரை*
*சித்திரை பிற்பகல் 1.25 மணிவரை*
*இராகுகாலம் 10.34-12.04 மணிவரை*
*சுபநேரம் 6.04-7.34 மணிவரை*
*கேதார கௌரி விரதம், அமாவாசை விரதம், மூன்றாம் ஐப்பசி வெள்ளி , தீபாவளி.*

**மேடம்** அம்பாளை வழிபட்டு அதிர்ஷ்டத்தை வரவழைத்துக் கொள்ள வேண்டிய நாள், விருந்தினர் வருகையுண்டு, திருமண முயற்சி வெற்றிதரும், தொழில் [illegible]ன்பர்களின் ஒத்துழைப்பு கிடைச் [illegible]தம்.

**இடபம்** எதிரிகள் உதிரியாகும் நாள், பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமைகள் வந்து சேரும், உடல் நலம் சீராகும், கடன்சுமை குறையும், பொருட் சேர்க்கையால் மனம் மகிழ்வீர்கள்.

**மிதுனம்** பெருமைகள் வந்து சேர அம்மனை வழிபட வேண்டிய நாள், பிள்ளைகளின் வருங்கால நலன்கருதி எடுத்த முயற்சி வெற்றி பெறும், சான்றோர்களின் சந்திப்பு கிட்டும், குடும்பத்தில் குதூகலம் கூடும்.

**கடகம்** வாகன யோகமுண்டு, தொலைதூரத்திலிருந்து சுப செய்தி வந்து சேரும், பெற்றோர் மீது பிரியம் கூடும், தொழில் முன்னேற்றம் அதிகரிக்கும், நன்மைகள் அதிகரிக்க அம்பிகையை வழிபட வேண்டிய நாள்.

**சிங்கம்** மனை சம்பந்தப்பட்ட வகையில் இலாபம் கிடைக்கும், தடைப்பட்ட காரியம் கைகூடும், வெற்றிகள் குவிய தேவியை வழிபட வேண்டிய நாள், சகோதரர் வழியில் அனுகூலம் கிட்டும்.

**கன்னி** பணத் தேவைகள் பூர்த்தியாகும், சொத்து வாங்கும் எண்ணம் மேலோங்கும், உடல் நலம் சீராகி உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், புத்தி சாதூரியமாக நடந்து கொள்வீர்கள்.

**துலாம்** குடும்பத்தில் பெரியவர்களின் சொற்களைக் கேட்டு நடப்பீர்கள், கொடுக்கல், வாங்கல்கள் சீராகும், திடீர் பயணத்தால் பணவரவு ஏற்படும், காசு, பணம் குவிய அம்பிகையை வழிபட வேண்டிய நாள்.

**விருச்சிகம்** காரியங்களில் வெற்றி பெற கணபதியை வழிபட வேண்டிய நாள், விழாக்களில் கலந்து கொண்டு மகிழ்வீர்கள், புகழ் கூடும், பெரியோரின் சந்திப்பு ஏற்படும், பயணங்களால் பலனுண்டு.

**தனுசு** எண்ணங்கள் நிறைவேற அம்பிகையை வழிபட வேண்டிய நாள், பொதுவாழ்வில் புகழ் கூடும், விலையுயர்ந்த பொருட்கள் வீடு வந்து சேரும், தொழிலில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும்.

**மகரம்** தொழில் ரீதியாக புதிய ஒப்பந்தர்கள் வந்து சேரும், பெரிய மனிதரின் சந்திப்புண்டு, சொத்து வாங்க போட்ட திட்டத்தில் முன்னேற்ற முண்டு, கனவுகள் நனவாக வழிபாடு துணைபுரியும்.

**கும்பம்** சந்தோசங்கள் அதிகரிக்க தேவியை வழிபட வேண்டிய நாள், தேகாரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், தொழிலில் பெரியோரின் ஆதாரவைப் பெறுவீர்கள், தந்தை வழி தனலாபமுண்டு.

**மீனம்** கவலைகள் தீர கஜமுகனை வழிபட வேண்டிய நாள், உறவினர் வழியில் சுப செலவுகளைச் சந்திக்கலாம், உடல் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், நண்பர்களிடம் கூடுதல் கவனம் தேவை.

வளவன்

## தீபாவளிப் பண்டிகையை முன்னிட்ட நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

மல்லாகம், தெல்லிப்பளை அரிமா கழகத்தினரின் அனுசரணையுடன் தீபாவளிக் கொண்டாட்டங்கள் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு மல்லாகத்தில் உள்ள அமரர் சிறிபாஸ்கரன் மைதானத்தில் ஓய்வுபெற்ற வங்கி முகாமையாளர் சி. விக்னராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் முன்பள்ளி சிறார்களின் விளையாட்டுக்கள், முதியோர் விளையாட்டுக்கள், கிறீஸ்கம்பம் ஏறுதல் ஆகியன இடம்பெறவுள்ளது.

✦ ✦ ✦

மல்லாகம், தெல்லிப்பளை, மானிப்பாய் அரிமா கழகங்கள் "இனிய இதயங்கள்" அமைப்புடன் இணைந்து கைதடி வயோதிபர் இல்லத்தில் இன்று தீபாவளிக் கொண்டாட்டங்களை நடத்தவுள்ளதாக இனிய இதயம் அமைப்பின் தலைவர் சி. விக்னராசா அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | மருதனார்மடம் |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 70 | -- | 80 |
| உருளைக்கிழங்கு | 100 | 90 | 100 |
| பச்சைமிளகாய் | 60 | 80 | 80 |
| தக்காளி | 100 | 120 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 50 | 40 |
| கோவா | 70 | 70 | 60 |
| கரட் | 60 | 80 | 50 |
| பூசணி | 50 | 50 | 40 |
| புடோல் | 50 | 50 | 50 |
| வாழைக்காய் | 40 | 50 | 40 |
| சின்ன வெங்காயம் | 100 | 100 | 100 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 100 |
| பாகற்காய் | 160 | 200 | -- |
| வெண்டிக்காய் | 70 | 60 | 60 |
| கருணைக் கிழங்கு | 50 | 80 | 50 |
| பயற்றங்காய் | 120 | 140 | 140 |
| லீக்ஸ் | 120 | 140 | 120 |
| பீற்றூட் | 40 | 80 | 60 |
| கறிமிளகாய் | 100 | 140 | -- |
| முருங்கைக்காய் | 150 | 200 | 120 |
| போஞ்சி | 140 | 200 | 100 |
| கத்தரிதம்புள்ள | 40 | 60 | 50 |
| கீரை - 1 பிடி | 30 | 30 | 30 |
| தேசிக்காய் | 80 | 100 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 45 | 60 | 30-50 |

யாழ். நகரில் வியாபாரத்துறையில்
பல வருடங்களாக
அனுபவம் பெற்ற நிறுவனத்தினர்
தற்போது கிளிநொச்சியிலும்

ESPN



- யப்பானிய தொழில்நுட்பத்துடன் புத்தம் புதிய லுமாலா ஆண், பெண் ஸ்போட்ஸ்,யூனியர் துவிச்சக்கர வண்டிகளும், அதன் உதிரிப்பாகங்களும்.
- இந்தியாவில் உற்பத்தியாகி உலகத் தரக்கட்டுப்பாட்டின் ISO ௯001 சான்றிதழ் பெற்ற புத்தம் புதிய கீரோ ஆண்,பெண் ஸ்போட்ஸ்,யுனியர் மிதிவண்டிகளும் உதிரிப்பாகங்களும்.
- வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட மௌவுண்டின்,சொப்பர் மிதிவண்டிகளும், பேபி வோக்கர், பேபி பிறேம், பேபி கார் வகைகளும் பெற்றுக் கொள்ள நாட வேண்டிய இடம்

இருள் அகன்று
மகிழ்ச்சி பெருகட்டும்!
அனைவருக்கும்
தீபத் திருநாள் வாழ்த்துக்கள்

**இ.ச.பே. நாகரத்தினம் சக நிறுவனம்**

52,54, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

ஏ-9 வீதி,கரடிப்போக்கு,
கிளிநொச்சி.

Tel: 021 222 3096
Fax: 021 222 4394

தீபங்களின் வரிசை ஜாலம்
ஒளியின் வண்ணக் கோலம்
உறவுகள் இணைந்து மகிழ
அனைவருக்கும் தீபாவளி வாழ்த்துக்கள்




கட்டடப்பொருட்கள், மிற்சுயி நிப்போன் சீமெந்து,
Akzonobel பெயின்ற் வகைகள்
(எமர்சன், எனமல், நிக்கோல், டியூகோ),
நஷனல் பி.வி.சி (National PVC) குழாய்கள்
மற்றும் எமது நிறுவனத்தால் யாழ்ப்பாணத்தில்
தயாரிக்கப்பட்ட தரமான முட்கம்பிகள்
என்பனவற்றை மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய
ஒரே இடம்.

# கஜமுகன் ஹாட்வெயர்

147,149 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே. இல: 021 222 2833



ஜேர்மன் பாராளுமன்ற பிரதிநிதிகள் குழுவினர் நேற்று யாழ். மாநகரசபைக்கு விஜயம் மேற்கொண்டனர். இந்நிகழ்வில் ஜேர்மன் பாராளுமன்றப் பிரதிநிதிகள் குழுத்தலைவர் பெற்றா ஏர்ன்ஸ்பேகர், பிரதிநிதிகள் குழு உறுப்பினர் யூர்ஜன் கிலிம்கி, மாநகரசபை உறுப்பினரும் சுகாதாரக் குழுத் தலைவருமான ம.மங்களநேசன் ஆகியோர் உரையாற்றுவதையும் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் நிகழ்வில் கலந்துகொண்டவர்களையும் படங்களில் காணலாம்.
(படங்கள்:-எஸ்.கரன்)

## ஞானச்சுடர் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

செல்வச்சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினால் மாதம் தோறும் வெளியிடப்படும் 'ஞானச் சுடர்' சஞ்சிகையின் ஐப்பசிமாத இதழ் வெளி வந்துள்ளது. (ஸ்ரீ-2)

## கந்தசஷ்டி பெருவிழா

(யாழ்ப்பாணம்)

பொலிகண்டி திருவருள்மிகு கந்வன சுப்பிரமணிய சுவாமி (கல்யாண வேலவ சுவாமி தேவஸ்தான கந்தசஷ்டி பெருவிழா நாளை சனிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாக வுள்ளது.

இதில் 6 ஆம் திருவிழாவான 11 ஆம் திகதி பிற்பகல் 7 மணிக்கு சூரசம்காரம் இடம் பெற்று மறுநாள் காலை 9மணிக்கு தீர்த் தோற்சவமும் மாலை 5 மணிக்கு கொடியிறக்கமும் இடம்பெறும்.

8ஆம் நாள் திருக்கல்யாணத்துடன் விழா இனிது நிறைவுபெறும். (ஸ்ரீ)

✠✠✠

(யாளீழ்ப்பாணம்)

கந்தசஷ்டி விரதத்தை முன்னிட்டு கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலயத்தில் நாளை சனிக்கிழமை முதல் தினமும் காலை 8 மணிக்கு முருகப் பெருமானுக்கு அபிஷேகமும் அதனைத் தொடர்ந்து விசேட பூசைகளும் கடம்பவில்வ அர்ச்சனைகளும் இடம்பெறவுள்ளது.

அதைத் தொடர்ந்து மாலை 4.30 மணிக்கு கந்தசஷ்டி உற்சவம் ஆரம்பமாகி நடைபெறும். (ஸ்ரீ)

## சிறப்புச் சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறை தீருவில் வயலூர் முருகன் ஆலய கந்தசஷ்டி உற்சவகாலத்தை முன்னிட்டு நாளை சனிக்கிழமையிலிருந்து தொடர்ந்து ஆறு நாட்களுக்கு மாலை 4.30 மணிக்கு "கந்தன் கருணை" எனும் தலைப்பில் சிறப்புத் தொடர் சொற்பொழிவினை யாழ்.புதிய உயர் கல்வி விரிவுரையாளரும் சொற்பொழிவாளருமான பொன்.சுகந்தன் நிகழ்த்தவுள்ளார். (ஸ்ரீ-2)

## உழவியந்திரம், மோட்டார் சைக்கிள் விபத்தில் இருவர் படுகாயம்

(கரவெட்டி)

உழவு இயந்திரமும் மோட்டார் சைக்கிளும் ஒன்றுடன் ஒன்று மோதிக்கொண்டதில் படுகாயமடைந்த இருவர் பலத்த காயங்களுடன் மந்திகை ஆதாரவைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு 8 மணிக்கு யாக்கரு சந்தியில் இடம்பெற்றுள்ளது.இதுகுறித்து தெரிய வருவதாவது,

கரவெட்டியில் உள்ள உறவினர் ஒருவரின் மரணவீட்டிற்குச் சென்று விட்டு மந்துவிலில் உள்ள வீடு நோக்கி மோட்டார் சைக்கிளில் பயணித்துக்கொண்டிருந்த வேளை அவ்வழியால் வந்து கொண்டிருந்த உழவியந்திரத்துடன் குறித்த மோட்பர் சைக்கிள் ஒன்றுடன் ஒன்று மோதிக்கொண்டதில் இவ் விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் மந்துவில் கிழக்கைச் சேசர்ந்த துரைாசா நிசோதயன் (வயது -21), மந்துவில் தெற்கைச்சேர்ந்த சுந்தரன் ஜெயதாசன் (வயது -42) ஆகிய இருவருமே சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளனர். (ஸ்ரீ-24)

## பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் ஸ்ரீ வடபத்திரகாளி அம்பாள் தேவஸ்தான கேதார கௌரி விரத சமய விருத்திப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கான பரிசளிப்பு விழா இன்று வெள்ளிக்கிழமை மாலை மணிக்கு ஆலய மண்டபத்தில் பிரம்மஸ்ரீ.ஸ்ரீ.வ.சிவகுமாரசர்மா தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக சுன்னாகம் மக்கள் வங்கி முகாமையாளர் சு.இராசமனோகரன் சிறப்பு விருந்தினர்களாக யாழ்.பல்கலைக்கழக வணிக முகாமைத்துவ கற்கைகள் பீட பீடாதிபதி பேராசிரியர் க.தேவராஜா, யாழ்.பல்கலைக்கழக இந்துநாகரிகத்துறை பேராசிரியர் திருமதி கலைவாணி இராமநாதன் மற்றும் யாழ். பல்கலைக்கழக மொழியியல் கலாநிதி இரட்ணமலர் கைலாயநாதன் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக யாழ். கொக்குவில் இந்துக் கல்லூரி உப அதிபர் எம். வேலாயுதபிள்ளை மற்றும் தாவடி மேற்கு ஜே/192 கிராம அலுவலர் வே.நாகேந்திரராஜா ஆகியோர் கலந்துகொள்வார்கள்.

மேலும் இவ் தேவஸ்தான இணையத்தள அறிமுகம்,கலைநிகழ்வு மற்றும் பரிசளிப்பு நிகழ்வும் இடம்பெறும். (ஸ்ரீ-2)

## மீளாய்வுக் கூட்டம்

(அல்வாய்)

வடமாகாணத்தில் உள்ள சகல கோட்டக் கல்வி அதிகாரிகளுக்குமான முன்னேற்ற மீளாய்வுக்கூட்டம் எதிர்வரும் 8ஆம்திகதிகாலை 9 மணிக்கு வவுனியாவில் உள்ள மாகாண முதன்மை நிலை அலுவலகத்தில் நடைபெறவுள்ளது என வட மாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார்.

இக் கூட்டம் எதிர்வரும் 9 ஆம் திகதி நடைபெறவுள்ளது என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-19)

## செஞ்சிலுவைச் சங்க சங்கானை பிரிவு கிளைக்கு நிரந்தர கட்டடம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை செஞ்சிலுவைச் சங்க வலி மேற்கு சங்கானை பிரிவுக்கிளைக்கு நிரந்தர கட்டடம் அமைப்பதற்கு கனேடிய செஞ்சிலுவைச் சங்கம் 20 இலட்சம் ரூபாவை ஒதுக்கியுள்ளது.

இக்கட்டடம் அமைப்பதற்கான காணியை இலங்கை செஞ்சிலுவைச் சங்க சங்கானை பிரிவுக்கிளை கொள்வனவு செய்துள்ளதை அடுத்து இக் கட்டடம் அமைப்பதற்கான அடிக்கல்லை இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். மாவட்ட கிளையின் தலைவர் பேராசிரியர் வீ.கே.கணேசலிங்கம் கடந்த புதன்கிழமை வைப வரீதியாக நாட்டி வைத்தார். (ஸ்ரீ-134)

## சாதாரணதர மாணவர்களுக்கான மாபெரும் கருத்தரங்கு

சுன்னாகம் றோட்டறிக் கழகத்தின் ஏறபாட்டில் க.பொ.த.சாதாரண தர மாணவர்களுக்கான மாபெரும் கருத்தரங்கு நாளையும் நாளை மறுதினமும் யாழ். இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இதில் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு தமிழ், பிற்பகல் ஒரு மணிக்கு விஞ்ஞானம், நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு கணிதம், பிற்பகல் ஒரு மணிக்கு வரலாறு, அதைத் தொடர்ந்து 2.30 மணிக்கு ஆங்கிலம் ஆகிய, பாடக் கருத்தரங்குகள் நடைபெறவுள்ளது.

இக் கருத்தரங்கில் ஆசிரியர்களின் வழிகாட்டலின் கீழ் மாதிரி வினாத்தாள்கள் வழங்கப்பட்டு கற்பித்தல் செயன்முறையும் இடம்பெறவுள்ளது.

எனவே அனைத்து மாணவர்களும் இக்கருத்தரங்கில் பங்குபற்றி பயன்பெறுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-17)

## செயலமர்வு

(அல்வாய்)

வடமராட்சி வலய ஆரம்பக்கல்வி ஆசிரியர்களுக்கான சுற்றாடல் பாட செயமலர்வு நாளையும் சனிக்கிழமையும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமையும் காலை 8.00 மணி தொடக்கம் பிற்பகல் 4.30 மணி வரை யா/வேலாயுதம் மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இச் செயலமர்விற்கு வடமராட்சி வலயத்தில் உள்ள ஒவ்வொரு பாடசாலையில் இருந்தும் ஒரு ஆசிரியரையாவது தவறாது அனுப்பி வைக்குமாறு வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராஜா பாடசாலை அதிபர்களுக்கு அறிவித்துள்ளார். (ஸ்ரீ-19)

## நிர்வாகசபை கூட்டம்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை திருவள்ளுவர் மகா சபையின் 5ஆவது நிர்வாகசபைக் கூட்டம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக்கு சுன்னாகத்தில் உள்ள உப தலைவர் பொ.குணரத்தினம் இல்லத்தில் நா.கிருஷ்ணபிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது. (ஸ்ரீ-2)

## உரும்பிராய் கருணை இல்ல சிறார்களின் கலைவிழா

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் கருணை இல்ல சிறார்களின் கலைவிழா நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு உரும்பிராய் காமாட்சி அம்பாள் கல்யாண மண்டபத்தில் உரும்பிராய் கருணை இல்லத்தலைவர் அ.ஈஸ்வரநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக திரு.திருமதி .பொன் தெய்வேந்திரம் கலந்து கொள்ளவுள்ளார்.

வரவேற்புரையை உரும்பிராய் கருணை இல்ல பொருளாளர் சி.சிவராம்,வாழ்த்துரையை வலி.கிழக்கு உதவிப் பிரதேச செயலர் செல்வி சபாரட்ணம் பிறேமினி ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

அதைத் தொடர்ந்து இல்லச் சிறுமிகளின் கலைநிகழ்வுகளும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ)




## இலவச கருத்தரங்கு

காரைநகர் புதுவீதிச் சந்தியில் அமைந்துள்ள எம்.இ.சி. தனியார் கல்வி நிலையத்தின் ஏற்பாட்டில் க.பொ.த (சா/த) மாணவர்களுக்கான இலவச கல்விக் கருத்தரங்கு இன்றும் நாளையும் நாளை மறுதினமும் கலாநிதி தியாகராஜா மத்திய மகா வித்தியாலயத்தில் நடாத்தப்படவுள்ளது.

இக் கல்விக் கருத்தரங்கில் யாழ்.மாவட்ட பிரபல பாடசாலை ஆசிரியர்கள் பங்கு பற்றவுள்ளதோடு சமுகமளிக்கும் மாணவர்கள் அனைவரும் பாடசாலை சீருடையுடன் சமுகமளிக்குமாறு கல்வி நிலயைத்தினர் கேட்டுள்ளனர். (ஸ்ரீ-246)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.வலய சகல பாடசாலை அதிபர்கள் மற்றும் யாழ்ப்பாணம் , நல்லூர் மற்றும் கோப்பாய் ஆகிய பிரிவுக் கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள் அனைவருக்குமான அவசர கலந்துரையாடல் ஒன்று நாளை சனிக்கிழமை காலை 10 மணிக்கு யாழ் . கல்வி வலய முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக் கலந்துரையாடலுக்கு மேற்குறித்த அனைவரையும் தவறாது சமுகமளிக்குமாறு யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)



உலகெங்கும்
அமைதி நிலவவும்
சகோதரத்துவம் பெருகவும்
இந்த தீபாவளித் திருநாளில்
வேண்டி நிற்போம்!
Dulux பெயின்ற்
எப்பொழுதும் அதிக நன்மைகளை
வழங்குகிறது என்பது
உங்களுக்குத் தெரியுமா?
Dulux
Weathershield
Water Based
Dulux
Dulux 3in1
Supreme
AkzoNobel
Tomorrow's Answers Today
யாழ்ப்பாண விநியோகஸ்தர்கள்
சிவன் மோட்டோர்ஸ் ஸ்ரோர்ஸ்
70/1, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்
கண்டி வீதி,
சாவகச்சேரி
சிவகுமரன் என்ரபிறைஸ்
75, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

## கடந்த 10 மாதங்களில்

# பொலனறுவையில் 175 சிறுவர் துஷ்பிரயோகச் சம்பவங்கள்

(கொழும்பு)

கடந்த பத்து மாதங்களில் பொலனறுவைப் பிரதேசத்தில் சுமார் 175 சிறுவர் துஷ்பிரயோகச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாக பிரதேச சட்ட வைத்திய அதிகாரியின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனினும் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான 51சம்பவங்களே பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

20 வயதுக்கும் குறைந்த 699 தாய்மார் பொலனறுவைப் பிரதேசத்தில் காணப்படுவதாகவும் இவர்கள் அனைவருக்குமே கணவன் இல்லாத நிலையில் உள்ளார்கள் எனச் சுட்டிக் காட்டப்படுவதோடு இந்த நிலைமைகள் குறித்து கவனிக்கப்படவேண்டியது அவசியமானது என பொலனறுவை மாவட்டச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

பொலனறுவைப் பிரதேசத்தில் அதிகளவான போதைப்பொருள் பாவனையும் காணப்படுவதாகவும் சிறுவர்கள் பாதுகாப்பு தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்தப்பட வேண்டுமென்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# ஆபாச இணையத்தளங்களை தடைசெய்ய புதியமென்பொருள்

(கொழும்பு)

ஆபாச இணையத் தளங்களை தடை செய்ய புதிய மென்பொருள் இலங்கைத் தொழில் தொடர்பாடல் ஒழுங்கு முறை ஆணைக்குழுவினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இது குறித்து தொலைத் தொடர்பாடல் ஆணையாளர் அனுசா பல்பிட தெரிவிக்கையில்,

ஆபாசக்காட்சிகளைக் கொண்ட இணையத்தளங்களை தடை செய்யும் முகமாக புதிய மென்பொருள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. சிறுவர்கள் இவ்வாறான இணையத் தளங்களுக்கு நுழைவதற்கு அனுமதி தடை செய்யப்பட்டுள்ளது. தொலைத்தொடர்பாடல் ஆணைக்குழு கொழும்பு பல்கலைக்கழக கணனிப் பிரிவினருடன் இணைந்து இதனை செயற்படுத்து கின்றது.

கொழும்பு ஜுவனளி நீதிமன்றின் உத்தரவின் பேரில் ஆணைக்குழு 700 இணையத் தளங்கள் இவ்வாறு தடை செய்யப்பட்டுள்ளன. (ஸ்ரீ-2)

# ஜனாதிபதிக்கு எதிராக வழக்குத் தொடர அரசியலமைப்பு சட்டத்தில் இடமில்லை

## பிரதி சொலிசிட்டர் ஜெனரல் அளுவிகார தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதிக்கு எதிராக வழக்குத் தொடர அரசியல்மைப்பு சட்டத்தில் இடமில்லை என பிரதி சொலிசிட்டர் ஜெனரல் புவனேக அளுவிஹாரே தெரிவித்துள்ளார்.

சரத் பொன்சேகாவிற்கு விதிக்கப்பட்ட 30 மாத சிறைத்தண்டனையை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அங்கீகரித்துள்ளதாகவும் எனவே யுத்த நீதிமன்றின் தீர்ப்பிற்கு எதிராக வழக்குத் தொடர முடியாது என அவர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதிக்கு எதிராக வழக்குத் தொடர முடியாது என அரசியல் அமைப்பில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளதாக அவர் குறிப் பிட்டுள்ளார்.

சரத்பொன்சேகாவினால் தாக்கல் செய்யப்பட்டிருந்த ரிட் மனுவை விசாரணை செய்த போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

எவ்வாறெனினும் யுத்த நீதிமன்றினால் தமது கட்சிக்காரருக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு நியாயம் கோரியே ரிட் மனு செய்ததாக சட்டத்தரணி ரொமேஸ் டி சில்வா குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)







# தமிழ் மக்களின் வாழ்வில் சுபீட்சம் ஏற்பட அனைவரும் பிரார்த்திப்போம்

## தீபாவளி வாழ்த்துச் செய்தியில் விஜயகலா மகேஸ்வரன் எம்.பி.



அனைவர் வாழ்விலும் ஒளி ஏற்றும் தீபாவளித்திருநாள். இந்த நாட்டில் வாழும் தமிழ் மக்கள் மத்தியில் அமைதியையும் சமாதானத்தையும் ஏற்படுத்துவதாக அமைய வேண்டும். இடம் பெயர்ந்து அல்லலுறும் மக்கள் விரைவில் தமது சொந்த இடங்களில் குடியேறுவதற்கு இந்த திருநாள் வழிசமைக்க வேண்டும் என்று ஐக்கிய தேசியக்கட்சியின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

தீபாவளித்திருநாளை முன்னிட்டு அவர் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

யுத்தத்தினால் இடம்பெயர்ந்து அகதி முகாம்களில் வாழ்ந்த பெருமளவான மக்கள் தற்போது மீளக் குடியேற்றப்பட்டுள்ளனர். இவர்களுக்கு உரிய வசதிகள் இன்னமும் பூரணமாக வழங்கப்படவில்லை. பெருமளவான மக்கள் இன்னமும் அகதி முகாம்களில் வாழ்ந்து வருகின்றனர். இவர்களின் வாழ்க்கையில்சுபீட்சத்தை ஏற்படுத்த வேண்டியது அனைவரதும் கடமையாகும்.

இதனைவிட புனர்வாழ்வு பெற்று வரும் தமிழ் இளைஞர் யுவதிகள் விடுவிக்கப்பட்ட வேண்டும். சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளுக்கு விமோசனம் ஏற்பட வேண்டும். கடந்த பல வருடங்களாக பெரும் துன்பங்களையும் துயரங்களையும் அனுபவித்த தமிழ் மக்களுக்கு இனியாவது விமோசனம் ஏற்பட வேண்டும் அதர்மம் அழிந்து அனைவர் வாழ்விலும் ஒளியேற்றிய தீபாவளித் திருநாளாகிய இன்று துன்ப துயரப்படும் மக்களின் வாழ்வில் சுபீட்சம் ஏற்படவேண்டுமென நாம் அனைவரும் இறைவனை பிரர்த்திப்போம்.

# இத்தீபத்திருநாளில் புதிய பயணம் ஒன்றிற்காய் உறுதிபூணுவோம்



தீபாவளி திருநாளைக் கொண்டாடும் என்றும் என் இதயத்திற்கு நெருக்கமான தமிழ் மக்களே! இத் தீபத்திருநாளில் இறைவனின் அன்பும் ஆசீர்வாதமும் கிடைக்க வேண்டும் என்று பிரார்த்திக்கின்றேன்.

யுத்தம் முடிந்த நிலையில் அதன் வடுக்களும் துயரங்களும் எம்மைப் பாதித்திருப்பினும் இத்தீபத் திருநாளில் அவற்றையெல்லாம் முடிந்தவரை தவிர்த்து, எமக்காகவும் எதிர்கால சந்ததியின ருக்காகவும் நிம்மதி நாடி புதிய பயணம் ஒன்றிற்காய் உறுதி பூணு வோம். இனங்களையும் மதங்களையும் கடந்து நாம் இரண்டறக்கலந்து இத்தீப திருநாளில் நட்புடன் புதிய சரித்திரம் படைக்க இணைவோம் என வாழ்த்துகின்றேன்.

**அஷ்ஷெய்க் பி.ஏ.எஸ்.சுப்யான்**
**மாநர சபை உறுப்பினர் ,**
**யாழ்ப்பாணம்.**

# தீமைகள் நலிய தீபமேற்றி வழிபடும் தீபாவளித் திருநாள்



தமிழர்களுடைய பண்பாட்டின் தனிச் சிறப்புக்களை அவர்கள் கொண்டாடும் பெருநாட்களும் திருநாட்களும் தத்துவ உண்மைகளுடன் உலகிற்கு உணர்த்துகின்றன.

இந்த விதத்திலே மக்களுடைய வாழ்க்கையில் ஆணவமும் அநீதியும் கொடுங்கோன்மையும் அழிவினைத் தரும் என்பதை நன்கு அறிவுறுத்துவதாகவே தீபாவளித் திருநாள் அமைகின்றது.

அன்பும் பண்பும் அறனும் இறைநம்பிக்கையும் கொண்டோரை நரகாசுரன் எனும் அசுரன் இம்சைப் படுத்தியதையும் இக்கொடுமையைப் பொறுமையுடன் துன்பத்துக்கு ஆளானோர் இறைவனிடம் முறையிடவும் இறைவன் தானே அசுரனைக்கொன்று தன்னை நம்பினோருக்கு நல்வழிகாட்டியாக உதவியமையையும் தீபாவளித்திருநாள் நமக்கு நன்கு உணர்த்துவதாகவுள்ளது.

மேலும் இந்து மதமானது புராணங்கள் மூலம் தேவ அசுரக் கதைகள் பலவற்றைக் கூறி முடிவில் தெய்வீகத் தன்மை மேலோங்க அசுரத்தன்மையானது அழிக்கப்பட்டு ஆன்மாக்களை நற்செயல்கள் செய்யத் தூண்டுவனவாக அமைந் துள்ளன.

ம னி த னு டை ய அன்றாட வாழ்வில் நடக் கும் தேவ –அசுர சிந்தனைப் போராட்டத்திலும் வெற்றி பெற நல்ல சிந்த னைகளுடன் நற்கிாரியங்களைச் செய்து இறை உணர்வை வளர்த்துக்கொள்ள தீபாவளி போன்ற திரு நாட்கள் வழி காட்டுவனவாக அமைந்துள்ளன.

தீபாவளிப் பண்டிகையைக் கொண்டாடும் பொழுது தீய இருளான அசுரத் தன்மைகள் அழியவும் தூய ஒளியான தெய்வீகத் தன்மை உலகெங்கும் பரவவும் அதன் மூலம் உலகமே அஞ்ஞான இருளிலிருந்து மெய்ஞ் ஞான ஒளியில் பேரானந்த வாழ்வு காணவும் உறுதிகொள்வோம்.

தீபாவளி நன்நாளிலே வைகறையின் துயில் எழுந்து புனித நீராடி இறை வழிபாடுகள் செய்து புத்தாடை அணிந்து ஊரோடு கூடி எங்கும் தீபச்சுடரேற்றி புற இருள் அகல எங்கும் ஒளி வீசுவது போல எம் அக இருளும்நீங்கிஎல்லோரும்நல்வாழ்வுவாழவேண்டுதல் செய்வோம். *நீர்வை மணி*

# மீள்குடியேறிய மக்களுக்கான கோதுமை மா நிவாரணம் அரைவாசியாகக் குறைப்பு

## உலக உணவுத் திட்டம் அறிவிப்பு

மீள்குடியேற்றப்பட்ட மக்களுக்கான கோதுமை மா விநியோகம் 50வீதத்தினால் குறைக்கப்பட்டுள்ளதாக உலக உணவுத் திட்டம் அறிவித்துள்ளது.

கோதுமை மாவிற்கு நிலவி வரும் தட்டுப்பாட்டின் காரணமாக மீள்குடியேற்ற மக்களுக்கு இதுரை காலமும் வழங்கப்பட்டு வந்த நிவாரணம் அரைவாசியாகக் குறைக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய கையிருப்பினைக் கருத்திற் கொண்டு நிவாரணங்கள் வழங்குவதனை குறைப்பதற்குத் தீர்மானித்ததாக உலக உணவுத் திட்ட உயர் அதிகாரிகள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

நிவாரணக்குறைப்பு நடவடிக்கை காரணமாக ஓர் தற்காலிக ஏற்பாடு எனவும் போதியளவு கோதுமை மா கிடைக்கப்பெற்றால் மீளவும் நிவாரணம் அதிகரிக்கப்படும் என்றும் உலக உணவுத் திட்ட அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர். (ஸ்ரீ-2)

# 19 ஆம் திகதியில் பிறந்த உங்கள் பலன் எப்படி?

19ஆம் திகதியில் பிறந்தவர்கள் பாக்கிய சாலிகளே. 1மற்றும் 9ஆம் எண்களின் ஆதிக் கத்தால் மிக உன்னதமான வாழ்க்கை அமையப் பெற்றவர்கள். மிக உயர்ந்த இலட் சியமும் எண்ணங்களும் அமையப் பெற்ற வர்கள். எதையும் ஆராய்ந்து சீர்தூக்கிப் பார்க்கும் குணம் படைத்தவர்கள். உதவி செய்யும் மனப்பான்மை நிறைய பெற்ற வர்கள். தன்னால் பிறருக்குத் தீமை ஏற்படக் கூடாது என்ற எண்ணம் படைத்தவர்கள். வசீக ரமான தோற்றமும் மிடுக்கான நடையும் இருக் கும். இவர்களின் தொழில் எண் 1 தொழில் நட்பு எண்கள் 4, 6.

இவர்கள் பெரும்பாலும் உயர் பதவிக ளில் இருப்பதைக் காணலாம். குறிப்பாக வங்கி கஜானா, பொதுஜனத் தொடர்பு போன்ற துறைகளில் அதிகம் காணப்படுவார்கள். அரசின் திட்டங்கள், அதற்குத் தேவையான நிதி ஆதாரம் மற்றும் செயல்படுத்தும் துறை களில் இவர்கள் பணிபுரிவதைக் காணலாம். தொழில் மற்றும் தொழில் உதவி எண்களின் கூட்டுச் செயல்பாட்டினால் ஏற்றம் காணும் நிலை உண்டாகிறது.

பிறந்த திகதி எண்களில் 1 மற்றும் 9இன் ஆதிக்கமும் தொழில் உதவி எண்களின் ஆதிக்கமும் எண்கோண வடிவில் செயல்படு வதால், எந்தச் சூழ்நிலையிலும் பொருளா தார நிலை சரிவடையாமல் மேன்மை யாகவே இருக்கிறது. பிறந்த திகதி எண் களின் ஆதிக்கம் மட்டும் இருப்பவர்கள். சற்று மனச்சலனம் உடையவர்களாகவும் உணர்ச்சிவசப்படக் கூடியவர்களாகவும் காணப்படுவார்கள். தொழில் எண், தொழில் நட்பு எண்களின் ஆதிக்கம் மட்டும் உள்ள வர்கள் (1, 4, 6) அடிக்கடி ஏதேனும் ஒரு பிரச்சி னையைச் சந்தித்த வண்ணம் இருப்பார்கள். எதையும் சிந்திக்காமல் செயல்படும் தன்மை யால் தான் இவர்களுக்கு இந்த நிலை ஏற் படுகிறது. எண் ஆதிக்கக் குறைபாடு இருந் தால் மனம் போன போக்கில் வாழ்க்கைப் பாதை மாறி துன்பப்படும் நிலை உண்டாகும். வெள்ளிக் கிழமைதோறும் அஷ்டலட்சுமி வழி பாடு செய்து வந்தால் நன்மைகளை நாளும் பெறலாம்.

இவர்கள் பெரும்பாலும் மிகப் பெரிய பண் ணை, நிலம், வீடு, மனை சம்பந்தப்பட்ட தொழில் செய்பவர்களாகவே இருப்பார்கள். சிலர் கொடுக்கல்-வாங்கல், அடகு வியாபா ரம் செய்பவர்களாகவும் ஆபரணவியாபாரம் செய்பவர்களாகவும் இருப்பதைக் காண லாம். இவர்களுக்கு பிறந்த திகதி எண்களின் ஆதிக்கம் மிக அதிகமான நன்மையைச் செய் வதால், எப்போதும் பொருளாதார உயர்வு பற் றிய சிந்தனையும் செயலும் தோன்றிய வண் ணம் இருக்கும்.

இதுவே இவர்களை பல தலை முறை அளவிற்குச் சொத்து சேர்க்கும் நிலைக் குக் கொண்டு செல்கிறது. தொழில் நட்பு எண் களின் ஆதிக்கம் மட்டும் பெற்றவர்கள், தன் சுய முயற்சியால் முன்னேற்றம் காணும் நிலை உடைய வர்களாக இருப்பார்கள். இவர் கள் தெய்வ நம்பிக்கை உடையவர்களாகவும் தான-தருமங்களிலும் நாட்டம் உள்ளவர் களாகவும் இருப்பார்கள். தெய்வீகப் பணிக ளில் ஈடுபாடு உடையவர்களாகவும் இருப்பார் கள். இவர்கள் வெள்ளிக்கிழமை மற்றும் செவ் வாய்க்கிழமைகளில் காமதேனுவை வழிபாடு செய்து வந்தால் மேன்மை பல பெறலாம்.

இவர்கள் பெரும்பாலும் எண் ஆதிக்கக் குறைபாடு காரணமாகவே முன்னேற்றம் தடைப்பட்டு தொழிலாளர்களாக இருப்பதைக் காணலாம். இவர்களின் பிறந்த திகதி எண் களான 1, 9இன் ஆதிக்கம் மிகவும் மோசமா கவும் தொழில் உதவி எண்களில் 6ஆம் எண்ணின் ஆதிக்கம் குறைவாக இருப்பதை யும் காணலாம். இவர்களில் பெரும்பாலா னோர் 46 வயதிற்குப் பிறகே முன்னேற்றத் தைக் காண முடியும்.

மேலும் மனநிலை ஒரே சீராக இருக்கும் படி பழகிக் கொண்டால் பிரச்சினைகளி லிருந்து விடுபடலாம். முன்னேற்றம் வரக் கூடிய சூழ்நிலை நன்றாகத் தெரிந் தும் முன்னேற முடியாமல் இருப்பதற்கு இவர்க ளின் மனநிலையே காரணமாக அமைந்து விடுகிறது. இந்நிலை மாற செவ்வாய்க் கிழமை தோறும் குபேர வழிபாடு அல்லது சொர்ண ஆகர்ஷண பைரவர் வழிபாடு செய்து வந்தால் சிறந்த தொழில் அமைப்பை யும் பொருளாதார நிலை உயர்வையும் பெற லாம்.

இவர்கள் பிறவிக் கலைஞர் என்று அழைக் கக்கூடிய நிலையைப் பெறக்கூடியவர்கள். கலைத் தாயின் ஆசியும் பெற்றவர்கள். சிறு கச் சிறுக முன்னேறி மிக உயர்நிலைக்குச் சென்று பேரும் புகழும் பெறக்கூடியவர்கள். கலைக்குரிய மரியாதையைக் கொடுக்கும் குணமும் கலைஞர்களைக் காக்க வேண்டும் என்ற எண்ணமும் அதிகம் உடையவர்கள். இவர்களின் பிறந்த திகதி எண்களும் தொழில் மற்றும் தொழில் நட்பு எண்களின் ஆதிக்க மும் ஒரே நேராத்தில் செயல்படுவதால், இவர் களுக்குத் தாழ்வு நிலை இன்றி வளர்ச்சி மட் டுமே வாழ்க்கையாக மாறிவிடும். எப்போதும் சந்தோஷம் குறையாமல் இருக்க வேண்டும் என்ற எண்ணம் உடையவர்கள். எண் ஆதிக் கம் குறைவாக இருந்தால் நிலைமை தலை கீழாக மாறிவிடும்.

தொழில் உதவி எண்க ளில் 4ஆம் எண் இவர்களை அடிக்கடி பரிசீ லித்துக் கொண்டே இருப்பதால், திடீர் மன மாற்றம் ஏற்பட்டு தகாத உறவுகள் மற்றும் பழக்க வழக்கங் களுக்கு அடிமையாகி பேரும் புகழும் இழந்து பொருளாதார நிலையில் சரி வும் ஏற்படுகிறது. பல கலைஞர்கள் தங் களின் வாழ்நாளில் கடைசி காலத்தில் துன் பப்படுவது இதனால்தான்.

நல்ல நிலையில் இருக்கும்போது செய்யும் சில செயல்களால் (எண்களின் சோதனைகளால்) தன்னிலை மறந்து பாதை மாறிவிடுகிறது. எந்த நிலையி லும் இடர் வராமல் இருக்க வெள்ளிக் கிழமை தோறும் கலைவாணி மற்றும் கோமாதா வழி பாடு செய்து வந்தால் எல்லாம் இன்பமய மாய் மாறும்.

பிறந்து திகதி 19, விதி எண் 1ஆக இருப்ப வர்களுக்கு குறைந்த பட்சம் 19 வருடங்க ளும் அதிகபட்சமாக 23 வருடங்களும் சிறப் பான பலன்களைச் செய்யும். (விதி எண் ணின்படி யோக பலன்கள் அதிகமாகவும் குறைவாகவும் நடைபெறும்) . பிறந்த திகதி 19, விதி எண் 2-ஆக இருப்பவர்களுக்கு இடைவெளி விட்டு 4 அல்லது 6 வருடங்கள் சிறப்பான பலன்களைச் செய்யும். பிறந்த திகதி 19, விதி எண் 3-ஆக உள்ளவர்களுக்கு 19 வருடங்கள் சிறப்பான பலன்கள் கிடைக் கும். பிறந்த திகதி 19, விதி எண் 4-ஆக இருப் பவர்களுக்கு மிக அதிகபட்சமாக 37 வரு டங்கள் சிறப்பான பலன்களைச் செய்யும். பிறந்த திகதி 19, விதி எண் 5-ஆக இருப்ப வர்களுக்கு 28 வருடங்கள் சிறப்பான பலன் களைச் செய்யும். பிறந்த திகதி 19, விதி எண் 6-ஆக இருப்பவர்களுக்கு 37 வருடங்கள் சிறப்பான பலன்களைச் செய்யும். பிறந்த திகதி 19, விதி எண் 7-ஆக இருப்பவர்களுக்கு 19 வருடங்கள் சிறப்பான பலன்களைச் செய் யும். பிறந்த திகதி 19, விதி எண் 8-ஆக இருப் பவர்களுக்கு 10 முதல் 19 வரு டங்கள் சிறப் பான பலன்களைச் செய்யும். பிறந்த திகதி 19, விதி எண் 9-ஆக இருப்பவர்களுக்கு 19 முதல் 27 வருடங்கள் சிறப்பான பலன் களைச் செய்யும்.

குறிப்பு :- பிறந்த திகதி எண், விதி எண், தொழில் எண், நன்மை செய்யும் எண் ஆகியவற்றின் ஆதிக்கத் தைப் பொறுத்து தொழில் நிலைகள் மாறுபடும்.

(தொடரும்)

**எஸ்.என்.ஹரிஜி**

## சிறிய நடுத்தர கைத்தொழிலாளர்களுக்கான இயந்திர உபகரணக் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

கைத்தொழில் அபிவிருத்தி சபையின் ஏற்பாட்டில் முதலீட்டு ஊக்குவிப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் சிறிய நடுத்தர கைத்தொழி லாளர்களுக்கான இயந்திர உபகரண கண் காட்சியும் கருத்தரங்கும் எதிர்வரும் 16ஆம் திகதி யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடத் தப்படவுள்ளது.

இவ் இயந்திர உபகரணக் கண்காட்சியில் தமது உற்பத்திகளைக் காட்சிப்படுத்த விரும்புவோர், காட்சிப்படுத்த விரும்பும் தமது இயந்திர உபகரண விபரத்தை எதிர்வரும் 8ஆம் திகதிக்குமுன் கைத்தொழில் அதிகார சபையின் யாழ். மாவட்ட அலுவலகத்திற்கு அறியத் தருமாறு பதில் பிரதிப் பணிப்பாளர் எஸ். சிவகெங்காதரன் கேட்டுக் கொள்கின் றார்.

(ஸ்ரீ)

## புலமைப் பரிசில் பரீட்சையில் 8 வருடங்களின் பின் சாதனை


(யாழ்ப்பாணம்)

கடந்த 8 வருடங்களின் பின் யாழ்/துணவி அமெரிக்க மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலை மாணவன் ஒருவன் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்துள்ளான்.

பி.எஜிந்தன் என்ற மாணவனே இவ்வாண்டு நடைபெற்ற புலமைப்பரிசில் பரீட்சையில் 144 புள்ளிகளைப்பெற்று இச் சாதனையைப் புரிந்துள்ளான்.

பாடசாலை அதிபர் த.மாதவன் மற்றும் ஆசிரியர்கள் அனை வரினதும் விடா முயற்சியின் மூலமே இவ் வெற்றி கிட்டியுள் ளது.

கடந்த 8 வருட கால பரீட்சைப்பெறுபேறுகளை ஒப்பிட்டு பார்க்கும் பொழுது எல்லா மாணவர்களும் சிறந்த புள்ளி களை பெற்றுள்ளமை சிறப்பம்சமாகும். (ஸ்ரீ)



## “உங்களுக்குத் தெரியுமா” மாகாண மட்டப்போட்டியில் வெற்றியீட்டியோர்

(யாழ்ப்பாணம்)

வடமாகாணக் கல்வித் திணைக்களத் தால் கடந்த 9ஆம் திகதி வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தில் நடத்தப்பட்ட *உங்களுக்குத் தெரியுமா* மாகாணமட்டப் போட்டியில் வெற்றி பெற்று தேசிய மட்டப் போட்டியில் பங்குபற்றவுள்ள மாணவர்க ளின் விபரம் வடமாகாணக் கல்விப் பணிப் பாளரால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்போட்டியில் முதலிடத்தை பி.ஜன கன் (மு/மல்லாவி மத்திய கல்லூரி), இரண்டாமி டத்தை ரி.வின்சன் (யா/ கைதடி நாவற்குளி அ.த.க. பாடசாலை), ஆர். ஸ்ரீ திவாகரன் (யா/ நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்), நான்காமிடத்தை ஏ. ஆன். அபிநயா (யா/ வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), கே. மாதங்கி (யா/ நெல்லியடி மத்திய மகாவித் தியாலயம் ), ஆறாமிடத்தை பி.பி:டினின்னு கசுஸ்குமார (வவு/ பரகும்பா மகாத்தியால யம்), ஏழாமிடத்தை ரி.தட்சாயினி (மு/ யோக புரம் மகாவித்தியாலயம்) ஆகியோர் பெற்றுள் ளனர்.

(ஸ்ரீ)

## மாவட்ட மட்டப் பொது அறிவு போட்டியில் முதலிடம்

(யாழ்ப்பாணம்)

இந்து சமய ,கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் அகில இலங்கை ரீதியில் நடத்தப்பட்ட இந்து சமயப் பொது அறிவுப் போட்டியில் சங்கானை மாவடி ஞான வைரவர் அறநெறிப்பாடசாலையைச் சேர்ந்த தரம் 8 இல் கல்வி கற்கும் யோ. பிரசா ந்தன் மாவட்ட மட்டத்தில் முதலிடம் பெற்றுள் ளார். இதற்கான பரிசளிப்பு விழா எதிர்வரும் 17ஆம் திகதி புதன்கிழமை காலை 10 மணிக்கு கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ஸ்ரீ)

## கேதாரகௌரி விரத இலட்சார்ச்சனை

(யாழ்ப்பாணம்)

காரைநகர் திண்ணபுரம் சிவன் கோயி லில் (ஈழத்துச் சிதம்பரம்) கேதார விரத இலட் சார்ச்சனை தீபாவளி தினமான இன்று காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதில் அபிஷேகம், பூசை, இலட்சார்ச் சனை பூர்த்தி ,விசேட திரவிய ஹோமம், மஹா பூர்ணாகுதி, பிரதட்சண நமஸ்கார வழிபாடு என்பன நடைபெற்று சுவாமி உள் வீதி,வெளி வீதி உலா வலம் வருதல், கௌரி காப்புக் கட்டும் வைபவம் என்பன இடம் பெறும். (ஸ்ரீ)

# கேதார கௌரி நோன்பின் மகத்துவம்

கைங்கிரியின் சிகரத்தில் உமா சமேதராய் விளங்கும் பரமசிவன் பக்த கோடிகள் தரிசிக்கும் பொருட்டு தேவ சபையை ஏற்படுத்தி அதில் வீற்றிருக்கிறார். அப்பொழுது அந்த ரங்க பக்தராகிய பிருங்கி மகரிஷி பக்தியோடு விசித்திர விகட நாடகமொன்றை ஆடிக்காட்டுகிறார். பார்வதியும் அங்கே இருக்கிறார். தேவர்கள் ஆனந்தத்தால் சிரித்து மகிழ்கின்றார்கள்.

பரம சிவனும் பிருங்கியின் நாட்டியத்தில் மூழ்கித் திளைத்து மகிழ்கின்றார். பரம சிவனது அனுக்கிரகமும் பிருங்கிக்கு கிடைக்கிறது. அதனைக் கண்டு சபையோர் பிருங்கி மகரிஷியை பாராட்டுகின்றனர். அந்த நேரத்தில் பிருங்கி மகரிஷி பயபக்தியோடு பார்வதியை நீக்கிப் பரமசிவனை வலம் வந்து வணங்குகிறார்.

இதனால் பார்வதிதேவி கவலையடைந்தாள். இதனைக் கண்ணுற்ற சிவபொருமான்,தேவி , சிவயோகியாகிய பிருங்கி மகரிஷி முத்தி நிலையை விரும்பி நிற்பவர். அதை அடைவதற்கு உன்னை வணங்குவதால் பிரயேசனமில்லையென்ற திடசித்தம் கொண்டார். அதனால் உன்னை விட்டு என்னை மாத்திரம் வணங்கி சென்றார். என்று பார்வதிக்கு விளக்கம் கூறினார்.

பார்வதிதேவி வருத்தப்பட்டு பரம சிவனிடம் கோபம் கொள்கிறாள். கோபாவேசத்தில் தனது சக்தியின் கூறு பிருங்கி மகரிஷியினின்றும் அகலக் கடவது என்று கூறிவிடுகிறார். பிருங்கி மகரிஷியின் உதிரம் பிழிந்து சக்கையாகிறது அவர் நிற்பதற்கு முடியாது தள்ளாடுகிறார். அப்பொழுது பரமசிவன் பிருங்கியின் கையில் தண்டொன்று வரச் செய்கிறார். பிருங்கி தண்டின் உதவியுடன் ஆச்சிரமம் போய்ச் சேருகிறார்.



தேவிக்கு மேலும் கோபம் உண்டாகிறது. கைலையை விட்டு நீங்கி பூலோகத்திற்கு வருகிறார். வால் மீகி மகரிஷி சஞ்சரிக்கும் பூங்காவனத்தில் ஓர் விருட்சத்தின் அடியில் அமர்ந்திருக்கிறாள். அந்த இடத்தில் 12 வருடங்கள் மழை இன்றி கிடந்த விருட்சங்கள் எல்லாம் தளிர்த்து பூத்து மணம் வீசுவதை கண்டு அதிசயிக்கின்றனர்.

தேவி தாங்கள் கைலாச கிரியை விட்டு பூலோகத்திற்கு எழுந்தருள காரணம் என்ன? என்று கேட்டு விடுகிறார். தேவி தான் பூலோகம் வந்த கதையை சொல்கிறார். தேவியும் ஆச்சிரமத்திற்கு சென்று வால்மீகி மகரிஷி தேவிக்கென அமைந்துக் கொடுத்த ஆச்சிரமத்தில் நவரத்தின சிம்மாசனத்தில் வீற்றிருந்து "மகரிஷியே பூலோகத்தில் நான் விரதமொன்று அனுஷ்டிக்க வேண்டும் இருக்குமானால் அதனை எனக்கு கூறுங்கள்" என்றார்.

மகரிஷி தாயே தாங்கள் விரதமுகத்தோடு எழுந்தருளி இருக்கின்றீர்கள். அதை விடவா பூலோகத்தில் சிறந்த விரதம் ஒன்று உண்டு என்று கூறதேவி புன்னகைத்து தன் விரதத்தை ஆல விருட்சத்தின் கீழ் அமர்ந்து ஆரம்பிக்கிறாள். மண்ணிலே இலிங்கம் பிடித்து ஈஸ்வரனாக பாலித்து பூஜை செய்கிறாள். 21 நாள் பூஜை நிகழ்கிறது. 21 பழம், 21 அதிரசம், 21 வெல்ல உருண்டை, 21

**கேதாரகௌரி விரத பூர்த்தி விழா இன்றாகும்**

சந்தன உருண்டை, 21 மஞ்சள் உருண்டை நைவேத்தியமாக வைத்து தூபம் காட்டி வணங்குகிறார். 21 இழை எடுத்து தரித்து 21 முடி முடிந்து ஈஸ்வரனை தியானம் செய்து காப்புக் கட்டுகிறாள். காப்பணிந்ததும் பரமசிவன் பார்வதிக்கு காட்சி கொடுத்து தேவி உமக்கு என்ன வரம் வேண்டுமென்று கேட்கிறார். தேவி ஈசனை பார்த்து உமது தேகத்தில் பாதி எனக்கருள வேண்டும் என்று கேட்கிறாள் ஆகட்டும் என்கிறார் ஈஸ்வரன். என்னை நோன்பு நோற்று வரம் பெற்று உன்னை நோக்கி யார் இந்த 21 நாட்களும் விரதம் அனுஷ்டிக்கின்றார்களோ அவர்கள் உன் மூலம் சகல சௌபாக்கியங்களையும் அடைவர் என்ற வரமும் நல்கி பரமசிவன் பார்வதி சமேதராய் அர்த்தநாரீஸ்வர வடிவத்தோடு கைலையங்கிரிக்கு எழுந்தருளினார். அதிலிருந்து பூலோகவாசிகளால் கௌரி நோன்பு அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது. இந்த கௌரி நோன்பை அனுஷ்டித்து கைமேல் பலன் கண்டவர் பலர். இவ் விரதத்தின் அங்கங்களாக அமைந்தவை சங்கற்பம், நைவேத்தியம், தூபம், தீபம், அர்ச்சனை வலம் வருதல் என்பனவாகும்.

**தொல்புரத்தூர் க.லோகேஸ்வரன்**

ஆகவே இவற்றை ஒவ்வொருவரும் தாமாகவே செய்து விரதத்தை நிறைவேற்றுதல் விரும்பத்தக்கதாகும். விரும்பினால் அவரவர் இல்லங்களிலும் இதனைச் செய்து கொள்ளலாம். ஆனால் புனிதமான சூழ்நிலை அமைய வேண்டும். இலிங்கத்தின் அருகில் அம்பாள் திருவுருவையும் வைத்து அலங்கரித்து பூஜை செய்தல் மேலானது. 21 நாள் இவ் விரத்தை அனுஷ்டிக்க முடியாதவர்கள் இறுதி நாளில் எல்லாப் பூஜையையும் முடித்து கொள்ளலாம். ஆனால் வருடா வருடம் தொடர்ந்து அனுஷ்டிப்பதே முக்கியமானதாகும்.

# சட்டவிரோத துப்பாக்கிகள் வைத்திருந்த 20 பேர் மன்னார் பொலிஸாரால் கைது

மடு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குஞ்சுக்குளம் ,மாதா கிராமம் ஆகிய கிராமங்களில் சட்டவிரோதமான முறையில் பதுக்கிவைத்து வேட்டைக்கு பயன்படுத்தி வந்த இலங்கை தயாரிப்பான இடியன் என அழைக்கப்படும் வேட்டைத் துப்பாக்கிகள் 21 ஐ மன்னார் பொலிஸார் பறிமுதல் செய்ததோடு அதனை தம்வசம் வைத்திருந்த 20 பேரையும் கைது செய்துள்ளனர்.

வன்னிக்கான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரசன்னா நாணயக்காரவின் வேண்டுகோளுக்கமைவாகவும் மன்னார் மாவட்ட பொறுப்பதிகாரி சி.கொடிதுவக்குவின் ஆலோசனைக்கமைவாகவும் மன்னார் பொலிஸார்மேற்படி கிராமங்களில் தேடுதல்களை மேற்கொண்டனர்.

இதனையடுத்து பொலிஸ் நிலைய அதிகாரிகள் மடுப்பொலிஸ் நிலையத்திற்கு சென்று அதனைப் பார்வையிட்டனர்.கைது செய்யப்பட்டவர்களிடம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-2)

# போக்குவரத்து விதிகளை மீறியோரிடமிருந்து 2 கோடியே 34இலட்சம் ரூபா அபராதம்

அம்பாறை மாவட்டத்தில் இவ்வருடம் இதுவரை போக்குவரத்து விதிமுறைகளை மீறியோரிடமிருந்து இரண்டு கோடியே முப்பத்தி நான்கு இலட்சம் ரூபா அறவிடப்பட்டுள்ளதாக அம்பாறை மாவட்ட போக்குவரத்துப் பொலிஸ் பிரிவு உயரதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.இதில் மதுபோதையில் வாகன மோட்டிய 453 பேரும் உள்ளடங்குவதாக தெரிவிக் கப்படுகிறது.

இவ்வாறு குற்றம் புரிந்தோரை நீதிமன்றில் ஆஜர் செய்தும் உடனடி தண்டப்பணம் அறவிட்டும் மேற்படி தொகை அறவிடப்பட்டுள்ளது.

கடந்த 10ஆம் திகதி வரை மாவட்டத்தில் 610 வாகன விபத்துக்கள் இடம்பெற்றுள்ளதுடன் இதில் 60 பாரிய வீதி விபத்துகள் இடம் பெற்றுள்ளன. மேலும் 61 பேர் உயிரிழந்துள்ளனர்.

இம்மாவட்டத்தில் இடம்பெறும் வீதி விபத்துக்களைக் குறைக்கும் நோக்கில் பொலிஸ் சமூக நல பிரிவின் உதவியுடன் மாவட்ட போக்குவரத்துப் பொலிஸ் பிரிவினால் அறிவுறுத்தல் கருத்தரங்குகள் நடத்தப்பட்டு வருவதாகவும் மாவட்டம் முழுவதும் ஒரேநாளில் ஒரேநேரத்தில் திடீர் சுற்றி வளைத்துத் தேடும் நடவடிக்கைகளினாலும் வீதி விபத்துக்கள் குறைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அம்பாறை பிரிவுக்குப் பொறுப்பான போக்குவரத்துப் பொலிஸ் பிரிவின் பொறுப்பதிகாரி துஷார ஹேமந்த தலைமையில் இந் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. (ஸ்ரீ-2)




## குறைகேள் அரங்கு

# குன்றும் குழியுமாகவுள்ள வீதியால் போக்குவரத்தை மேற்கொள்வதில் இடையூறு!

பலாலி வீதியில் , கோண்டாவில் பஸ் டிப்போவுக்கு முன்பாகவுள்ள சந்தியில் ஆரம்பிக்கும் கலைவாணி வீதியானது அன்னங்கை வீதி வழியாகச் சென்று இணுவில் சந்தி காங்கேசன்துறை வீதியை அடைகின்றது.

தற்பொழுது இணுவில் சந்தியில் இருந்து அன்னங்கை வரையிலான வீதி செப்பனிடப்பட்டுள்ளது.



ஆனால் அன்னங்கை வீதியிலி ருந்து டிப்போ சந்தி வரையிலான கலைவாணி வீதி அதாவது பரஞ் சோதி வித்தியாலயம் அமைந்துள்ள வீதி மிக மோசமாக சேதமடைந்து குன்றும் குழியுமாகக் காட்சியளிக்கின்றது.

இதனால் இவ்வீதியூடாக பயணம் செய்யும் மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இவ்விடயத்தைக் கருத்திற் கொண்டு மக்களின் போக் குவரத்தை இலகு படுத்துமாறு கேட்டுக் கொள் கின்றேன்.

இ.எஸ். கஜேந்திரன்
கோண்டாவில் வடக்கு

# ஜயலத் ஜயவர்த்தன எம்.பி இந்தியாவுக்கு விஜயம்

(கொழும்பு)

தமிழகத்தில் தஞ்சமடைந்துள்ள இலங்கைத் தமிழ் அகதிகளின் நிலைமைகள் குறித்து ஆராயும் நோக்கில் ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன இந்தியாவிற்கு விஜயம் செய்துள்ளார்.

யுத்தம் நிறைவடைந்துள்ள நிலையில் பல இலங்கைத் தமிழ் அகதிகள் இலங்கை திரும்ப விருப்பம் தெரிவித்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறெனினும், குறித்த மக்களின் அநேகமான சொத்துக்களை வேறு நபர்கள் கைப்பற்றிக் கொண்டுள்ளதாக அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கை அரசாங்கத்தினால் தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் மீள் குடியேற்ற நடவடிக்கைகள் குறித்தும் மக்கள் அதிருப்தி அடைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை தமிழக அரசாங்க உயரதிகாரிகளுடன் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன பேச்சுவார்த்தை நடத்த உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-2)

# ஆயுதப் போராட்டமொன்றை ஆரம்பிக்க ஜே.வி.பி முனைப்பு

## அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவிப்பு

ஜே.வி.பியின் நடவடிக்கைகளில் ஆயுதப் போராட்டத்திற்கான அறிகுறிகள் தென்படுவதால், அதன் மாணவர் அமைப் பான பல்கலைக்கழங்களுக்கு இடையிலான அமைப்பை உடனடியாக அரசுதடை செய்யவேண்டும் என அமைச்சரும் முன்னாள் ஜே.வி.பி. உறுப்பினருமான விமல் வீரவசன்ச தெரிவித்துள்ளார்.

ஜே.வி.பியின் மாணவர் அமைப்பு பல்கலைக்கழக மாணவர்களிடம் உறுதியற்ற தன்மையை ஏற்படுத்தி வருகின்றது. நாம் ஜே.வி.பியினதும் மாணவர் அமைப்பினதும் நடவடிக்கைகளை கூர்ந்து அவதானித்து வருகின்றோம். அது தொடர்பான அறிக்கை யும் பாதுகாப்பு அமைச்சிடம் கையளிக்கப்பட் டுள்ளது என அவர் மேலும் குறிப்பிட்டார். (ஸ்ரீ-2)

# தீபாவளி சிறப்புமலர் – 2010

தீபத்திருநாளாம் நன்நாளில் எம் இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்

அழகுக்கு அழகு சேர்க்கும் நவீன அழகிய
தங்க நகைகளுக்கு சிறந்த இடம்

ஆசைப்பிள்ளை அன் சன்
நகைமாடம்



தரம் நாடுவோர்
தவறாமல்
நாடுமிடம்

இல.10,
பஸ் நிலையம்,
சங்கானை.



ஓம் லக்ஷ்மி நாராயணா துணை

வாழ்வை
ஒளி மயமாக்கிட
வருக தீபாவளியே!

மொத்தமாகவும் சில்லறையாகவும்
பல்பொருட்களை பெற்றுக் கொள்ளலாம்

New
Sri Thiruppathy Traders
நியூ ஸ்ரீ திருப்பதி ரேடர்ஸ்



No.151, K.K.S Road,
Jaffna.
T.P:- 021 222 1524

வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்

உடல் வளர்ச்சிக்கு

ஜீவாகாரம்

உள்ளூர் உற்பத்தியான ஜீவாகாரம் சிறியோர் முதல் பெரியோர்
வரை பாவிக்க உகந்த சத்துணவு. இரசாயனக் கலவை அற்றது




உள்ளூர் உற்பத்திகளுக்கு ஆதரவு வழங்குவோம்
என்றும் மக்கள் விரும்பிப் பாவிப்பது
அண்ணா தயாரிப்புக்களே!

அண்ணா கோப்பி
அண்ணா அரிசி மா
குரக்கன் மா
ஆட்டா மா
அண்ணா மிளகாய்த் தூள் வகைகள்
அண்ணா பத்தி வகைகள்
அண்ணா பற்பொடி
அண்ணா இனிப்பு வகைகள்

அண்ணா தொழிலகம்

இணுவில் தொலைபேசி இல: 021 222 3565

தித்திக்கும் தீபாவளி நல்வாழ்த்துக்கள்

L கிருபா லேணர்ஸ் L

யாழ் நகரில் முன்னணி பயிற்றுவிப்பாளர்கள்

அரச அங்கீகாரம் பெற்ற சாரதிப் பயிற்சிப் பாடசாலை
பதிவு எண் D.S.589

- எழுத்துப் பரீட்சையில் சித்தி எய்த விசேட வீதி ஒழுங்கு வகுப்புகள் நடைபெறும்.
- ரெயல் பரீட்சையில் சித்தியடைய வான், ஓட்டோ மற்றும் சிறிய ரக, பெரிய ரக மோட்டார் சைக்கிள்களில் விசேட வாகனப் பயிற்சி வழங்கப்படும்.
- அரச, தனியார் ஊழியர்களுக்கு தாம் விரும்பிய நேரங்களில் வாகனப் பயிற்சி அளிக்கப்படும்.
- நலன்புரி முகாம்களில் இருந்து வந்தவர்களுக்கு விசேட கழிவு வழங்கப்படும்.
- தவணை முறையிலான கட்டணம்.
- குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் மிக விரைவாக சாரதி அனுமதிப் பத்திரம் பெற ஒழுங்குகள் செய்து தரப்படும்.

உரிமையாளர் அ.கிருபாகரன்

தலைமை: 226, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ. பே: 021 222 4353
0777225292

கிளை: மகாத்மா வீதி,
நெல்லியடி
தொ. பே: 021 3006550

# தீபாவளி சிறப்புமலர் – 2010

## நல்லை ஆதீன முதல்வரின் தீபாவளி வாழ்த்துச் செய்தி



இன்று தீபாவளிப் பண்டிகை. இந்தத் தீபாவளி நன்னாள் தமிழ் பேசும் மக்களின் இனிய ஒரு பெருநாளாகும்.

இந்த இனிய தீபாவளிப் பண்டிகை நாளில் புத்தாடைகளை அணிந்து புதுப் பொலிவுடனே உளப் பூரிப்புடன் உற்றார், உறவினர், இனசன பந்துக்களுடன் தித்திப்புப் பண்டங்களை உண்டு மகிழ்ந்து களிப்புடன் வாழ்வர்.

இன்றைய மங்களகரமான தீபாவளி நாளில் அனைத்து மக்களும் ஆனந்த பரவசத்துடன் சந்தோஷமாக வாழ்ந்து சிறப்புடன் திகழ எல்லாம் வல்ல நல்லைக் கந்தப் பெருமான் திருவருள் புரிய வேண்டுமென்று உளமாரப் பிரார்த்தித்து அருளாசிகளை வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

இந்த இனிக்கும் மங்கள நன்னாளில் எல்லோரும் இன்புற்றிருக்க நல்லாசிகள் நல்கி உள மகிழ்வுடன் வாழ்த்துக்கள் கூறி இறும்பூதெய்துகின்றோம்.

*என்றும் வேண்டும் இன்ப அன்பு*

**ஆதீன குரு முதல்வர் ஸ்ரீல ஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம் பந்த பரமாச்சார்ய சுவாமிகள்,**
**இரண்டாவது குருமஹா சந்நிதானம், நல்லை திரு ஞானசம்பந்தர் ஆதீனம், யாழ்ப்பாணம்.**



### ஒளிரும் தீபாவளி

தோற்காமல் வாழ்வதற்கும்
துவளாமல் மீள்வதற்கும்
தூற்றாமல் இருப்பதற்கும்
தூயதாய் நினைப்பதற்கும்
போர்க்காலம் மறைவதற்கும்
போதைகள் ஒழிவதற்கும்
ஊர் கோலப் பண்டிகையே
ஒளிரும் தீபாவளி

*கே.எஸ்.சிவஞானராசா*
*கொக்குவில்.*

## தீபத்திருநாளில் திருவருள் திக்கெட்டும் பரவட்டும்



இந்து மக்களின் பண்டிகைகளில் தமிழ்ப்புத்தாண்டு, தைப்பொங்கல் , தீபாவளி ஆகிய மூன்றும் முக்கியத்துவம் பெறுகின்றன. அந்த வகையில் தீபாவளி திருநாள் அதிக முன்னிலை பெறுகின்றது.

இந்த ஆண்டு தீபாவளி சுக்கிரவாரத்தில் வருவது இந்துப் பெருமக்களுக்கு இரட்டிப்பு மகிழ்ச்சியைத் தருகின்றது. அன்று அனைவரும் புத்தாடை அணிந்து இறைவணைத் தரிசித்து இறையருள் பெறுவது அவசியம். எனவே இத்திருநாளில் திருவருள் திக்கெட்டும் பரவ திருவருளும் குருவருளும் கிடைக்க இறைவனை இறைஞ்சி வேண்டிப் பிராா்த்தித்து எனது உள்ளார்ந்த நல் வாழ்த்துக்களையும் நல்லாசிகளையும் தெரிவித்து அமைகின்றேன்.

**"லோகா சமஸ்தா சுகினோ பவந்து"**

**சிவ ஸ்ரீ சோமஸ்கந்த தண்டபாணிகதேசிகர் (ஜே.பி) ,**
**பிரதமகுரு, வல்வை ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தானம், சிவாச்சாரிய பீடாதிபதி,**
**அகில உலக சைவக்குருமார் சம்மேளனம்.**

### தித்திக்கும் தீபாவளி !

அற்புத ஜோதி ஆனந்த ஜோதி
அகிலத்தை உயர்த்தும் அருட்பெரும் ஜோதி
வள்ளலால் கண்ட வாழ்க்கை ஜோதி
நமக்குத் தானே இதயத்தின் ஜோதி
இன்பமும் இனிமையும் உருவாக்க
வானத்து வீதியில் வண்ணநிலா
விளக்கேற்ற வாழ்வில் எல்லா
நலன்களும் நன்மைகளாம் எம்
இதயம் என்னும் கலத்தில்
நினைப்பென்னும் பாலூற்றி
எம் திருநாட்டின்
வளங்களை பேணும்
வழிகளைத் தேடியே
வசந்தத்தை காண்போம் இத்
தீபத்திருநாளில் மலர்
கொண்டு வாழ்த்துகிறோம் வாழ்கவே.



*கந்த.ஞானமுத்து*
*கைதடி மேற்கு.*

### தீபாவளித் திருநாள்

தீபாவளி பெருநாள்
தீபங்களின் ஒளிநாள்
வறுமைக்கு கொடுமைக்கு
விடிவுகாணும் திருநாள்
உரிமையோடு வாழ்வதற்கு
உண்மை செப்பும் தனிநாள்
கூடி மகிழ்ந்து வாழ்ந்திடவே
கோலமிடும் கோடிநாள்
சாதனையை பெருக்கிடும்
சரித்திரக் கதை நாள்
சித்திரத்தின் சோலையாய்
பூக்கின்ற இசைநாள்



*வே.அகிலேஸ்வரன்*
*மருதங்கேணி*

### ஆறுதலை அளிப்பாய் தீபாவளியே!

வெள்ளித் தினமன்று உள்ளத்துள் உதித்த
வண்ண ஒளியே தீபாவளியே
இல்லமும் இன்றி இருப்பிடமும் இன்றி
இடர் மடத்தில் இடர்ப்பட்டோர்
அல்லல்தனை நீக்கி நல்லவழி காட்டி
ஆறுதலை அளிப்பாய் அருளொளியே
இல்லையினி இன்னலென அன்புக்கொடி நாட்டி
அமைதியோடு வாழவைப்பாய் அன்பொளியே!

*க.அருமைநாயகம்*
*குளப்பிட்டி.*

## தீமைகள் அகல தீபங்களை ஏற்றி தீபத்திருநாளில் வழிபடுவோம்

ஒவ்வோர் சமூகத்தவர்களாலும் பல்வேறு விதமான பண்டிகைகள் கொண்டாடப்பட்டுவரினும் இந்துப் பண்டிகைகளில் ஒன்றான தீபாவளி இருள்நீக்கி ஒளிதரும் தீபத்திருநாளாக அமைகின்றது. தீபாவளி என்பது *(தீபம்-ஒளிவிளக்கு ஆவளி - வரிசை)* வரிசையாக விளக்கேற்றல் எனப் பொருள்படும். இதனை ஐப்பசி அமாவாசை அன்று கொண்டாடப்படுகின் றது.

சமயரீதியாக தீபாவளி கொண்டாடுவதற்கு பல காரணங்களை புராணக்கதைகளின் மூலம் அறியலாம்.

**இந்துக்கள்:-**

01.இராமன் பதினான்கு வருடங்கள் வனவாசம் முடித்து, நாடு திரும்பும் போது மக்கள் விளக்கேற்றி வரவேற்ற இந்நாளே தீபாவளி.

02. கிருஷ்ணன் நரகாசுரன் என்ற அசுரனைக் கொன்ற போது, அவன் தான் இறக்கும் தினத்தை மக்கள் கொண்டாட வேண்டும் என்று கேட்ட வரத்திற்கிணங்க தீபாவளி மகிழ்ச்சியாகக் கொண்டாடப்படுகின்றது.

03.கந்தபுராணத்தின்படி சக்தியின் 21 நாள் கேதார விரதம் முடிவுற்றது. இத்தினத்தில் தான் விரதம் முடிந்த பின்னர் சிவன், சக்தியை தன்னில் ஒரு பாதியாக ஏற்று அர்த்தநாரீஸ்வரர் உருவமெடுத்த இத்தினம் தீபாவளி.

**சீக்கியர்கள்:-**

1577 இல் இத்தினத்தில் தங்கக் கோயில் கட்டுமானப் பணிகள் தொடங்கியதையே தீபாவளியாக கொண்டாடுகின்றனர்.

**சமணர்கள்:-**

மகாவீரர் நிர்வானம் அடைந்த தினத்தை நினைவு கூர்ந்து இத்தினத்தை கொண்டாடுகிறார்கள்.

இவ்வாறு ஒவ்வோர் சமயத்தவர்களும் தமக்கு ஒளிகிடைத்த/இருள் அகன்ற நிலைகளை வெளிப்படுத்தும் முகமாக தீபாவளியை கொண்டாடி வருகின்றனர்.

இந்நாளில் அனைவரும் அதிகாலையில் எழுந்து நீராடி, புத்தாடை அணிந்து, வீடுகளை விளக்குகளால் அலங்கரித்து, வெடிகள், பட்டாசுகள் கொளுத்தி, பரிசுகள் பரிமாறி, ஆலயங்களில் விசேட பூஜைகள் செய்து மனமகிழ்வாக கொண்டாடுகின்றனர். இவ்வளவு காலமும் நாம் தீபாவளி கொண்டாடிய முறையில் இருந்து இத்தீபாவளியை, உங்களைக் கொஞ்சமும் எதிர்பார்த்திராத ஏழைகளின் குடிசைக் கதவைத் தட்டி சில நிமிடங்களில் வெடித்தும் எரித்தும் கரைக்கும் பணத்தை இவர்களுக்கு கொடுத்தால் ஏழையின் சிரிப்பில் நரகாசுரன் அழிவான். அத்துடன் மனிதத்தின் ஆழத்தை அறிவியுங்கள்.

*அ.நிசாந்தி*
*சமூகவியல்துறை,*
*யாழ்.பல்கலைக்கழகம்.*


தித்திக்கும் தீபாவளியில் இல்லத்தில் இன்பம் பெருகட்டும்



**ஞானம்ஸ் ரெக்ஸ்ரைல்ஸ்**

திருமணப் பட்டுப் புடைவைகளுக்கும்
நவீன ரக ஆடைத் தெரிவுகளுக்கும்
சிறுவர், சிறுமியர்களுக்குகான சிறந்த றெடிமேற் ஆடைகளுக்கும்

**ஞானம்ஸ் ரெக்ஸ்ரைல்ஸ்**

18A, நவீன சந்தை, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம். தொ.பே: 021 222 5679



மீண்டும் பாதுகாப்பான பயணத்துக்கு
யாழ்–கொழும்பு–யாழ், யாழ்–வவுனியா–யாழ்.

சொகுசு வான்


**யோகாஸ் கொமினி கேசன்**

பிரதான வீதி, வட்டுக்கோட்டை. தொ.பே: 021 321 5270

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு A வழங்கும்...

# எமது வளிமண்டலத்தில் ஓசோன்

ஓசோனானது எமது வளிமண்டலத்தில் இயற்கையாக காணப்படும் ஒருவாயுவாகும். மூன்று ஒட்சிசன் அணுக்களால் ஆக்கப்பட்ட ஒரு மூலக்கூறே ஓசோனாகும் ($O_3$). ஓசோனானது வளிமண்டலத்தில் இரு பகுதிகளில் வெவ்வேறு விகிதங்களில் காணப்படுகின்றது. புவிக்கு அண்மையிலுள்ள மாறன் மண்டலத்தில் (troposphere- புவிமேற்பரப்பிலிருந்து ஏறத்தாழ 10-16 km உயரத்தில்) 10%ஆன ஓசோனானது காணப்படுகின்றது. 90% ஆன ஓசோனானது புவி மேற்பரப்பிலிருந்து ஏறத்தாழ 16-50km வரையான உயரத்தில் காணப்படுகின்றது. ஆனால் ஓசோனானது கடல் மட்டத்திலிருந்து 16-25km வரையான உயரத்தில் மிகவும் செறிவாகக் காணப்பட்டு, சூரியனிலிருந்து வெளி வருகின்ற புற ஊதாக்கதிர்களில் பெரும்பகுதி பூமியை அடையாது தடுக்கும் கவசமாகத் தொழிற்படுகின்றது.




1000μm- 250nm அலைநீளங்களையுடைய மின்காந்த அலைகள் சூரியனிலிருந்து காலப்படுகின்றன. ஒப்பீட்டளவில் அலை நீளம் கூடிய கட்புல மற்றும் ஊதா கடந்த கதிர்கள் வெப்பம், ஒளி என்பவற்றை வழங்குகின்றன. இக்கதிர்களே புவிக்கால நிலையைத் தீர்மானிப்பவையாக உள்ளன. UV கதிர்கள் குறைந்த அலைநீள முடைய, உயிரினங்களில் ஆபத்தை ஏற் படுத்தும் கதிர்களாகும். இந்த UV கதிர்வீச் சானது மூன்று வகையாகப் பிரிக்கப்படு கின்றது.

- **UV-A கதிர்கள்** - இவை 315-400nm வரையான அலைநீளமுடையவை. இக்கதிர்கள் உயிரினங்களில் பாதிப்பை ஏற்படுத்தும் அளவு குறைவாகும்.
- **UV-B கதிர்கள்** - இவை 280 -315nm வரையான அலைநீளமுடையவை. விலங்குகளும், தாவரங்களும் தொடர்ச்சியாக இக்கதிர்வீச்சுக்கு உட்படுகையில் மிகக்கூடியளவில் பாதிக்கப்படுகின்றன.
- **UV-C கதிர்கள்** -இவை $<280nm$ அலை நீளமுடையவை. சகல உயிரிகளிலும் பாதிப்பை ஏற்படுத்தவல்லன.

$O_3$ மற்றும் ஏனைய வளிமண்டல வாயுக்கள் ($O_2$ போன்றவை) UV-C கதிர்ப்புக்களை முற்றாக உறிஞ்சும் ஆற்றலைக் கொண்டுள்ளன. ஒசோன்னது UV-B கதிர்ப்புக்களை உறிஞ்சும் ஆற்றல் குறைவாகும் படை மண்டலத்தில் (Stratosphere) காணப்படும் $O_3$ இன் அளவு குறைவடைகையில், உயிரினங்களிற்குத் தீங்கு விளைவிக்கும் கதிர்கள் UV-B கதிர்கள் பூமியை வந்தடைந்து உயிரினவியல் செயற்பாடுகளில் பாதிப்புகளை ஏற்படுத்துவதோடு , இரு வகையான தோல் புற்றுநோய்கள் (basal cell carcinoma, malignant melanoma) ஏற்படவும் காரணமாக அமைகின்றன. உயிர்ப்புள்ள தோலின் நடுப்படையிலுள்ள கலங்களில் UV-B கதிர்ப்புக்கள் பாதிப்பை ஏற்படுத்துவதால் மனிதர்கள், குறிப்பாக வெள்ளைத் தோலையுடையவர்கள், இவற்றுக்கெதிராக கூடிய கவனமெடுக்க வேண்டியவர்களாக உள்ளார்கள். இருப்பினும், குறைந்த செறிவுள்ளUV-B கதிர்ப்புக்களுக்கு எமது உடலானது வெளிக்காட்டப்படுகையில் ஏற்படும் நன்மை தரும் விளைவு மெலனின் உற்பத்தியாக்கலாகும். இதற்குச் சான்றாக சூரிய ஒளியில் செல்கையில் தோலானது கபிலநிறமாக மாற்றமடைதலைக் குறிப்பிடலாம். இவ்வாறு மெலனின் தோற்றுவிக்கப்படுவதால் தோலானது மேலும் பாதிப்படைவதைத் தடுக்கக் கூடியதாயுள்ளது. UV-A கதிர்ப்புக்கள் மிகக் குறைந்த பாதிப்புக்களை ஏற்படுத்துவதாக அறியப்பட்டிருந்தாலும் தொடர்ந்து இக் கதிர்வீச்சுக்கு உட்படுகையில் கலங்களில் பாதிப்பை ஏற்படுத்தி முதிர்ச்சியடைதலைத் தூண்டுகின்றன.

ஆபத்தான சூரியக்கதிர்ப்புக்கள் தோலை ஊடுருவாமல் தடுப்பதற்கு சூரியத் திரைகளும் (sunscreens) , சூரியத் தடைகளும் (sun blocks) தற்போது பயன்படுத்தப்படுகின்றன. Benzyl salicylate,cinnamate என்பன சூரியத் திரைகளாகப் பயன்படுத்தப்படுகின்றன.

இவை 250 - 325nm வரையான அலைநீளமுள்ள கதிர்ப்புக்கள் எமது உடலை ஊடுருவாது தடுக்கும் கவசமாகத் தொழிற்படக் கூடியன. இவை சுயாதீன மூலிகங்களை நீக்குவதன் மூலம், மேலதிக பாதுகாப்பையும் வழங்குகின்றன.

சூரியத் தடைகள் திண்மத் துணிக்கைகளால் ஆக்கப்பட்டவை. இவை நாக ஒட்சைட்டிலிருந்து அல்லது ரைற்றேனியம் இரு ஒட்சைட்டிலிருந்து தயாரிக்கப்படுகின்றன. இவை கதிர்ப்புக்களைத் தோல் மேற்பரப்பிலிருந்து தெறிப்படையச் செய்வதன் மூலம் கதிர்ப்புக்கள் உடலை அடையாது தடுக்கின்றன.

ஓசோனானது படை மண்டலத்தில் தொகுக்கப்படுதலும் பிரிவடைதலும் 4 படி முறைகளினூடாக நடைபெறுவதாக chapman என்பவரால் முதன் முதலில் கூறப்பட்டது.

$O_2 + h\nu\ (\lambda<240nm) \rightarrow O+O$ வேகம் குறைந்தபடி

$O+O_2 +M \rightarrow O_3+M$ வேகம் கூடிய படி

$O_3 +h\nu\ (\lambda \sim 230\text{-}320nm) \rightarrow O_2+O^{\cdot}$ வேகம்கூடியபடி

$O +O_3 \rightarrow O_2+O_2$ வேகம் குறைந்தபடி

### ஓசோன் படை அழிவடைதலைத் தூண்டும் ஊக்கிகள்

வேறுபட்ட இரசாயனப் பதார்த்தங்கள் ஓசோன் படையின் அழிவுக்குக் காரணமாக அமைகின்றன. இவற்றில் சில இயற்கையில் காணப்படுவனவாகவும், வேறு சில அண்மைக்காலக் கைத்தொழில், விவசாயத் துறைகளின் பாரிய அபிவிருத்தியினால் உருவாக்கப்பட்டனவாகவும் உள்ளன.

மூன்று வகையான சுயாதீன மூலிக ஊக்கிகள் காணப்படுகின்றன.

- $HO_x$ - $H^{\cdot}$, $^{\cdot}OH$, $HOO^{\cdot}$
- $NO_x$ - $^{\cdot}NO$ , $^{\cdot}NO_2$
- $ClO_x$ - $^{\cdot}Cl$,$ClO^{\cdot}$

புவியிலிருந்தான தூரத்தினடிப்படையில் ஒவ்வொரு வகையான மூலிகமும் ஓசோனை அழிக்கும் அளவு வேறுபடுகின்றது. பூமியிலிருந்து 50km உயரத்தில் மொத்தப் பொறிமுறையில் 70% ஆனவை $HO_x$ மூலிகங்களால் அழிக்கபபடுகின்றன. ஏறத்தாழ 30km தூரத்தில் $NO_x$ ஊக்கியாகச் செயற்பட்டு நடைபெறும் $O_3$ அழிவு பிரதானமாகக் காணப்படுகின்றது.

1960 களில் சுப்பசொனிக் விமானங்கள் தோற்றம் பெற்று படை மண்டலத்தின் 17-20km உயரத்தில் பயணித்ததால் கருதத்தக்க அளவு $O_3$ அழிவுக்கு காரணமாகியுள்ளன.

**செல்வச்சந்திரன் மாலதி,**
இரசாயனவியல்துறை
(உதவி விரிவுரையாளர்)
விஞ்ஞானபீடம்

இவை $20000kgh^{-1}$ எரிபொருளை நுகர்ந்து 160kg $NO_x$ ஐயும் 2500kg நீரை யும் ஒரேநேரத்தில் வெளிவிட்டன. இதனால் இலை $^{\cdot}OH$ களின் அதீத உற்பத்திக்கு காரணமாகின.

$O(^1D) +H_2O \rightarrow 2^{\cdot}OH$

$H_2O + h\nu \rightarrow {^{\cdot}H}+{^{\cdot}OH}$

$^{\cdot}OH+O_3 \rightarrow HOO^{\cdot}+O_2$

$HOO^{\cdot} + O \rightarrow {^{\cdot}OH} +O_2$

(வெள்ளி தொடரும்)

## வாரத்திற்கு ஒரு புதிர்! 31

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 23 | 4 | 16 | 54 | 25 | 81 | X | 49 |

X குறியிட்ட இடத்தில் வரும் எண் என்ன?

**விடைகளை 15-11.2010 இற்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்ப வேண்டிய முகவரி:**

Mr. S.Selvarajan
Editor, Section A
Jaffna Science Association
Dept. of Mathematics & Statistics,
University of Jaffna, Jaffna.

**சரியான விடையை அனுப்பும் அதிர்ஷ்டசாலிக்கு ரூபா 250/- பணப்பரிசு வழங்கப்படும்.**

இப் பணப்பரிசினை யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீட இரசாயனவியல் துறையில் கலாநிதி மீனா செந்தில்நந்தனனிடம் (தலைவர் பிரிவு A) நேரில் சென்று பெற்றுக் கொள்ளலாம்.

**பரிசுக்கு அனுசரணை வழங்குவோர்:**
மக்கள் வங்கி,
யாழ்.பல்கலைக்கழகம்.

**புதிர் 30க்கான 250/-பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி**

**கீர்த்தனா கந்தசாமி**
**இல 283/18 புகையிரத வீதி,**
**நீராவியடி ,கந்தர்மடம்,**
**யாழ்ப்பாணம்.**

**புதிர் 30 இற்கான விடை :** X=0.9999... என்க

10 X=9.9999...

⇨ 9X=9

⇨ X=1

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்
## புதிர் இல . 31

சரியான விடை :....................................
முழுப்பெயர் :....................................
முகவரி :....................................
:....................................
தொ.பே. இல :....................................
கையொப்பம் :....................................

# தீபாவளி சிறப்புமலர் – 2010

தீபத்திருநாளாம் நன்நாளில் உலகெங்கும் ஒளி வீசட்டும்!
நவீன அழகிய தங்க ஆபரணங்களுக்கு சிறந்த ஸ்தாபனம்
அசோகா நகை அகம்
நம்பிக்கை நாணயம் - உத்தரவாதம் - 22 கரட் தங்க நகைகளுக்கு
ASOKA JEWELERS
இல: 111 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P.: 021 222 6290

தீபாவளி நல் வாழ்த்துக்கள்
ஆர். வி.ஜி மருந்தகம்
504, ஆஸ்பத்திரி வீதி, (O.P.D முன்பாக).யாழ்ப்பாணம்.
தொ.பே.இல: 021 222 2129
ஆங்கில மருந்து வகைகள், ஊட்டச்சத்துக்கள் மற்றும் பால்மா வகைகள் அனைத்தையும் நியாயமான விலையில் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்
R.V.G ஸ்தாபனம்
58, நல்லூர் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.
தொ. பே. இல : 021 222 6806

எமது வாடிக்கையாளர்களுக்கு தீபாவளி நல் வாழ்த்துக்கள்
சகல பாமசி & குறோசரீஸ் பொருட்களையும்
நியாயமான விலையில் பெற்றுக் கொள்ள
ரூபா பன் முக வர்த்தகம்
இல:104A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
T.P:- 021 222 2479

HOLCIM CEMENT
Happy Deepawali




Jaffna District Batas
யாழ். ஏக விநியோகஸ்தர்கள்
SRI RANGAN ENTERPRISES
370, Hospital Road, Jaffna.
ஸ்ரீ றங்கன் என்ரப்பிறைஸ்
370, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
T.P - 021 222 2027

Selva Hardware
120, Stanley Road, Jaffna.
செல்வா காட்வெயர்
120, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்
T.P - 021 222 2873

DELMEGE- மில்க்குரோ , பேக்கிங்பவுடர் , ஜாம் , ஐசிங்சுகர் , ரின் மீன் , TVP சோயாமீற், ஜெலற்றீன், புடிங், நூடில்ஸ் ,கஸ்ரட் பவுடர், கரமல், வட்டிலப்பம், கொக்கோப்பவுடர் அனைத்தையும் சில்லறையாகவும் மொத்தமாகவும் பெற்றுக் கொள்ள நாட வேண்டிய ஸ்தாபனம்.

Lanka milk Food
Dairy farm
My juice
Farleys Rusk 150g
Casilian 250g
Corn Flaskes
Farleys Rusk 60g
Casilian 120g
Happy Cow Cheese

# ஏகாதிபத்திய ஆட்சிக்கு எதிராக அனைவரும் அணி திரள வேண்டும்

## ரணில் தெரிவிப்பு

அரசாங்கத்திற்கு எதிரான மக்களின் எதிர்ப்பலை அதிகரித்



தாகவும் மக்களின் அதிருப்தியை கட்டுப்படுத்துவதற்காக அரசாங்கம் அடக்கு முறைகளை பிரயோகித்து வருவதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டுவரும் ஏகாதிபத்திய ஆட்சிக்கு எதிராக அனைத்து மக்களும் அணி திரள வேண்டும் என அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவை படுகொலை செய்ய முயற்சித்த நபருக்கும் நாட்டை பயங்கரவாதத்திலிருந்து மீட்டு எடுத்த முன்னாள் இராணுவத் தளபதி சரத்பொன்சேகாவிற்கும் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளதாகவும் இதில் விடுதலைப்புலி உறுப்பினருக்கு நீதிமன்றமும் சரத்பொன்சேகாவிற்கு அரசாங்கமும் தண்டனை விதித்துள்ளது என அவர் தெரிவித்துள்ளார். தாக்குதல்களை திட்டமிட்ட விநாயகமூர்த்தி முரளிதரன் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் துணைத் தலைவராகவும் மீள்குடியேற்ற பிரதி அமைச்சராகவும் கடமையாற்றி வருவதாக ரணில் விக்கிரமசிங்க சுட்டிக்காட்டியுள்ளார்.

அமைச்சர்கள் ,மதத்தலைவர்கள் ,ஊடகங்கள் என அனைத்து தரப்பினரையும் அரசாங்கம் அச்சமூட்டி வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# இலங்கையின் வடபகுதியில் "தோரியம்" கனிமவளம்

## சர்வதேச ஊடகம் தகவல்

(கொழும்பு)

இலங்கையில் தமிழ் மக்கள் செறிந்து வாழும் வட பகுதியில் அதிக பெறுமதியும் முக்கியத்துவமும் கொண்ட தோரியம் எனப்படும் கனிம வளம் அதிகம் உள்ளதாக சர்வதேச ஊடகம் ஒன்றினால் வெளியிடப்பட்ட ஆய்வுக் கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தோரியம் எனப்படும் இவ் இரசாயன கனிமப்பொருள் அணுசக்தியின் உருவாக்கத்திற்கு பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இதனால் அதன் முக்கியத்துவம் அதிகமாகக் கருதப்படுகிறது.

அமெரிக்கா, கனடா போன்ற நாடுகளிலேயே அதிகம் காணப்படும் இந்தத் தாதுப்பொருள் வட பகுதியில் காணப்படுவது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகின்றது. (ஸ்ரீ-2)

# அதிகாரிகளின் கவனயீனமே கைதிகளின் கைகலப்புக்கு காரணம்

## அரியநேத்திரன் எம்.பி. குற்றச்சாட்டு

சந்தேகத்தின் பேரில் தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழ் கைதிகள் 40 பேர் நேற்று முன்தினம் கொழும்பு நீதவான் நீதிமன்றத்திற்கு அழைத்து வரப்பட்டு அங்குள்ள சிறிய சிறைக்கூடத்தில் அடைத்து வைக்கப்பட்டிருந்த போது ஏனைய சிங்கள கைதிகளினால் தாக்கப்பட்ட சம்பவத்தினை வன்மையாக கண்டிப்பதாக தமிழ் தேசிய கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அரியநேத்திரன் தெரிவித்தார்.

இச்சம்பவம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

சந்தேகத்தின் பேரில் தடுத்து வைக்கப்பட்டிருந்த அப்பாவி தமிழ் கைதிகளை நேற்று முன்தினம் கொழும்பு நீதவான் நீதிமன்றுக்கு அழைத்துச் சென்றிருக்கிறார்கள். விசாரணைகள் நடை பெறும் வரை அக்கைதிகள் ஏனைய பாரிய குற்றங்களை மேற்கொண்ட சிங்கள கைதிகளுடன் சிறியதொரு அறையில் அடைத்து வைக்கப்பட்டிருந்தார்கள்.

இந்நிலையில் சிங்கள கைதிகளுக்கும் தமிழ் கைதிகளுக்குமிடையில் வாய்த்தர்க்கம் முற்றி கைகலப்பில் முடிந்திருக்கிறது. உடனே காவலிலிருந்த அதிகாரிகள் அப்பாவி தமிழ் கைதிகளை கடுமையாக தாக்கியதாக எனக்கு அறியக் கிடைத்திருக்கிறது.

அதிகாரிகளின் கவனயீனத்தினால் ஏற்பட்ட இந்த தகராறில் அப்பாவி தமிழ் கைதிகள் தாக்கப்பட்டிருக்கிறார்கள். இச்சம்பவத்தினை நான் எனது கட்சி சார்பில் வன்மையாகக் கண்டிக்கிறேன்.

அத்தோடு இது போன்ற சம்பவங்கள் மேலும் நடை பெறாமல் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொள்கிறேன் என்று தெரிவித்தார். (ச-5)

# நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியை விஸ்தரிப்பதற்கு அமைச்சு அங்கீகாரம்

(கொழும்பு)

நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியை 750 மில்லியன் ரூபா செலவில் விஸ்தரிப்பதற்கு அமைச்சரவை நேற்று முன்தினம் அனுமதி வழங்கியுள்ளது.

பிரதமர் டி.எம்.ஜயரட்ண இது தொடர்பாக சமர்ப்பித்த அமைச்சரவைப் பத்திரத்தை அமைச்சரவை ஏகமனதாக அங்கீகரித்தது.

தற்போதைய நாடாளுமன்றக் கட்டடத்தொகுதியின் இடவசதி உத்தியோகபூர்வ பணிகளை இலகுவாக மேற்கொள்வதற்குப் போதுமானதல்ல எனவும் அதனால் நாடாளுமன்றக் கட்டடத்திற்கு அருகிலுள்ள காணியில் இக்கட்டடத் தொகுதி விஸ்தரிக்கப்படும் எனவும் அப்பத்திரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இணைய மற்றும் ஏ.டி.எஸ்.எல். கட்டணங் களுக்காக மாதாந்தம் 40 ஆயிரம் ரூபா தொலைபேசி அலவன்ஸ் வழங்கும் யோசனைக்கும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (ச-5)

# அதிகளவான இலங்கையருக்கு வடகொரியாவில் தொழில் வாய்ப்பு

இலங்கையர்களுக்கு அதிகளவு தொழில் வாய்ப்பு வழங்கப்படும் என வடகொரியா அறிவித்துள்ளது. கொரிய மொழித் தேர்ச்சி பரீட்சைகள் மிகவும் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்ட காரணத்தினால் அதிகளவானோருக்கு வாய்ப்புக்களை வழங்க வடகொரியா தீர்மானித்துள்ளது.

கொரிய மொழித் தேர்ச்சி பரீட்சை நடத்தப்பட்ட நாடுகளில் இலங்கை முன்னணி வகிப்பதாக வடகொரிய மனித வள அபிவிருத்தி நிறுவனத்தின் பணிப்பாளர் ஜுன் இல் சுன் தெரிவித்துள்ளார்.

உலகின் பதினைந்து நாடுகளில் இப்பரீட்சை நடத்தப்பட்டுள்ளது. இதேவேளை கொரிய மொழித் தேர்ச்சி பரீட்சைகளில் மோசடிகளில் ஈடுபட்ட பல மாணவர்கள் அண்மையில் கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# 2010.11 05 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- ❖ *1530* -நெதர்லாந்தில் நிகழ்ந்த பெரும் வெள்ளம் றெய்மேர்ஸ்வால் என்ற நகரத்தை அழித்தது.
- ❖ *1556* - முகலாயப் பேரரசுப் படைகள் இந்தியாவின் சூர் பேரரசின் தளபதி ஹேமு என்பவனின் படைகளை பானிபாட் என்ற இடத்தில் இடம் பெற்ற சமரில் தோற்கடித்தன. பேரரசன் அக்பர் இந்தியாவின் அரசனானான்.
- ❖ *1605* - றொபேர்ட் கேட்ஸ்பி என்பவனால் இங்கிலாந்து நாடாளுமன்றத்தைத் தகர்க்க எடுக்கப்பட்ட முயற்சி முறியடிக்கப்பட்டது.
- ❖ *1757* - புரூசியா பேரரசன் பிரெடெரிக் பிரான்ஸ் மற்றும் உரோம் பேரரசு ஆகியவற்றின் கூட்டுப் படையை றொஸ்பாக் என்ற இடத்தில் தோற்கடித்தான்.
- ❖ *1814* - இலங்கையின் வடக்கு மற்றும் வட-மேற்குப் பகுதிகளில் இடம்பெற்ற பெரும் சுழற்காற்றினால் யாழ்ப்பாணம், விடத்தல்தீவு, மற்றும் மன்னார் ஆகிய இடங்களில் பெரும் அழிவை ஏற்படுத்தின.
- ❖ *1831* - ஐக்கிய அமெரிக்காவில் அடிமைக் கிளர்ச்சியில் ஈடுபட்ட நாட்டர்ணர் வேர்ஜீனியாவில் குற்றவாளியாகக் காணப்பட்டு தூக்குத் தண்டனை அறிவிக்கப்பட்டது.
- ❖ *1861* - அவுஸ்திரேலியாவில் மெல்பேர்ணில் முதலாவது மெல்பேர்ண் கிண்ணக் குதிரைப் பந்தயப் போட்டி ஆரம்பமாயிற்று.
- ❖ *1862* - மினசோட்டாவில் 303 டகோட்டா பழங்குடியினர் வெள்ளையினத்தவரை கொலை செய்த குற்றத்துக்காக குற்றவாளிகளாகக் காணப்பட்டு தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டனர்.
- ❖ *1895* - தானுந்தின முதலாவது அமெரிக்கக் காப்புரிமத்தை ஜோர்ஜ் செல்டன் பெற்றார்.
- ❖ *1911* - செப்டெம்பர் 29 இல் ஓட்டோமான் பேரரசுடன் இத்தாலி போரை அறிவித்த பின்னர் திரிப்பொலி மற்றும் சிரெனாய்க்கா ஆகியவற்றை இத்தாலி தன்னுடன் இணைத்துக் கொண்டது.
- ❖ *1913*- ஐக்கிய இராச்சியம் சைப் பிரசை தன்னுடன் இணைத்துக்கொண்டது.
- ❖ *1935* - மொனோபொலி மட்டை ஆட்டம் முதன் முதலில் பாக்கர் சகோதரர்கள் என்ற நிறுவனத்தினால் வெளியிடப்பட்டது.
- ❖ *1940* - பிராங்கிளின் ரோசவெல்ட் ஐக்கிய அமெரிக்காவின் ஜனாதிபதியாக மூன்றாவது தடவையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- ❖ *1945* - நேதாஜியின் இந்திய தேசிய இராணுவத்தினர் மீதான வழக்கு விசாரணை டில்லி செங்கோட்டையில் ஆரம்பமானது.
- ❖ *1965* - ரொடீசியாவில் அவசரகாலச் சட்டம் நடைமுறைக்கு வந்தது.
- ❖ *1967* - லண்டனில் இடம் பெற்ற தொடரூந்து விபத்தில் 49 பேர் கொல்லப்பட்டனர்.
- ❖ *1971* - இன்ரெல் நிறுவனம் உலகின் முதல் நுண்செயலியான 4004 இனை வெளியிட்டது.
- ❖ *1987* - தென்னாபிரிக்காவில் 24 ஆண்டு கால சிறைவாசத்தின் பின்னர் கொவான் உம்பெக்கி சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டார்.
- ❖ *1996* - பாகிஸ்தான் அதிபர் பரூக் அகமது கான் பிரதமர் பெனாசீர் பூட்டோ தலைமையிலான அரசைக் கலைத்தார்.
- ❖ *1999* - இலங்கைப் படைகளுக்கெதிராக விடுதலைப் புலிகள் தொடுத்த ஓயாத அலைகள் மூன்று நடவடிக்கையின் முதலாவது கட்டம் ஏ-9 நெடுஞ்சாலையின் தெற்குப்புறமாக விளக்குவைத்த குளம் என்ற பகுதி கைப்பற்றப்பட்டதுடன் முடிவுக்கு வந்தது.
- ❖ *2006* - 148 ஷியா முஸ்லிம்களை 1982 ஆம் ஆண்டில் கொன்றதாக தொடரப்பட்ட வழக்கில் இடைக்கால ஈராக் அரசின் சிறப்பு நீதிமன்றம் முன்னாள் ஜனாதிபதி சதாம் ஹுசேனுக்கு மரண தண்டனை தீர்ப்பு அளித்தது.

### பிறப்புகள்

- ❖ *1870* - சித்தரஞ்சன் தாஸ், இந்திய விடுதலைப் போராட்ட வீரர் (இ. 1925)
- ❖ *1948* - பாப்பார், அமெரிக்க அரசியல்வாதி

### இறப்புகள்

- ❖ *1526* - டெல் ஃபெர்ரோ, இத்தாலிய கணிதவியலாளர் (பி.1465)
- ❖ *1879* - ஜேம்ஸ் மாக்ஸ்வெல், ஸ்கொட்லாந்து இயற்பியலாளர் (பி.1831)
- ❖ *1975* - எட்வர்ட் டாட்டம், நோபல் பரிசு பெற்றவர் (பி.1909)

**1917-ஒக்டோபர் புரட்சி:-எஸ்தோனியாவில் கம்யூனிசத் தலைவர் ஜான் ஆன்வெல்ட் புரட்சியாளர்களுக்குத் தலைமை வகித்துச் சென்று அரசைக் கைப்பற்றினார்.**

# தீபாவளி சிறப்புமலர் – 2010

அன்பர்கள் நண்பர்கள் வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் இனிய தீபாவளி நல் வாழ்த்துக்கள்

**சாரங்கா நகை மாடம்**

157/1, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்.
TP- 077 9944478

கிளை கொழும்பில் உதயமாகி உள்ளது.
**சாரங்கா ஜீவல்லரி**
இல, 55 செட்டியார் தெரு, கொழும்பு – 11
TP- 011 2434971 Fax: 011 2434071





தித்திக்கும் எமது தீபாவளி நல் வாழ்த்துக்கள்!

**லாவண்யா பல் மூக்கு கண்ணாடி அகம்**

வடமராட்சி வாடிக்கையாளர்களின் நலன் கருதி எமது நெல்லியடிக் கிளை தினமும் திறந்திருக்கும். மேலும் மூக்குக் கண்ணாடிகள், செயற்கைப்பற்கள், மிதப்புப்பற்களுக்கான நிரந்தர கிளிப் என்பவற்றின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளன.

552, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (போதனா வைத்தியசாலை முன்பாக)
தொ. பே. இல :021 222 9053

கிளை- பருத்தித்துறை வீதி, நெல்லியடி. (பொலிஸ் நிலையம் முன்பாக)

தீபத் திருநாளாம் நன்நாளில் எமது இனிய தீபாவளி வாழ்த்துக்கள்

சுகாதார முறையில் உணவிற்கும் வைத்தியத்திற்கும் விஷேடமாக தயாரிக்கப்பட்டது.

**V.S.P லஞ் ஓயில்**

தயாரிப்பாளரும்
ஏக விநியோகஸ்தரும்
பரிமளா ஸ்ரோர்ஸ்

இல:26 A, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
தொலை பேசி: 0212224135, 0212229165

தீபத்திரு நாளாம் நன் நாளில்
எமது இனிய தீபாவளி நல் வாழ்த்துக்கள்.

**சரவணா புடவையகம்**

இந்தியன் சீக்குன்ஸ் சாறி
(FULL WORKED)
இந்தியன் திரட் வேக் சாறி
(FULL WORKED)
இந்தியன் சில்க் சாறி
(OFFICIAL SAREE)
இந்தியன் கொட்டன் சாறி
(OFFICIAL SAREE)
இந்தியன் கொட்டன் சாறி
(RICH COTTON VIJAYALAXSMY 6.20M)
இந்தியன் சில்க் பஞ்சாபித்துணி
(No-1 SPECIAL QUALITY GURUKUPA)
இந்தியன் கொட்டன் பஞ்சாபித்துணி
(RICH COTTON SPECIAL QUALITY)
பாகிஸ்தான் கொட்டன் பஞ்சாபித்துணி
[லைனிங் தேவையில்லை] மற்றும்

New Selection

எங்கும் கிடைக்காத விலையில்

இந்தியன் சாறிகள் பஞ்சாபித்துணிகள் ஏராளம்! ஏராளம்!!
மிக மக மகத்தான விலைக்கழிவில் உள்ளது.

இன்றே விரையுங்கள்

"வாருங்கள் வந்து பாருங்கள்"

**SARAVANA TEX**

526,பருத்தித்துறை வீதி,
நல்லூர் வீதி(பின் வீதி), சிவன் கோயில் அருகில்,
யாழ்ப்பாணம்.





தீபத் திருநாளாம் நன்நாளில் தீபாவளி நல்வாழ்த்துக்கள்

MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT

**ராம்கோ சீமெந்து**

**RAMCO CEMENT**



ஆசியாவின் முதலாம் தர(நம்பர்-1) தொழிற்சாலையாக தெரிவு செய்யப்பட்ட RAMCO சீமெந்து (கோபுரமாக்) என்பதை மக்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

- ★ இலங்கையின் SLS 107 தரச்சான்றிதழ் பெற்றுக்கொண்ட சீமெந்து
- ★ 50 ஆண்டுகள் நிறைவைக் கொண்டாடும் சீமெந்து
- ★ மிகமிக உயர்தரம் கொண்ட சீமெந்து
- ★ ISO 9001 உலகத்தர சான்றிதழ் பெற்றுக்கொண்ட சீமெந்து

ராம்கோ சீமெந்தை பயன்படுத்துங்கள்!
உங்கள் பணத்தை மீதப்படுத்துங்கள்!
ராம்கோ சீமெந்தின் ஏக விநியோகஸ்தர்

**ஈஸ்வர பகவான் அன் கம்பனி**


தொ. பே: 021 222 2122,
021 222 2350

91, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

# "நான் வருவேன்...! உங்களைச் சந்திக்க"



உங்கள் எல்லோரையும் இலங்கைக்கு உயிருடன் வந்து பார்க்க வேண்டும் என்றே நான் ஆசைப்படுகின்றேன். சவப்பெட்டியிலிருந்து அல்ல. அது முடியாது போனால் நான் உங்களை சொர்க்கத்தில் சந்திப்பேன். நிச்சயமாக அங்கு எனக்கு ஒரு இடம் இருக்கும். ஏனென்றால் உண்மையாகவே நான் ஒரு அப்பாவி. *றிஷானா*



## வறுமையில் இருந்த குடும்பத்தைக் காக்கவென சவுதி சென்றவளுக்கு நடந்த கொடூரம்

என்னுடைய அன்பு நிறைந்த இலங்கைச் சகோதர சகோதரிகளே!

சவுதி அரேபியாவிலே அன்றி இந்த உலகத்திலோ இது தான் எனது கடைசி ஹஜ் பெருநாளாக இருக்கக்கூடும். என்னுடைய முடிவு விரைவில் நிச்சயிக்கப்பட்டு விடும். நான் நிரபராதி எனக் காணப்பட்டால் எனது வீட்டிற்குத் திருப்பி அனுப்பப்பட்டு விடுவேன். அல்லாவிட்டால் நான் சிரச்சேதம் செய்யப்படுவேன். மூதூர்க் கிராமத்தில் வ்றுமையாலும் பட்டினியாலும் பீடிக்கப்பட்ட ஒரு குடும்பத்திலிருந்து தனது பெற்றோரையும் சகோதரர்களையும் பாதுகாக்கவும் பராமரிக்கவும் வேண்டும் என்ற பிடிவாதத்துடன் புறப்பட்ட அந்த யுவதியின் முடிவு அதுவாகத்தானிருக்கும். ஆரம்பத்தில் என்னை சவுதி அரேபியாவுக்கு பணிப்பெண்ணாக அனுப்பினால் எமது குடும்பத்திற்கு துன்பத்திலிருந்து விடுதலை கிடைக்கும் என அந்த மனிதர் தன்னை வற்புறுத்துவதாக அப்பா அம்மாவிடம் முணுமுணுத்தார்.

எனது அம்மா அதிர்ச்சியடைந்தவராக அவள் ஒரு சிறு பெண். அவளை எப்படி அவ்வாறு அனுப்ப வேண்டும் என மறுத்து விட்டார். நாட்கள் செல்லச் செல்ல அந்த மனிதரின் நச்சரிப்பால் அப்பா அதற்கு உடன் பட்டார். ஆனால் அம்மா அதற்குச் சம்மதிக்கவில்லை. சாப்பிட்டால் என்ன, பட்டினி கிடந்தால் என்ன நாங்கள் எல்லோரும் ஒன்றாகச் சேர்ந்தே இருப்போம் என அம்மா கூறுவதை நான் கேட்டிருக்கிறேன்.

ஆம், அது உண்மை தான். நாங்கள் சில சமயங்களில் சாப்பிட்டோம். பல சமயங்களில் பட்டினியாகவே கிடந்தோம். நாங்கள் ஒரு போதும் வயிறார உண்டதில்லை. பசியை நான் தாங்கிக் கொள்ளும் போது நான் நோன்பு இருப்பதாகவே நினைத்துக் கொள்வேன். ஆனால், அந்த நேரத்தில் எனது இளைய சகோதரர் பசிக்களையால் ஒரு மூலையில் சுருண்டு படுத்துக் கொண்டு அப்பா எதையாவது கொண்டு வரமாட்டாரா என்று நம்பிக்கையுடன் காத்திருப்பதை என்னால் பார்த்துக் கொண்டு இருக்க முடியாமலிருந்தது.

இதன் காரணமாக நான் எனது மனதை மாற்றிக் கொண்டு எனது பெற்றோரிடம் எமது குடும்பத்தின் இக்கட்டான நிலைமையை எடுத்துக் கூறி பணிப்பெண்ணாக நான் சவுதி அரேபியாவுக்குப் புறப்படத் தயார் எனச் சொன்னேன். எனது முடிவு அப்பாவை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. அம்மாவின் முகத்தில் கண்ணீர் பெருக்கெடுத்து ஓடி முகத்தை மறைத்தது. நான் சொன்னேன் "கவலைப்படாதீர்கள் உம்மா . நான் என்னை பார்த்துக் கொள்வேன். எப்போதுமே நாங்கள் இவ்வாறு வறுமையில் உழல முடியாது. மூத்த பிள்ளை என்றளவில் குடும்பம் குறித்து பொறுப்புக்கள் எனக்கும் உண்டு. அதை நான் செய்கிறேன்" என்று கூறினேன்.

திருகோணமலை நகரத்தின் ஒரு பகுதியில் இருந்ததைத் தவிர பெரிய நகரம் ஒன்றிலும் நான் ஒருபோதும் வாழ்ந்ததில்லை. பெரிய பஸ் நிலையத்தையோ அல்லது பெரிய ரயில் நிலையத்தையோ நான் ஒரு போதுமே கண்டதில்லை. திருமலை நகரத்தின் சீனன்குடா விமானப்படைத் தளத்திலிருந்து விமானங்கள் பறப்பதைக் கண்டிருக்கிறேன். என்றோ ஒரு நாள் விமானத்தில் ஏறுவேன் என்று நான் கற்பனை பண்ணிக் கூடப் பார்த்ததில்லை.



மிகத் தொலைவிலுள்ள ஒரு நாட்டுக்குத் தன்னந்தனியே பிரயாணம் செய்வதையிட்டு என்னை நானே தைரியப்படுத்திக் கொண்டேன். ஒவ்வொன்றுமே அச்சமூட்டுகிற ஒன்றாகவே எனக்கு இருந்தது.

மீதி ஒரு வரலாறாகி இருக்கிறது. ஆம், வரலாறு.றிஷானா நபீக்கினுடைய வரலாறு. நீங்கள் எல்லோரும் அறிந்தது தான். நான் இழைக்காத தவறுக்காக கடந்த ஐந்து வருடங்களாக இந்தச் சிறையில் நான் அடைப்பட்டிருக்கிறேன். விரைவில் நான் விடுதலை செய்யப்படலாம் அல்லது கொல்லப்படலாம். அதைப் பற்றிப் பரவாயில்லை. ஆனால் நான் ஒரு விடயத்தை வலியுறுத்திக கூற விரும்புகிறேன். அது என்னவென்றால், நான் ஒரு குற்றமும் இழைக்காதவள் என்பது தான். அந்தக் குழந்தையை நான் ஒரு போதும் கொல்லவில்லை. அந்த அப்பாவிக் குழந்தை மீது அவ்வாறான ஒரு பேய்த்தனமான நடவடிக்கையை மேற்கொள்ள எனக்கு எந்தத் தேவையும் இருக்கவில்லை.

அந்தச் சிறுவனுக்கு நான் உணவூட்டியது அது தான் முதன் முறையுமல்ல. அன்று அவனை என்னிடம் தந்த போது அவர்களது உத்தரவுக்கு கீழ்ப்படிந்து ஏற்றுக் கொண்டேன். ஏனெனில் நான் இந்த அரபு நாட்டுக்கு வந்தது மாடு போல் உழைத்தாவது எனது குடும்பத்தாருக்கு மூன்று வேளை உணவு போடத்தான். எனது பணி உடன்படிக்கையில் என்ன உள்ளது என்பதை நான் ஒரு போதும் அறிந்திருக்கவில்லை. எனினும் இரவோ, பகலோ எனக்குத் தரப்படும் எந்த வேலையையும் நான் செய்யத் தயாராக இருந்தேன். குழந்தைக்கு ஏதோ நடந்து விட்டது என்பதை அறிந்ததும் எஜமானி வீரிட்டுக் கத்தினாள். கூக்குரலிட்டாள். கோபத்துடன் அராபிய மொழியில் என்னை வைதாள். அவள் என்ன பேசினாள் என்பதை நான் அறியேன். எஜமானும் அந்த நேரத்தில் வந்து விட்டார். அடுத்த கணமே இடம், வலம் என நான் அறையப்பட்டேன்.

ஒரு பந்தை உதைப்பது போல என்னை உதைத்தனர். அல்லா அல்லா எனக் கத்தியபடியே தவறாக நான் எதையும் செய்யவில்லை என நான் தமிழில் சொன்னேன். ஆனால், நான் சொன்னது எதுவும் அவர்கள் காதில் ஏறவில்லை. அவர்கள் பலமுறை பலருக்கு தொலைபேசி எடுத்தார்கள். சில உறவினர்கள் பெரும் சத்தம் போட்டுக் கொண்டு அங்கு வந்து சேர்ந்தார்கள். நான் தேம்பியழுதபடி அந்த ஹோலின் ஒரு மூலையில் நின்று கொண்டிருந்தேன். மனிதத் தன்மையற்ற அவர்களுடைய தாக்குதலைத் தாங்க முடியாதவளாக இருந்தேன். நாங்கள் ஏழைகள் தான். அதில் எந்தச் சந்தேகமுமில்லை. ஆனால், கிரிமினல்கள் அல்ல. என்னுடைய தாயோ அல்லது தந்தையோ என்னை ஒரு போதும் தொட்டதில்லை.

அவர்கள் குழந்தையை வைத்தியசாலைக்குக் கொண்டு போகும் அவசரத்தில் இருந்தார்கள் என உணர்ந்தேன். அதேவேளை பொலிஸாரின் வாகனம் ஒன்று சைரன் ஒலியை எழுப்பியவாறு

19அம் பக்கம் பார்க்க...

நன்றி:- குளோபல் தமிழ்

# தீபாவளி சிறப்பு மலர் - 2010






# ஏ எச் 1 என்1 தொற்று நோய் நாடு முழுவதும் பரவும் அபாயம்!

## சுகாதார அமைச்சு எச்சரிக்கை

ஏ எச் 1 என்1 தொற்று நோய் மீண்டும் நாடு முழுவதிலும் பரவிவருகின்றது என சுகாதார அமைச்சு எச்சரிக்கை விடுத்துள்ளது. நாடு முழுவதிலும் தொற்று நோய் பரவி வருவதனால் அனைத்து அரச வைத்திய சாலைகளில் உள்ள சுகாதாரப் பிரிவுகளில் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளது என சுகாதார சேவை வைத்திய தலைவர் அஜித் மெண்டிஸ் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கருத்துரைக்கையில்,

சாதாரண தடிமன், காய்ச்சல் மற்றும் இருமல் போன்றவற்றிற்காக வைத்தியசாலைகளுக்கு வருபவர்களுக்கு தொற்று நோய் உள்ளதா என வைத்திய பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றது.

நோய் பரவுவதற்கான அறிகுறிகள் காய்ச்சல் தடிமன், இருமல் மற்றும் தலைவலி போன்ற அறிகுறிகள் தென்பட்டால் உடனடியாக வைத்திய பரிசோதனை செய்து கொள்ள வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

இந்நோயினால் கொழும்பு மாவட்டத்தில் 18பேரும் கம்பஹா மற்றும் நுவரெலியா மாவட்டத்தில் தலா 4 பேரும் கேகாலை மாவட்டத்தில்ஒருவரும் பாதிக்கப்பட்டுள்ளனர். என இலங்கை தொற்று நோய் தடுப்புப் பிரிவு தகவல் வெளியிட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# முன்பள்ளி ஆசிரியைகளுக்கு டிப்ளோமா பாடநெறி

(கொழும்பு)

முன்பள்ளி ஆசிரியைகளுக்கு டிப்ளோமா பாடநெறியொன்றை ஆரம்பிக்க சிறுவர் பராமரிப்பு மகளிர் விவகார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

சகல முன்பள்ளி ஆசிரியைகளுக்கும் 3 கட்டங்களாக டிப்ளோமா பாடநெறி நடத்தப்படவுள்ளதாக சிறுவர் செயலக பிரதிப் பணிப்பாளர் ஜயந்த பீரிஸ் தெரிவித்துள்ளார்.

தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்த டிப்ளோமா பாடநெறி எதிர்காலத்தில் மாகாண மட்டத்திற்கு விஸ்தரிக்கப்படவுள்ளதாகவும் இச் செயற்றிட்டம் சிறுவர் பராமரிப்பு மகளிர் விவகார அமைச்சர் திஸ்ஸ கரலியத்தவின் ஆலோசனையின் படி செயற்படுத்தப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# சவுதியில் துன்புறுத்தலுக்குள்ளான மற்றொரு பெண் நாடு திரும்பினார்

(கொழும்பு)

சவுதிஅரேபியாவில் துன்புறுத்தலுக்கு இலக்கான மற்றொரு இலங்கைப் பணிப் பெண் நேற்று முன்தினம் நாடு திரும்பியுள்ளார்.கொஸ்கம பகுதியைச் சேர்ந்த எச்.ராஜகுமாரி என்ற பணிப்பெண்ணே துன்புறுத்தலுக்கு இலக்காகி இலங்கை வந்தடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஆறு மாதச் சம்பளமும் வழங்கப்படாத நிலையில் நாடு திரும்பியுள்ள அவர் சம்பளத்தைக் கோரிய அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் தாம் வீட்டு உரிமையாளரால் தாக்கப்பட்டதாக்த் தெரிவித்துள்ளார்.

கடந்த ஏப்ரல் மாதம் வேலைவாய்ப்புக்காகத் தாம் சவுதி அரேபியாவுக்குச் சென்றதாகவும் அன்று முதல் தாம் பல்வேறு துன்புறுத்தல்களுக்கு இலக்கானதாகவும் அவர் கூறினார்.

இதனையடுத்து கடந்த மாதம் 27 ஆம் திகதி அந்த நாட்டுப் பொலிஸ் நிலையத்தை தாம் நாடியதாகவும் அங்குள்ள இலங்கை தூதரகத்தில் தஞ்சமடைந்ததாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதன்பின்னர் இலங்கைத் தூதரகத்திற்கு வந்து தமது நிலுவைச் சம்பளத்தை வழங்கியதுடன் தொழில் தருனர் மீண்டும் அதே இடத்துக்குத் தம்மைப் பணிக்கு அழைத்துச் சென்றதாக அந்த பெண் குறிப்பிட்டுள்ளார்.

அங்கு தாம் மீண்டும் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டதுடன் எந்தவித உடைமைகளும் இன்றி மீண்டும் நாடு திரும்பியதாக அவர் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# இலவச சித்திரப் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

ஆத்திசூடி வீதி கந்தர்மடத்தில் இயங்கும் ஐ.ஏ.ரி.சித்திரப்பயிற்சி நிறுவனத்தால் பாடசாலை மாணவர் அல்லாத ஆர்வமுடையோருக்கு இலவச சித்திரப்பயிற்சி ஆரம்பிக்கப்படவுள்ளது.

எனவே பயில விரும்புவோர் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு பதிவினை மேற்கொள்ளுமாறு நிறுவனத்தின் இயக்குநர் அறிவித்துள்ளார். (ஸ்ரீ)

# நான் வருவேன் உங்களைச்....

*17ஆம் பக்கத் தொடர்ச்சி...*

வந்து சேர்ந்தது. அங்கிருந்தவர்கள் என்னைச் சுட்டிக்காட்டி பொலிஸாரிடம் ஏதோ பேசினார்கள். எனக்கு நடுங்கத் தொடங்கியது. நான் சிறு வயதிலிருந்தே பொலிஸாரைக் கண்டால் அஞ்சுபவள். என்னுடைய பாடசாலை நாட்களில் பொலிஸாரைக் கடந்து செல்ல வேண்டி ஏற்பட்டால் அந்நேரத்தில் பயம் காரணமாக நான் கதைப்பதை நிறுத்துவதுடன் மறுபக்கம் முகத்தைத் திருப்பிக் கொண்டு போய்விடுவேன். இப்போது நான் உணர்ந்தேன் நான் ஒரு பெரிய பிரச்சினையில் மாட்டுப்பட்டுள்ளேன் என.

பொலிஸார் என் கைகளில் விலங்கை மாட்டினர். நான் அழுதேன். தங்களுடன் வரும்படி அவர்கள் என்னைக் கேட்டனர். நான் மறுத்தேன். அவர்கள் சங்கிலியைப் பிடித்து இழுத்துக் கொண்டு அராபிய மொழியில் என்னைத் திட்டினர். அது மிகவும் வலி தருவதாக இருந்தது. நான் அவர்களுடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்தேன்.

எனது மனம் மூதூருக்குப் பறந்து போனது. அன்பான உம்மா. உங்களுடைய மகளுடைய கதி இப்போது என்னவென்று அறிய நேர்ந்தால் உங்களுடைய இருதயம் நின்று விடும். ஆனாலும் உம்மா நான் எந்தவொரு தீங்கையும் இழைக்கவில்லை. அதனால் நீங்கள் கவலைப்படாதீர்கள்? இதனை நான் அல்லாவிடம் விட்டு விட்டேன். இந்த அப்பாவியான வெள்ளாட்டை அந்தக் சிங்கங்களிடமிருந்து அவர் தான் காப்பாற்ற வேண்டும். நான் பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டேன். அங்கிருந்த பொலிஸ் அதிகாரிகள் தமக்கிடையே இது குறித்து ஏதோ வாதித்தார்கள். அரபு மொழியில் எழுதப்பட்ட சில காகிதங்களைத் தந்து என்னை ஒப்பமிடச் சொன்னார்கள். நான் தமிழில் ஒப்பமிட்டேன். வேறு சில பெண்களுடன் சேர்த்து நான் சிறையில் அடைக்கப்பட்டேன். அவர்கள் என்னைச் சுற்றி இருந்தபடி என்னை அழுவதை நிறுத்தும் படி கேட்டார்கள். எனக்கு அவர்கள் உதவுவதாக வாக்குறுதி அளித்தார்கள்.

அவர்கள் என்னிடம் வேறு மொழியில் கேள்விகளைக் கேட்டார்கள். நான் தமிழில் விளக்கமளித்தேன். அவர்கள் புரிந்து கொண்டார்களா இல்லையா என்று என்னால் சொல்ல முடியவில்லை. ஆனால் அவர்களில் ஒருவரோ இருவரோ அரபு மொழியில் நன்றாகப் பேசக்கூடியவர்களாக இருந்தனர். அங்கு இரண்டு சிங்களப் பெண்களும் இருந்தார்கள். அவர்களிடமிருந்து பின்னர் நான் சிங்களத்தைக் கற்றுக் கொண்டேன். அவர்கள் சிறிலங்கா? சிறிலங்கா? என என்னை விசாரித்தனர். நான் ஆம் என்று தலையசைத்தேன். அவர்களுள் வயதானவரான ஒருவர் என்னை தன்னுடைய மார்பில் அணைத்துக் கொண்டார். அப்போது எனது தாயின் அரவணைப்பில் இருப்பது போன்று நான் உணர்ந்தேன்.

இரண்டு நாட்களுக்குப் பின்னர் நான் இன்னொரு விசாரணை அலுவலகத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டேன். கறுத்த சற்றே பருத்த ஒரு இந்தியர் என்னிடம் தமிழில் சில கேள்விகள் கேட்டார். அந்தத் தமிழ் என்னுடைய தமிழ் அல்ல. அது நாங்கள் சினிமாவில் வழமையாகக் கேட்கிற தமிழும் அல்ல. சற்று வித்தியாசமானது. நான் முடிந்தளவு அவருடைய கேள்விகளைப் புரிந்து கொண்டு அழுதவாறே பதிலளித்தேன். நான் சவுதியில் இறங்கிய இரண்டு வாரத்தின் பின்னர் முதன் முதலில் தமிழ் கிடைத்த சந்தர்ப்பம் இது.

ஆனால், அந்த இந்திய மனிதர் எனது கதையை முழுவதுமாகப் புரிந்து கொண்டிருந்தார் என்று நான் நினைக்கவில்லை. நான் சொன்னவற்றை அங்கிருந்த அதிகாரி ஒருவரிடமும் அவர் மொழி பெயர்த்துச் சொன்னார்.அவ்வதிகாரி அவரிடமும் என்னிடமும் பல கேள்விகளைக் கேட்டார். இறுதியாக அவர் என்னைக் கையொப்பமிடச் சொன்னார். நான் கையொப்பம் இட்டேன். என்னுடைய வாக்கு மூலத்தைப் பதிவு செய்த பின்னர் என்னை அனுப்பி விடுவார்கள் என்றே நான் நினைத்திருந்தேன். இல்லை. அவ்வாறு நடக்கவில்லை. அது எனது சோதனைக் காலத்தின் முடிவு அல்ல. அது தான் ஆரம்பம்.

அவ்வாறு ஆரம்பித்த விடயங்கள் விரைவிலேயே துன்பகரமான முடிவுக்கு இட்டுச் சென்றது. அல்லாவிடம் மன்றாடுவதையும் அழுவதையும் தவிர எனக்கு வேறு எந்த வழியும் இல்லாதிருந்தது. எனது எல்லாப் பிரார்த்தனைகளிலும் அதனையே நான் செய்தேன். நான் படுக்கைக்குச் செல்லும் ஒவ்வொரு நாளும் அல்லாவிடம் எனது விடுதலைக்காகப் பிரார்த்தித்துக் கொண்டே படுக்கைக்குச் செல்வேன். இந்த நாள் எனது விடுதலைக்கான நல்ல செய்தியைக் கொண்டு வரும் என்ற நம்பிக்கையுடன் அதிகாலையில் தொழுவதற்காக எழுந்து விடுவேன். சிறைச்சாலையில் குர்ஆனை வாசிப்பதற்கும் தொழுவதற்கும் வசதி செய்த தரப்பட்டிருக்கிறது. ஆனால் தற்போதைய நிலைமை எனக்கு அதிக நம்பிக்கையைத் தருவதாக இல்லை. எனது எஜமானியின் வீட்டில் பணியாற்றிய இரண்டு வாரங்களைவிட மிக அதிகமான நாட்களை நான் இந்தச் சிறையில் கழித்து விட்டேன்.

என்னுடைய பெற்றார் இங்கு வருகை தந்தனர். அவர்களுடைய வருகை எனக்கு நிறைந்த மகிழ்ச்சியைத் தந்தது. என்னால் அவர்களுடன் அதிகம் பேச முடியவில்லை. ஆனால், அழ மட்டுமே முடிந்தது. நான் அவ்வாறு செய்திருக்கக் கூடாது. ஆனால், எனது கண்களிலிருந்து கண்ணீர் பெருக்கெடுத்து ஓடுவதை என்னால் தடை செய்ய முடியவில்லை. அதேவேளை, எனது வாயிலிருந்து சொற்கள் இலகுவாக வெளியே வரவுமில்லை. அவர்களும் தேம்பித் தேம்பி அழுதபடியே தான் பிரிந்து சென்றார்கள். எங்களுடைய விதியை நொந்து கொண்டே அவர்கள் போனார்கள்.

மறுபுறத்தில் எனது கழுத்தில் கத்தி இறங்கும் வரையும் எனது இறுதி மூச்சு உள்ளவரையும் இந்த முகம் தெரியாத துரதிர்ஷ்டம் பிடித்த பெண்ணிற்காக தங்களது பணத்தையும் நேரத்தையும் செலவழித்த அனைவருக்காகவும் அவர்களுடைய நல் வாழ்க்கைக்காகவும் நான் அல்லாவிடம் பிரார்த்திப்பேன்.

அதேபோல் எனக்காகப் பிரார்த்தித்த இலங்கையின் சகோதர, சகோதரிகளையும் நான் அறிவேன். இங்கு தங்களுடைய பிரார்த்தனைகளின் போது என்னை நினைவு கூர்ந்த முஸ்ஸிம் சகோதர, சகோதரிகளையும் நான் நினைவு கூர்கிறேன்.

ஹஜ் முடியும் வரை எவரும் சிரச்சேதம் செய்யப்படமாட்டார்கள் என்பது எனக்குத் தெரியும்.

இறுதியாக என்னுடைய விடுதலைக்காக தங்களாலான என்னென்ன முயற்சிகளை செய்யலாமோ அவ்வளவு முயற்சிகளையும் செய்த இலங்கையின் ஜனாதிபதி மற்றும் முகமறியாத ஆண்களும் பெண்களுமான பலருக்கும் எனது நன்றியைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

உங்கள் எல்லோரையும் இலங்கைக்கு உயிருடன் வந்து பார்க்க வேண்டுமென்றே நான் ஆசைப்படுகின்றேன். சவப்பெட்டியினுள்ளிருந்து அல்ல.அது முடியாது போனால் நான் உங்களை சொர்க்கத்தில் சந்திப்பேன்.நிச்சயமாக அங்கு எனக்கு ஒரு இடம் இருக்கும். ஏனென்றால் உண்மையாகவே முழுமையாகவே நான் ஒரு அப்பாவி.

சலாம்

றிஷானா நபீக்


கொமர்ஷல் வங்கி
உங்கள் நலமே எங்கள் நோக்கம்.
சிந்தையில் நல்லுணர்வைத் தூண்டும்
தீப ஒளி பிரகாசிக்கட்டும்

உலக வரலாற்றில் வலிமையே நியாயத்தை உருவாக்கிறது என்று சொல்கிறார்கள். நம்முடைய காலத்தில் நியாயமே வலிமையை உருவாக்கிறது என்று மாற்றிக் காட்டவேண்டும். – ஆபிரகாம் லிங்கன்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# அசுரத்தனத்தை அழிக்க இறைவா உதவிடுக!

துட்டகைமுனு குறண்டிக்கொண்டு கிடந்த நிலையில் இப்போது தமிழர்கள். நாடு கேட்டு, சுயாட்சி கேட்டு, வடக்குக்கிழக்கு மாகாண சபைகளின் இணைப்பைக் கேட்டு எதுவுமே இல்லை.

இருக்கின்ற உறுதிக் காணிக்கும் ஆபத்து வந்து விடுமோ என்ற பயம். நிலைமை இதுவாக இருக்கும் போது, தீபாவளித் திருநாளை கொண்டாடுவதில் எந்தப் பயனுமில்லை.

நரகாசுரனை வதம்செய்தநாளை கொண்டாடும் வகையில் தீபாவளித் திருநாள் அனுஷ்டிக்கப்படுகிறது.

யார் அந்த நரகாசுரன் என்ற கேள்வி எழுமாயின் அங்குதான் தீபாவளித் திருநாளின் அர்த்தம் வெளிப்படும்.

ஆம், நரகாசுரன் என்பவன் வேறுயாருமல்ல; எங்களுடைய மனமே. அசுரமனம் படைத்தவர்களால் இந்த உலகம் அழிவைச் சந்திக்கிறது. துன்பத்தை அனுபவிக்கிறது.

எனவே அசுரர்களை அழிக்க வேண்டும். அந்த அழிப்பு தெய்வீக சக்தியால் மட்டுமே சாத்தியமாகும்.

இறைவழிபாடு, தியானம் என்பவை எங்கள் மனங்களை பற்றிநிற்கும் அசுரத்தன்மையை இல்லாதொழிக்க, தெய்வீகம் எங்கள் உள்ளங்களில் குடியிருக்கும்.

இதுவே தீபத் திருநாளின் தத்துவம். இந்தத் தத்துவத்தை உணர்ந்துகொண்டால் இலங்கைத்தீவில் முரண்பாட்டிற்கும் ஒற்றுமையின்மைக்கும் இடமேயிருக்காது.

ஒருவருடைய உரிமையை இனத்தின்– மதத்தின்– மொழியின் பெயரால் வழங்க மறுப்பதென்பது மனிதப்பண்பின் பஞ்சத்தால் ஏற்படுவதாகும்.

இலங்கையில் தமிழினம் பலவருடங்களாக உரிமையற்ற இனமாக வாழ்ந்து வருகின்றது.

தமிழினம் தனது சுயகௌரவத்தை, உரிமையை, பண்பாட்டு விழுமியத்தைக் காப்பாற்ற முடியாமல் திணறுகின்றது.

என்னைப்போல் மற்றவர்களையும் நேசிக்கும் மனப்பக்குவம் இருக்குமாயின் புத்தபிரானை பிரதிஷ்டை செய்வதிலேயே கவ்னம் செலுத்தும் சிறுமைத்தனத்திற்கு இடமேயில்லை.

மாறாக யுத்தம் முடிந்த கையோடு இதோ இனப்பிரச்சினைக்குத் தீர்வு. பெரும்பான்மை இனம் எங்ஙனம் அதிகாரங்களை பெற்று இந்த நாட்டில் தலைநிமிர்ந்து வாழ்கின்றதோ அதே போன்று தமிழர்களாகிய நீங்களும் உங்கள் தாய கத்தில் உங்களுக்குரிய அத்தனை இனத்துவப் பண்பாடுகளோடு வாழுங்கள்.

உங்கள் எதிர்காலத்தை நீங்களே தீர்மானிக்கும் அதிகாரம் உங்களுக்கே உண்டு. அதில் எங்கள் தலையீடு தேவையற்றது.

நீங்கள் நீங்களாகவும், நாங்கள் நாங்களாகவும் வாழ்வதற்கான அதிகாரங்கள் உங்களுக்கு தரப்பட்டுள்ளது. இலங்கை என்ற இந்த அழகிய தீவில் நீங்களும், நாங்களும் ஒற்றுமையாக இருப்போம். பழையன மறக்கப்படட்டும்.

இவ்வாறு சொல்லும் மனநிலை இருக்குமாயின் மனிதங்கள் கண்ணீர் விடவேண்டிய அவசியத்திற்கு இடமில்லை.

இந்தப் புனிதமான தத்துவத்தைப் போதிக்கும் தீபத்திருநாளில் அசுர மனங்களில் குடிகொண்ட அழுக்காறு எனும் இருள் அகன்று ஒளி பரவட்டும். இறைவா உதவுக!

# உள்ளூராட்சி தேர்தல் திருத்த சட்டமூலம் சிறுபான்மைக் கட்சிகளுக்கான மரணப்பொறி

## மனோ கணேசன் தெரிவிப்பு

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் திருத்தச் சட்ட மூலம் சிறுபான்மை கட்சிகளுக்கான ஓர் மரணப் பொறியாகவே கருதப்பட வேண்டுமென ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் இணைந்து சிறிய அரசியல் கட்சிகளை இல்லாதொழிப்பதற்கு முயற்சிப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் திருத்தச் சட்ட மூலத்தை அமுல்படுத்துவதன் மூலம் சிறிய கட்சிகள் பாதிப்புக்களை எதிர்நோக்கும் எனவும் இந்த நாட்டு மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் ஏகபோக உரிமையை பெற்றுக் கொள்ளும் முனைப்புகளில் ஐக்கிய தேசியக் கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் ஈடுபட்டுள்ளதாக அவர் மேலும் கூறினார்.

இணைந்து கொள்ளுங்கள் அல்லது இல்லாமல் போய்விடுவீர்கள் என்பதே குறித்த பிரதான கட்சிகளினால் சிறிய கட்சிகளுக்கு விடுக்கப்பட்டுள்ள செய்தி என அவர் தெரிவித்தார்.

சுயாதீன தேசிய முன்னணியின் எட்டாவது பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போது அவர் இதனை குறிப்பிட்டார்.

உள்ளூராட்சி மன்ற தேர்தல் திருத்தச் சடட மூலத்தினால் சிறுபான்மை கட்சிகள் எதிர்நோக்கக் கூடிய நடைமுறைச் சிக்கல்கள் குறித்து அமைச்சர் தினேஷ் குணவர்தன தலைமையிலான பாராளுமன்றத் தெரிவுக்குழு ஆராய்ந்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் சிறுபான்மை கட்சிகளினால் முன்வைக் கப்பட்ட யோசனைத் திட்டங்கள் அமுல்படுத்தப் படவில்லை என்றும் தொகுதிவாரி முறைமையினால் சிறுபான்மை மக்கள் பிரதிநிதித் துவம் வெகுவாக குறையக் கூடிய சாத்தியம் காணப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும் இரகசியமான முறையில் கூட்டாக இணைந்து சிறுபான்மை கட்சிகளை ஒடுக்குவதற்கு முயற்சித்துவருவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

உள்ளூராட்சி மன்றத்தேர்தல் திருத்தச் சட்ட மூலத்தின் பாரிய பாதிப்புக்களுக்கான குரல் கொடுக்காத ஐக்கிய தேசியக் கட்சி வெறுமனே சுட்டுப்பணத்தை குறைக் குமாறு குரல் கொடுப்பதன் மூலம் பிரதான கட்சிகளின் கபட நோக்கம் அம்ப லமாகியுள்ளதென அவர் குறிப்பிட்டுள்ளார்.

பிரதான கட்சிகளுடன் போட்டியிடுவதற்கு வெட்டுப்புள்ளி முறைமை அறிமுகப்படுத்தப்பட்டால் அதன் மூலம் சிறுபான்மை கட்சிகள் பாரிய பின்னடைவினை எதிர்நோக்கும் எனவும் இதற்காக ஆதரவளிக்கும் சிறுபான்மை கட்சிகள் இதன் விளைவுகளை பின்னர் அனுபவிக்க நேரிடும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### விளக்கேற்றுவதின் மகிமை

அகல், எண்ணெய், திரி, சுடர் இந்த நான்கும் சேர்ந்தது தான் விளக்கு.

இந்த நான்கும் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கினையும் உணர்த்துவதோடு 'சரியை', 'கிரியை', 'யோகம்', 'ஞானம்' என்னும் யோக நுட்பங்களையும் தெரிவிக்கிறது.

பொதுவாக வீட்டில் தீபம் ஏற்றி வழிபட்டு வந்தால் மகாலட்சுமி அங்கு வாசம் செய்வாள் என்பதுடன், தீய சக்திகளும் நம்மை அண்டாது; கார்த்திகை விரதம் இருப்போர்க்கு ஒளிமயமான வாழ்க்கை, உயர் பதவி, இழந்த பொருட்கள் திரும்பக் கிடைத்தல் போன்ற நன்மைகள் கிடைக்கும் என்பார்கள். இதுபோல் ஒவ்வொரு விரதத்திற்கும் தக்க பலன்கள் உண்டு.

## உடு புடைவை அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு ஸ்ரீ செல்வச் சந்நிதி ஆலயத்தில் தங்கியிருக்கும் முதியவர்களுக்கு நேற்று சந்நிதியான் ஆச்சிரமத்தினால் புதிய உடு புடைவைகள், போர்வைகள் வழங்கப்பட்டன. (ச-7)

## ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

டிப்ளோமா கற்கை நெறிக்கு தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் நாளை காலை 9.00 மணிக்கு யாழ்ப்பாணம் வைத்தீஸ்வ ராக் கல்லூரியில் இடம்பெறும் என யாழ். உதவிக்கல்விப் பணிப்பாளர் க.விமலநாதன் அறிவித்துள்ளார்.

மேற்படி கலந்துரையாடல் யாழ்ப்பாணம் சன்மார்க்க வித்தியாலயத்தில் நடைபெறும் என அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-7)

# வெள்ளி நற்சிந்தனை

## பக்தியின் மொழி தமிழ்

147

'இடுக்கண் வருங்கால் நகுக' என்பது வள்ளுவர் வாய்மொழி. மனித வாழ்க்கையில் தொடர்ந்து பெருந்துன்பங்கள் வருவதே இடுக்கண் எனப்பட்டது. அவ்வாறு தொடர்ந்து துன்பங்கள் வரும்போது சிரிக்கவேண்டும் என வள்ளுவர் கூறுவது நடைமுறையில் சாத்தியப்படுமா என்ற கேள்வியும் எம்மிடையே உண்டு. பக்திநிலை நின்ற நாயன்மார்களில் வாழ்க்கையில் தொடர்ந்து பெருந்துன்பங்களை எதிர்கொண்டவர் திருநாவுக்கரசராகும். அவருடைய பாடலில் அந்த அநுபவம் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். மனித நிலையில் தொடர்ந்து துன்பங்களை எதிர்கொள்ளும் போது எவரையும் இரந்து கேட்டு அத்துன்பநிலையிலிருந்து விடுவிக்க வேண்டும் என்ற நிலையைத் தவிர்த்துக் கொள்ளமுடியும். அதற்குரிய நல்லவழி ஒன்றை அப்பர் காட்டுகிறார்.

இறைவழிபாடு பற்றிய முழுமையான நம்பிக்கையால் எல்லாத்துன்பங்களையும் வெல்ல முடியும். இதற்கு ஒரு சம்பவத்தையும் குறிப்பிட்டுக் காட்டுகிறார். இராவணன் தனது உடல் ஆற்றல் மீது பெருநம்பிக்கை கொண்டு கைலாயமலையை தூக்க முயன்றான். அப்போது இறைவன் தன்னுடைய காற்பெருவிரலால் மலையை அழுத்தினான். கீழே இருந்த இராவணன் நெரிபட்டு வரு ந்தினான். அந்த வருத்தத்தைப் போக்க இறைவனைப் பணிந்து பாடினான். அவனுக்கு இறைவன் அருள் செய்து அத்துன்பத்தை நீக்கியருளினான்.

இந்தக் கதையை நினைவுபடுத்தும் அப்பர் இத்தகைய துன்பம் ஏற்படும் போது நடுக்கமுறும் மனத்தை ஆற்றுவதற்குரிய வழியையும் பாடலில் குறிப்பிட்டுள்ளார். இறைவனை நினைப்பதற்கு ஓர் உருவம் தேவை. ஒரு நாமம் தேவை. மனிதர்களுடைய பெயரை நினைத்தவுடன் அவருடைய உருவத் தோற்றம் நினைவுக்கு வரும். இந்தக் குண இயல்பால் இறைவன் பெயரைச் சொன்னால் இறைவனுடைய தோற்றம் நினைவில் வரும். எனவே எத்தகைய துன்பங்கள் தொடர்ந்து வந்தாலும் *நமச்சிவாய* என்ற இறைவன் நாமத்தைச் சொல்ல வேண்டும். அந்த ஒலிப்பு எமது மனநடுக்கத்தைக் கெடுக்கும் வல்லமையுடையது.

இன்றைய மனித வாழ்வியலில் துன்பந்தீர்க்கும் வழிகள் எனப் பல உளவியல் ஆய்வுகள் நடைபெற்று வருகின்றன. அவற்றைப் பலர் பல வழிகளில் பயிற்றிய போதும் மனித வாழ்வியலில் இன்னமும் சீர்மை ஏற்படவில்லை. எனவே புதிய வழியொ ன்றைத் தேடுகின்ற நிலையில் அப்பர் கூறுகின்ற வழி அநுபவப்பட்ட வழியாக ஏற்றுக் கொள்ளக்கூடிய எளிதான வழியாக உள்ளது. சமய வாழ்க்கையில் ஈடுபாடு அற்று வழிபாட்டு நடைமுறைகளைக் கைவிட்டு நிற்கின்ற இன்றைய சமூகத் தவர் பல புதிய சமய நம்பிக்கைகளையும் கடைப்பிடிக்கத் தொடங்கியுள்ளனர். இவர்களுடைய வாழ்வியலும் அப்பரு டைய வாழ்வியலைப் போலவே தொடர் ந்து துன்பம் நிறைந்த வாழ்வியலாக இருந்தமையால் அதிலிருந்து உடனடி யாக விடுபட வேண்டிப் புதிய சமய ஆற் றுகைகளைப் பின்பற்றத் தொடங்கியுள் ளனர். அவர்களுடைய குழப்ப நிலை யைப் போக்குவதற்கு அப்பர் காட்டும் எளிமையான வழிபாட்டு நடை முறை உதவி செய்யும். மக்கள் மனதிலே படிந்து கிடக்கும் துன்ப நினைவுகளைப் போக் கவும் சோகச் சுமைகளை அகற்றவும் அப்பருடைய பாடல் வழிகாட்டுகிறது.

*இடுக்கண் பட்டிருக்கினும் இரந்து யாரையும்*
*விடுக்கிற்பி ரானென்று வினவுவோமல்லோம்*
*அடுக்கற் கீழ்க் கிடக்கினும் அருளினால் முற்ற*
*நடுக்கத்தைக் கெடுப்பது நமச்சிவாயவே*





உங்கள் வாழ்வினை மாற்றி புத்தொளி பிரவச்செய்யும் NDB வங்கி, இத்தேசத்து மக்கள் அனைவருக்கும் தனது தீபத்திருநாள் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றது.

வாழ்க்கையை நிதமும் மாற்றும்
NDB வங்கி

# சேவாக், டிராவிட் சதம்; இந்தியா பலமான நிலையில்

(அகமதாபாத்)

சேவாக், டிராவிட் சதமடித்து சாதிக்க இந்திய அணி நேற்றைய முதல்நாள் ஆட்டநேரமுடிவில் அதன் முதலாவது இன்னிங்ஸில் 3 விக்கெட்டுக்களையிழந்து 329 ஓட்டங்களை எடுத்தது.



இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள நியூசிலாந்து அணி 3 டெஸ்ட், 5 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

இதில் முதலாவது டெஸ்ட் நேற்று அகமதாபாத் காடார் பட்டேல் மைதானத்தில் ஆரம்பமானது.

இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இந்திய அணித் தலைவர் தோனி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணிக்கு சேவாக் – காம்பீர் சிறப்பான ஆரம்பத்தை வழங்கினர்.

இந்த ஜோடி முதலாவது விக்கெட்டுக்காக 60 ஓட்டங்களை இணைப்பாட்டமாக எடுத்தபோது கௌதம் காம்பீர் 21 ஓட்டங்களுடன் ரைடரின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார்.

அடுத்து களமிறங்கிய டிராவிட் நிதானமாகத்துடுப்பெடுத்தாட மறுமுனையில் அதிரடியாகத் துடுப் பெடுத்தாடிய விரேந்திர சேவாக் 49 பந்துகளில் அரைச்சதம் கடந்தார்.

இந்த ஜோடியின் நம்பிக்கையான இணைப்பாட்டத்தின் மூலம் இந்திய அணி 100 ஓட்டங்களை எட்டியது.


இதில் விரேந்திர சேவாக் 111 பந்துகளில் தனது 22 ஆவது டெஸ்ட் சதத்தைப் பூர்த்தி செய்ய இந்திய அணி 150 ஓட்டங்களைத் தாண்டியது.

மறுமுனையில் ராகுல் டிராவிட் 151 பந்துகளில் அரைச்சதத்தை எட்டினார்.

இந்த ஜோடியைப் பிரிக்க நியூசிலாந்து அணித்தலைவர் விக்டோரி களத்தடுப்பில் பல வியூகங்களை வகுத்தபோதும் பலனளிக்காமல் போக வீரேந்திர சேவாக் 169 பந்துகளில் 150 ஓட்டங்களைத் தொட்டார்.

இரண்டாவது விக்கெட்டுக்காக இந்த ஜோடி 237 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பகிர்ந்த போது விரேந்திர சேவாக் 199 பந்துகளில் (24 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட ) 173 ஓட்டங்களைக் குவித்து டானியல் விக்டோரியின் பந்து வீச்சில் போல்ட் முறையில் ஆட்டமிழந்தார்.

அடுத்து டெண்டுல்கர் களமிறங்க மறுமுனையில் நிதானமாகத் துடுப்பெடுத்தாடிய ராகுல் டிராவிட் 215 பந்துகளில் தனது 30 ஆவது சதத்தைப் பூர்த்தி செய்தார்.



எனினும் ராகுல் டிராவிட் 227 பந்துகளில் (14 பவுண்டரிகள் உட்பட) 104 ஓட்டங்களை எடுத்து மார்டீனின் பந்துவீச்சில் நேரடியாக போல்ட் முறையில் ஆட்டமிழந்தார்.

அடுத்து நான்காவது விக்கெட்டுக்காக டெண்டுல்கருடன் இணைந்த வி.வி.எஸ்.லக்ஸ்மன் நிதானமாக ஆடி நம்பிக்கையளித்தார்.

இந்நிலையில் நேற்றைய முதல் நாள் ஆட்டநேர முடிபில் இந்திய அணி 3 விக்கெட்டுக்களையிழந்து 329 ஓட்டங்களை எடுத்தது.

இதில் டெண்டுக்கர் 13, லக்ஸ்மன் 7 ஓட்டங்களையும் எடுத்து ஆட்டமிழக்காமல் களத்திலுள்ளனர்.

பந்துவீச்சில் மார்டீன், ரைடர், விக்டோரி ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

இப்போட்டியின் இரண்டாம் நாள் ஆட்டம் இன்றாகும்.

## தொடரைக் கைப்பற்றுமா இலங்கை அணி?

இலங்கை–அவுஸ்திரேலிய அணிகள் மோதும் இரண்டாவது ஒருநாள் போட்டி இன்று சிட்னியில் நடக்கிறது. இதில் வெற்றிபெற்று அவுஸ்திரேலிய மண்ணில் முதல் முறையாக ஒருநாள் தொடரை கைப்பற்ற இலங்கை காத்திருக்கிறது.

தொடர்ந்து 6 தோல்விகளைச் சந்தித்துள்ள அவுஸ்திரேலிய அணி எழுச்சி பெற வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறது.

அவுஸ்திரேலியா சென்றுள்ள இலங்கையணி 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் பங்கேற்கிறது. முதல் போட்டியில் வென்ற இலங்கையணி 1:0 என்று முன்னிலையில் உள்ளது. சிட்னியில் இன்று இரண்டாவது போட்டி நடக்கிறது.

## துளித் துளியாய்...

### 5–வது வீரர்

இந்திய–நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட்டில் நேற்றைய முதல்நாள் ஆட்டத்தில் இந்தியவீரர் சேவாக் சதமடித்து அசத்தினார். இது டெஸ்ட் அரங்கில் இவர் அடிக்கும் 22 ஆவது சதம். இதன்மூலம் டெஸ்ட் அரங்கில் இந்தியா தரப்பில் அதிகசதம் அடித்த வீரர்கள் வரிசையில் 5–வது இடத்தை முன்னாள் வீரர் அசாருதீனுடன் பகிர்ந்துகொண்டார் சேவாக்.

இதேவேளை, நேற்றைய போட்டியில் நியூசிலாந்து அணியின் களத்தடுப்பு படு சொதப்பலாக இருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

## கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சா.தர)ப் பரீட்சை 2010 – டிசெம்பர் (எழுத்துப் பகுதி) நேர அட்டவணை

| | திகதி | முற்பகல் | நேரம் | பிற்பகல் | நேரம் |
|---|---|---|---|---|---|
| 1 | 2010 டிசெம்பர் 13 திங்கள் | 11 பௌத்த சமயம்<br>12 சைவநெறி<br>14 கத்தோலிக்க சமயம்<br>15 கிறிஸ்தவம்<br>16 இஸ்லாம்<br>} வினாத்தாள் I, II | 08.30 - 11.30 | | |
| 2 | 2010 டிசெம்பர் 14 செவ்வாய் | 21 சிங்கள மொழியும் இலக்கியமும்<br>22 தமிழ்மொழியும் இலக்கியமும்<br>} வினாத்தாள் I, II | 08.30 - 11.30 | 21 சிங்கள மொழியும் இலக்கியமும்<br>22 தமிழ்மொழியும் இலக்கியமும்<br>} வினாத்தாள் III | 12.30 - 14.30 |
| 3 | 2010 டிசெம்பர் 15 புதன் | 31 ஆங்கில மொழி } வினாத்தாள் I<br>வினாத்தாள் II | 08.30 - 09.30<br>09.45 - 11.45 | | |
| 4 | 2010 டிசெம்பர் 16 வியாழன் | 34 விஞ்ஞானம் வினாத்தாள் II | 08.30 - 11.30 | 34 விஞ்ஞானம் வினாத்தாள் I | 12.30 - 13.30 |
| 5 | 2010 டிசெம்பர் 17 வெள்ளி | 33 வரலாறு வினாத்தாள் II | 08.30 - 11.30 | 33 வரலாறு வினாத்தாள் I | 14.00 - 15.00 |
| 6 | 2010 டிசெம்பர் 18 சனி | 80 தகவல் தொடர்பாடலும் தொழில்நுட்பவியலும்<br>81 விவசாயமும் உணவுத் தொழில்நுட்பவியலும்<br>82 கடற்றொழிலும் உணவுத் தொழில்நுட்பவியலும்<br>83 ஆக்கத்திறனும் தொழில் நுட்பவியலும்<br>} வினாத் தாள் I, II | 08.30 - 11.30 | 84 நுண்கலை<br>85 மனைப்பொருளியல்<br>86 சுகாதாரமும் உடற்கல்வியும்<br>87 தொடர்பாடலும் ஊடகக்கற்கையும்<br>92 மின் ஆவணப்படுத்தலும் சுருக்கெழுத்தும் (சிங்களம்)<br>93 மின் ஆவணப்படுத்தலும் சுருக்கெழுத்தும் (தமிழ்)<br>94 மின் ஆவணப்படுத்தலும் சுருக்கெழுத்தும் (ஆங்கிலம்)<br>} வினாத் தாள் I, II | 12.30 - 15.30 |
| 7 | 2010 டிசெம்பர் 21செவ்வாய் | 32 கணிதம் வினாத்தாள் I | 08.30 - 10.30 | 32 கணிதம் வினாத்தாள் II | 12.30 - 15.00 |
| 8 | 2010 டிசெம்பர் 22 புதன் | 40 சங்கீதம் (கீழைத்தேயம்)<br>41 சங்கீதம் (மேலைத்தேயம்)<br>42 சங்கீதம் (கர்நாடகம்)<br>44 நடனம் (சுதேச)<br>45 நடனம் (பரதம்)<br>} வினாத்தாள் I, II<br>43 சித்திரம் } வினாத்தாள் I<br>வினாத்தாள் III | 08.30 - 11.30<br>08.30 - 09.30<br>09.45 - 11.45 | 46 இலக்கிய நயம் ஆங்கிலம்<br>47 இலக்கிய நயம் சிங்களம்<br>48 இலக்கிய நயம் தமிழ்<br>49 இலக்கிய நயம் அரபு<br>50 நாடகமும் அரங்கியலும் (சிங்களம்) வினாத்தாள் I, II<br>51 நாடகமும் அரங்கியலும் (தமிழ்) வினாத்தாள் I, II<br>52 நாடகமும் அரங்கியலும் (ஆங்கிலம்) வினாத்தாள் I, II<br>43 சித்திரம் வினாத்தாள் II | 12.30 - 15.30<br>13.15 - 15.15 |
| 9 | 2010 டிசெம்பர் 23 வியாழன் | 60 வணிகமும் கணக்கீட்டுக்கல்வியும்<br>61 புவியியல்<br>62 குடியுரிமைக்கல்வி மற்றும் சமூகநிர்வாகம்<br>63 முயற்சியாண்மைக்கல்வி<br>64 இரண்டாம்மொழி சிங்களம்<br>65 இரண்டாம் மொழி தமிழ்<br>} வினாத் தாள் I, II<br>66 பாளி<br>67 சமஸ்கிருதம்<br>68 பிரெஞ்சு<br>69 ஜேர்மன்<br>70 ஹிந்தி<br>71 ஜப்பான்<br>72 அரபு | 08.30 - 11.30 | | |

அனுர எதிரிசிங்க, பரீட்சை ஆணையாளர் நாயகம்

# விடுதலைப்புலிகளை உளவுபார்த்த நோர்வேயைச் சேர்ந்த உளவாளி!

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தினர்கள்,ஈழ அனுதாபிகள் ஆகியோரை நோர்வேயில் உளவு பார்க்கும் நடவடிக்கையில் அமெரிக்கா மிக நீண்ட காலமாக ஈடுபட்டு வந்திருப்பது அம்பலமாகியுள்ளது.

புலம்பெயர் தமிழர் அமைப்புக்களால் கடந்த காலங்களில் நோர்வேயில் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டங்கள், போராட்டங்கள், எதிர்ப்பு நடவடிக்கைகள் ஆகியவற்றை அமெரிக்காவுக்காக நோர்வேயின் முன்னாள் உளவுத்துறை அதிகாரிகளில் ஒருவர் புகைப்படங்களாகவும், வீடியோக்களாகவும் படம் பிடித்துக் கொடுத்திருக்கின்றார்.

குறிப்பாக இலங்கை அரசு–தமிழீழ விடுதலைப் புலிகள் ஆகியோருக்கு இடையில் சமாதான அனுசரணையாளராக நோர்வே செயல்படத் தொடங்கிய காலம் தொடக்கம் இவ்வளவு பணி இடம்பெற்று வந்திருக்கின்றது.

இவ்வளவு பணிகளை அங்குள்ள அமெரிக்கத் தூதரகம் நேரடியாக மேற்பார்வை செய்து வந்திருக்கின்றது. அமெரிக்காவின் உளவாளிகளாக செயற்பட்ட நபர் தூதரகத்திற்கு அருகில் உயர்ந்த மாடிக் கட்டிடத்துடன் கூடிய வீடு ஒன்றை உளவுப் பணிமனை ஆக்கிக் கொண்டார்.

தூதரகத்துடன் எந்நேரமும் தொடர்பு கொள்ளக் கூடிய வகையில் இவ்வீட்டுக்கும், தூதரகத்துக்கும் இடையில் மிகவும் நுட்பமான முறையிலான தொடர்பாடல் வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தன.

வீட்டு மொட்டை மாடியில் இருந்து புகைப்படங்கள், வீடியோக்கள் ஆகியவற்றைப் படம் பிடிக்கக் கூடியதாக இருந்தமை உளவு பார்க்கும் பணிக்கு மிக வசதியாக அமைந் திருக்கின்றது.

தூதரகத்தில் கடமையாற்றும் கனேடிய நாட்டைச் சேர்ந்த ஊழியர்களின் உதவி, ஒத்தாசைகளும் இந் நடவடிக்கைகளுக்கு கிடைக்கப் பெற்று இருக்கின்றன.

இலங்கையில் இறுதி யுத்தம் இடம்பெற்றுக் கொண்டிருந்த நாட்களில் அமெரிக்க தூதரகத்துக்கு முன்பாக நோர்வேயில் உள்ள புலம்பெயர் தமிழர் அமைப்புக்கள் ஆர்ப்பாட்டங்கள் நடத்தின.

அவ் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்களை இந் நபர் புகைப் படங்கள், வீடியோக்கள் ஆகியவற்றில் படம் பிடித்துக் கொண்டார். இதனிடையில் இவர் புலம்பெயர் தமிழர் அமைப்புப் பிரமுகர்களாலும், ஊடகவியலாளர்களாலும் கவனிக்கப்பட்டு விட்டார்.

இவர் ஏன் புலம்பெயர் தமிழர்களின் ஆர்ப்பாட்டங்களை புகைப் படம், வீடியோ பிடிக்கின்றார்? என்று ஊடகவியலாளர்கள் கண்காணிக்கத் தொடங்கி விட்டனர். கடந்த ஓரிரு நாட்களுக்கு முன் உண்மைகள் வெளிப்பட்டுவிட்டன.

ஆனால் வீடியோ, புகைப்படம் பிடித்தது அவரின் தனிப்பட்ட விடயம் என்கிறார் அமெரிக்க உளவாளியாக செயற்பட்ட நோர்வே நாட்டவர். நோர்வேயை பெரிதும் அதிர்ச்சிக்கு உள்ளாக்கி உள்ளது இச்சம்பவம்.(ச–5)

## கொழும்பு...

டத்தை தொடர்ந்த நிலையில் இவரை வலுக்கட்டாயமாகசிறைச்சாலைமருத்துவமனைக்கு அழைத்துச் சென்றஅதிகாரிகள் கைதியின் போராட்டத்தை கைவிடுமாறு வற்புறுத்தியும்அவர்அதற்கு சம்மதிக்காத நிலையில் தனது உண்ணாவிரதப் போராட்டத்தை நான்காவது நாளாகிய நேற்றும் தொடர்ந்தார்.

ஆனால் நேற்று தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி அவர்கள் வழங்கிய உறுதிமொழியை அடுத்து கைதியின் உண்ணாவிரதப் போராட்டம் கைவிடப்பட்டது. (ச–5)

## பெரும்பான்மை...

பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும்.

ஒற்றையாட்சி என்ற மாயைக்குள் அரசு தள்ளப்பட்டுள்ளது.மக்களின் அடிப்படை உரிமைகள் மீறப்படுகின்றன.

தமிழ் மக்களின் மீள்குடியமர்வில் அரசு அக்கறை காட்டவில்லை. சகல இன மக்களையும் சமனான நிலையிலேயே அரசு மதிக்க வேண்டும்.

தமிழ் மக்கள் தொடர்பில் ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தங்கள் பெயரளவிலேயே உள்ளன. தற்போது படையினரின் ஆட்சியே நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு உடனடியாக அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என அவர் கூறினார்.

இச்சந்திப்பில் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன், முன்னாள் மாநகர ஆணையாளர் சீ.வி.கே.சிவஞானம் ஆகியோரும் கலந்து கொண்டனர். இதேவேளை தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாக ஜேர்மன் பிரதிநிதிகள் தெரிவித்தனர். (ச–6)

யாழ்ப்பாணத்தில் முதல் முறையாக!
25க்கும் அதிகமான தொழில்வாய்ப்புக்களுக்கு உத்தரவாதமான ஊடகக் கற்கைநெறிகள்
➤ கணனியுடன் ஊடகவியல்
➤ வானொலி ஊடகவியல்
➤ தொலைக்காட்சி ஊடகவியல்
➤ பத்திரிகை பக்க வடிவமைப்பு
➤ கிராஃபிக் டிசைனிங் ➤ ஃபோட்டோகிராஃபி
டென்மார்க்கில் பயிற்சி பெற்ற ஊடகவியளாளரினால் நடாத்தப்படுகிறது
3 மாத கற்கைநெறி – 2 மாத பணியிடப் பயிற்சி
நாளை சனி காலை 11 மணிக்கு
வகுப்புகள் ஆரம்பம்
சிகரம் ஊடக இல்லம்
221, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்
தொ.பே: 021 300 80 60, நேரடி: 077 77 33 931
MEDIA

## புலிகளின்...

பாகவே மேற்படி தகவலை பிரான்ஸ் அரசாங்கம் தெரிவித்துள்ளது. இச் சிலை திறப்பு தொடர்பாக லா கோர்னியூவ்,மாநகர சபைக்கு பிரெஞ்சு அரசாங்கம் கடிதம் எழுதியுள்ளதாக இலங்கை வெளிவிவகார அமைச்சின் பொதுமக்கள் தொடர்பாடல் விவகார பணிப்பாளர் நாயகம் பந்துல ஜயசேகர தெரிவித்துள்ளார். (ச–5)

## யாழில்...

யணியின் முகாம் கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லம் அமைந்துள்ள காணியிலும், 512ஆவது படைத் தளம் பண்ணை மீனாட்சி அம்மன் வீதியிலும் அமைக்கப்படவுள்ளது.

இந்த இராணுவ முகாம்களை அமைப்பதற்கான தளபாட உபகரணங்களை சீனா வழங்கியுள்ளது.

இம் முகாம்கள் அமைக்கப்பட்டதும் தனியார் காணிகளை விட்டு படையினர் வெளியேறுவர் என தெரிவிக்கப்பட்டது. (ச–5)

## மாநகர...

பாணம் மாநகரசபை அனுமதி மறுத்துள்ளதாக இராணுவத் தரப்புத் தகவல்கள் தெரிவித்தன. யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் பிரமாண்டமான முறையில்தீபாவளி நிகழ்வுகளை நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

இந்நிலையில் அனுமதி மறுக்கப்பட்டதாகவும் அந்நிகழ்வு முற்ற வெளிக்கு மாற்றப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ச)

## புலிகள் பொதுமக்களை...

யுத்தத்தின் இறுதிக்கட்டத்தில் திருமதி இமெல்டா சுகுமார் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபராக கடமையாற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

அவர் தனது சாட்சியத்தில் கூறியதாவது, கடந்த வருடம் ஜனவரி 22–ம் திகதி வன்னியில் இருந்து வெளியேறி வவுனியாவுக்குச் சென்று அங்கிருந்து இறுதி யுத்தம் தொடர்பாக அவதானித்தேன்.விடுதலைப்புலிகள் இறுதிவரைக்கும் மக்களை வெளியேறவிடவில்லை.தமது பாதுகாப்பு கேடயங்களாக மக்களைப் பயன்படுத்தினர்.

இதேவேளை இறுதிவரைக்கும் விடுதலைப்புலிகள் பாஸ் வழங்கும் நடைமுறையையே கொண்டிருந்தனர்.

கடந்த 18 வருடங்களாக இருந்த அனுமதிப்பத்திர நடைமுறையால் மக்கள் சிரமங்களை எதிர்நோக்கினர். வெளி இடங்களுக்குச் செல்லும்மக்கள்இவ்வாறானபெரும்அசௌகரியங்களுக்கு உள்ளாகினர்.இவர்களில் நானும் ஒருவர்.

இங்கு தொடர்ந்து சாட்சியமளித்த இமெல்டா சுகுமார்,

இறுதிக் கட்ட யுத்தத்தின்போது, அவர்கள்மக்களோடு மக்களாக இருந்தார்கள். இதனால் இராணுவம் மக்களையும் விடுதலைப்புலிகளாக கருத வேண்டி ஏற்பட்டது.

தமிழீழ விடுதலைப்புலிகள் தமது அனுமதியின்றி அரச படையினரிடம் சரணடையச் சென்ற பொதுமக்களை புலிகள் சுட்டுக்கொன்றனர்.

ஆனால் இராணுவத்தினர் ஒரு போதும் சரணடைய வந்த மக்களைச் சுடவில்லை. இராணுவத்தினர் மக்களைச்சரணடையுமாறேகோரினார்கள்.

யுத்தத்தின் போது இராணுவத்தினர் மக்களுக்கு நிறைய உதவிகளை மேற்கொண்டனர். அத்தியாவசிய திணைக்களத்திடமிருந்து திருகோணமலையிலிருந்து முல்லைத்தீவுக்கு கப்பல் மூலம் பொருட்கள் அனுப்பப்பட்டன.

அப்போது கறுப்பு நிற வாகனமொன்றில் விடுதலைப்புலிகள் அக்கப்பலை காத்துக் கொண்டிருந்ததாக சிலர் என்னிடம் தெரிவித்தனர்.

அரசாங்கத்தால் அனுப்பப்பட்ட பொருட்களில் 80 சதவீதமானவை மக்களைச்சென்றடைந்தன. ஏனைய 20 சதவீதமானவை தொடர்பில் எனக்கு எதுவும் தெரியாது.

என்னுடன் முல்லைத்தீவில் வேலைசெய்த அதிகாரிகள் இருவர் வெளிவிவகார அமைச்சின் பரீட்சை எழுதுவதற்காக கொழும்பு செல்ல வேண்டியிருந்தது.

எனினும் கடைசிவரை அவர்கள் கொழும்பு செல்ல விடுதலைப்புலிகள் அனுமதிக்கவில்லை.

இது தொடர்பாக நான் வெளிவிவகார அமைச்சுக்கு அறிவித்தேன். எனினும் அவர்கள் இக்காரணத்தை ஏற்றுக் கொள்ளவில்லை.

ஒரு சந்தர்ப்பத்தில் நான்கூட யுத்தத்தின் காரணமாக காயப்பட்டுள்ளேன். எனினும் அது சிறு காயம். அப்போது ஊடகவியலாளர்கள் யாரும்என்னைப்பார்க்க அனுமதிக்கவில்லை.அச்சந்தர்ப்பத்தில் நான் காயப்பட்டபோது சிவப்பு நிறச்சட்டை அணிந்திருந்தேன்.

இதனால் தூரத்திலிருந்து என்னை கண்டவர்கள் நான் பாரிய காயத்துக்குள்ளானதாகத் தெரிவித்தனர்.

யுத்தத்தின் இறுதிவரை முல்லைத்தீவு வைத்தியசாலையில் நான்கு வைத்தியர்கள் அங்கு தொழிற்பட்டுக் கொண்டிருந்தனர். அவ்வைத்தியசாலையின் மூலம் ஏராளமான நோயாளிகளுக்கு சிகிச்சையளிக்கப்பட்டது.

யுத்தத்தின் போது மன்னார், கிளிநொச்சிப் பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் அனைவரும் முல்லைத்தீவு மாவட்டத்திற்கே வந்துசேர்ந்தனர். இச்சமயம் மிகவும் கஷ்டத்திற்கு மத்தியிலேயே நிர்வாகத்தை மேற்கொண்டேன்.

அரசாங்கம் மாத்திரமே உதவி செய்தது. அப்போது எந்தவொரு தொண்டர் நிறுவனங்களும்முல்லைத்தீவில் இயங்கவில்லை. ஆனால் ஐ.சி.ஆர்.சி.மாத்திரம் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டது.

இடம்பெயர்ந்து அகதிகளாக்கப்பட்ட மக்களில் 60 வீதமான மக்கள் மீள்குடியமர்த்தப்பட்டுள்ளனர். இன்னும் 30 வீதமான மக்கள் குடியேற்றப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என அவர் குறிப்பிட்டார். (ச–5)

## தெற்கில்...

வெடிக்க அரசாங்கம் இடமளிக்காது என்றும்அவர்திட்டவட்டமாகஅறிவித்தார்.

அமைச்சர் ஹெகலியவின் கூற்றை வைத்துப்பார்க்கும் போது அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் விரைவில் தடைசெய்யப்படலாம் என்று தெரியவருகின்றது.

பிரஸ்தாப மாணவர் அமைப்பு உடனடியாக தடைசெய்யப்பட வேண்டும் என்று அன்மையில் அமைச்சர் விமல் வீரவன்ச வலியுறுத்தியிருந்தமையும் இங்கு குறிப்பிடத் தக்கது. (ச–5)

## தனிப்பட்ட இனத்துக்கென...

இது தொடர்பில் மேலும் கருத்து தெரிவித்த அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல,

கர்தினாலாக திருநிலைப்படுத்தப்பட்டுள்ள மல்கம் ரஞ்சித் ஆண்டகையை நாம் மதிக்கின்றோம். அவரது கருத்து கூறும் உரிமையினையும் மதிக்கின்றோம். அதே போன்று ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ள நல்லிணக்க ஆணைக் குழுவினையும் நாம் அனைவரும் மதிக்கின்றோம்.

ஆனால் வடக்கு கிழக்கில் என்ன நடைபெறுகின்றது என்பதைக் காண்பிக்க கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகையை அங்கு அழைத்துச் செல்ல வேண்டும். அப்போது தான் அங்கு என்ன நடைபெறுகின்றது என்பதை அவரால் கண்கூடாக அறிய முடியும்.

எவ்வாறெனினும் இந்த நாட்டின் எந்தவொரு பிரதேசமும் எந்தவொரு தனி இனத்தவர்களுக்கோ அல்லது மதத்தவர்களுக்கோ ஒதுக்கப்படவில்லை.

அத்துடன் எந்தவொரு பிரதேசமும் இது சிங்களவரது, முஸ்லிம், கிறிஸ்தவர்களது அல்லது தமிழர்களது பிரதேசங்கள் என பிரிக்கப் படவில்லை.

அவ்வாறு பிரிவடையக் காரணமான பயங்கரவாதமும் தற்போது முற்றாக அழிக்கப்பட்டு நாடு ஐக்கியப் படுத்தப்பட்டுள்ளது. அதனால் அவ்வாறானதொரு நிலைமைக்கு தற்போது நாட்டில் இடமில்லை.

அத்துடன் நாட்டின் எந்தப் பிரதேசத்தில் வெற்றுக் காணிகள் காணப்படுகின்றனவோ அந்தப் பிரதேசங்களிலேயே அரசாங்கம் குடியேற்றங்களை அமைக்கும். அதற்கான நடவடிக்கைகளை எடுப்பதில் எந்தவித தவறும் இல்லை. இதற்காக சட்டமூலமொன்றை உருவாக்க வேண்டிய அவசியமுமில்லை.

அனைத்தின மக்களின் நலன்களைக் கருத்திற் கொண்டே அரசாங்கம் தமது வேலைத்திட்டங்களை முன்னெடுக்கின்றது. வடக்கு கிழக்கு உட்பட அனைத்துப் பிரதேசங்களிலுமுள்ள மக்களின் நலனைக் கருத்திற் கொண்டே இன்று கொத்மலை நீர்மின் திட்டமும் உருவாக்கப்பட்டுள்ளது.

பயங்கரவாதம் உட்பட பல்வேறு பிரச்சினைகளுக்கு அரசாங்கம் முகம் கொடுத்திருந்த நிலையிலேயே இந்த வேலைத்திட்டத்தை அரசாங்கம் ஆரம்பித்து அதனை இன்று வெற்றிகரமாக நிறைவுக்கு கொண்டு வந்துள்ளது.

இந்நிலையில் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை நல்லிணக்க ஆணைக்குழுவுக்கு முன்னால் சாட்சியமொன்றினை வழங்கியிருப்பாராயின், அதற்கான பதிலை குறித்த ஆணைக்குழு இறுதியில் வழங்கும். அரசாங்கத்தின் நடவடிக்கைகள் குறித்து மேற்படி ஆணைக்குழுவும் அவதானத்துடன் இருக்கின்றது என்பதை அனைவரும் நினைவில் வைத்திருப்பது நன்று. (ச–5)

## பொன்சேகாவை...

றார்கள். ஆயினும்அவர்களின்நடத்தையில் சந்தேகம் கொண்ட பொன்சேகாவின் ஆதரவாளர்கள் மர்ம வாலிபர்களை சரத் பொன்சேகாவின் அருகில் நெருங்க விடாத வண்ணம் பலத்த ஆட்சேபத்தை வெளிக்காட்டினர்.

அது மாத்திரமின்றி காதில் கடுக்கனும் கைகளில் வளையல் போன்றவையும் அணிந்து ஒருவித தோற்றத்துடன் காட்சியளித்த பிரஸ்தாப வாலிபர்கள் குழு ஊடகவியலாளர்களின் கடமைக்கும் இடைஞ்சல் விளைவித்துள்ளார்கள்.

ஊடகவியலாளர்கள் சரத் பொன்சேகாவை நெருங்க முற்பட்ட சமயங்களில் எல்லாம் மர்ம வாலிபர்கள் குழு வழியை அடைத்துக் கொண்டு நின்றதுடன் தங்களைத் தவிர யாரும் சரத் பொன்சேகாவை அணுகாத வண்ணம் பார்த்துக் கொண்டார்கள்.

ஆயினும் சரத் பொன்சேகாவின் ஆதரவாளர்களிடம் இருந்து மர்ம வாலிபர்கள் தொடர்பில் வெளிப்பட்ட எதிர்ப்பு வலுவடையவே, பொலிஸார் ஏதோ சைகை செய்ய அந்த வாலிபர்கள் குழு நொடியில் நீதி மன்ற வளாகத்திலிருந்து மாயமாக மறைந்துவிட்டதாக சம்பவத்தை நேரில் கண்ட ஒருவர் தெரிவித்துள்ளார்.

பிரஸ்தாப சம்பவம் தொடர்பில் சரத் பொன்சேகா கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அர்ஜுன ரணதுங்காவை தொடர்பு கொண்ட போது, நாங்கள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்ற போதிலும் எங்களைக் கூட உடம்புவரை பரிசோதித்தபின்பே சரத் பொன்சேகாவின் அருகில் செல்ல அனுமதிக்கின்றனர்.

ஆயினும் இன்று அந்த மர்ம வாலிபர்கள் தொடர்பில் பொலிஸார் எதுவித நடவடிக்கையும் மேற்கொள்ளாது அசிரத்தையாக செயற்பட்டனர் என்றார். (ச–5)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.11.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.